பக்கங்கள்: முப்பத்துஇரண்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 15 வியாழக்கிழமை (28.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 153


02 புனேயை விரட்டியது சென்னை


03 பர்டோலி தோல்வி


16 உதைபந்தாட் கலாசாரத்தை விழுங்கியது கிரிக்கெட்


21 சவாலாக விளங்கும் யுத்தக் குற்றம்


25 போர்குற்றக் அறிக்கை இந்திய நாடாளுமன்றில்

## எமது துயரங்களை மனதில் கொண்டு இந்தியா செயற்பட்டால் சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைக்குப் பலமாக இருக்கும்

### தந்தை செல்வா நினைவு தின நிகழ்வில் மாவை

கொழும்பு, ஏப்.28

"தமிழர்களாகிய நாம் பட்ட துன்பங்களை எமது அயல் நாடான இந்தியா மனதிலே கொண்டு எமக்கு ஆதரவுடன் செயற்படுமானால், தமிழ் மக்களாகிய எமது விடுதலைக்கு சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுப்பதற்கு மிகவும் பலமாக இருக்கும்."

- இப்படி தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் தந்தை செல்வாவின் 34ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரின் உரையை அடுத்து கட்சிச் செயலாளர் மாவை சேனாதிராஜா உரை நிகழ்த்தினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் மக்கள் இன்று கொடுமைகளை அனுபவித்து, இழப்புகளைச் சந்தித்து மிகவும் மனம் நொந்து

(29 ஆம் பக்கம் பார்க்க)

# ராஜதந்திரப் போர் ஆரம்பம்

## வெளிநாட்டுத் தூதுவர்களை இன்று சந்திக்கிறார் பீரிஸ்



**கொழும்பு, ஏப்ரல் 28**

**ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலாளரால், இலங்கையில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய்ந்து ஆலோசனை வழங்கவென பொதுச் செயலாளர் பான் கீ - மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை, இலங்கை அரசு போர்க் குற்றங்களில் ஈடுபட்டுள்ளது என்று தெரிவித்திருக்கும் நிலையில் ஐ.நா. மற்றும் அதன் பொதுச் செயலாளருக்கு எதிரான ராஜதந்திரப் போரை கொழும்பு அரசு ஆரம்பித்துள்ளது.**

இதன் ஒரு கட்டமாக உலக நாடுகளின் தூதர்களை இன்று சந்திக்கும் வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ், அறிக்கை குறித்த அரசின் நிலைப்பாட்டை விளக்குவார்.

வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரின் போது பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதற்கு இலங்கை அரசே முக்கிய பொறுப்பாளி என்று நிபுணர் குழு அறிக்கை குற்றஞ்சாட்டுகிறது. அரசு செய்தவை என்று அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள 5 குற்றங்களில் சில சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டால், அவை போர்க் குற்றங்களாகக் கொள்ளத்தக்கவை என்றும் நிபுணர் குழு கூறியுள்ளது.

இது தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று நிபுணர் குழு சிபாரிசு செய்துள்ளது. ஆனால் அப்படியான ஒரு விசாரணைக்கு உத்தரவிடும் அதிகாரம் தனக்கு இல்லை என்று ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ -மூன்

(29 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புச் சபையில் நிபுணர் குழு அறிக்கை

கொழும்பு, ஏப்.28

இலங்கையின் யுத்தக்குற்றங்கள் தொடர்பான நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நேற்று ஆராயப்படவிருந்தது என்று ஐ.நாவின் பேச்சாளர் மார்டின் நெஸ்கி கூறினார்.

இந்த அறிக்கை தொடர்பாக இலங்கை அரசின் உத்தியோகபூர்வ பதிலை ஐ.நா. எதிர்பார்த்திருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

நியூயோர்க்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்

(29 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாநகர சபையில் ஊழல், மோசடிகள்; பகிரங்க விவாதத்துக்கு மேயர் தயாரா?

### சவால் விடுகிறார் உறுப்பினர் விந்தன்

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ். மாநகர சபையில் இடம் பெற்று வரும் ஊழல், மோசடிகள் தொடர்பாக பகிரங்க விவாதம் ஒன்றுக்கு வரும்படி யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவுக்கு சவால் விடுகின்றார் யாழ். மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் விந்தன் கனகரத்தினம். நேற்று மாலை யாழ்பாடி விருந்தினர் விடுதியில் இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்த பகிரங்க சவாலை விடுத்தார்.

மாநகர சபை முதல்வரின் அடாவடித் தனங்கள், சட்டவிரோத செயற்பாடுகள், ஊழல் மோசடிகள் தொடர்பாக சகல

(29 ஆம் பக்கம் பார்க்க)

## அடாவடிகளைச் சகிக்க முடியவில்லை மேயரைச் சாடுகின்றார் நிஷாந்தன்

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ். மாநகர முதல்வரின் அடாவடித்தனம், தன்னிச்சையான செயற்பாடு, தான்தோன்றித்தனமான தீர்மானங்கள் என்பவற்றை சகிக்க முடியவில்லை. இது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட ஈ.பி.டி.பி. அமைப்பாளர்களுக்கு செய்த முறைப்பாடுகள் அனைத்தும் 'செவிடன் காதில் ஊதிய சங்கு' போலாகிவிட்டன. இதனால் ஏற்பட்ட விரக்தியே ஆளும் தரப்புக்கு அளித்த ஆதரவையும் விலக்கிக் கொள்ள நேர்ந்தது என்றார் ஆளும் கட்சி உறுப்பினர் சு.நிஷாந்தன்.

நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்

(29 ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர் குழு அறிக்கை அமெரிக்கா வரவேற்பு

நியூயோர்க், ஏப். 28

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ. நா. நிபுணர் குழுவின் பரிந்துரைகளை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்களில் தவறிழைத்தவர்கள் தண்டனைகளிலிருந்து தப்பிக்கொள்ளக் கூடாது என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடாகும் என்று ஐ. நா. சபைக்கான அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதி சூஸன் ரைஸ் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமைகள், நீதி, நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் ஆகிய செயற்பாடுகளை மேம்படுத்தும் விடயத்தில் நிபுணர் குழு அறிக்கை பெறு

(29 ஆம் பக்கம் பார்க்க)

## பான் கீ-மூனின் அறிக்கையை ஏற்க முடியாது குப்பைத் தொட்டியில் தான் வீச வேண்டிவரும்

### அமைச்சர் அமுனுகம காட்டம்



கொழும்பு, ஏப்.28

அரசு என்ற ரீதியில் பான் கீ - மூனின் அறிக்கையை ஏற்றுக்கொள்ளமாட்டோம். எனவே அறிக்கையை குப்பைத் தொட்டியிலேயே வீச வேண்டி ஏற்படும்.

-இவ்வாறு கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐ. நா. செயலாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை தொடர்பான அறிக்கையை நாம் நிராகரிக்கின்றோம். இது சட்டவிரோதமானது. விசாரணை செய்ய செயலாளர் நாயகத்துக்கு அனுமதி வழங்கியவர் யார்? இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு உத்தியோகபூர்வமாகக் கோரியவர் யார்?

இலங்கை ஜனாதிபதியோ, மக்களோ, வேறு நிறுவனங்களோ விசாரணை நடத்துமாறு கோரவில்லை. சுயாதீனமாக இவ்வாறான தொரு நடவடிக்கையை

(29 ஆம் பக்கம் பார்க்க)

### 'தருஸ்மான் அறிக்கை' என்கிறது அரசு

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையை 'தருஸ்மான் அறிக்கை' என்றே அமைக்க வேண்டும் என்று நேற்று அரசு தெரிவித்துள்ளது.

ஐ.நா. நிபுணர் குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்று கொழும்பில் ஏற்பாடாகியிருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே

(29 ஆம் பக்கம் பார்க்க)



# புனேயை விரட்டிக் கலைத்தது சென்னை

-டிலீப்-

சிறப்பான பந்து வீச்சு. கலக்கலான துடுப்பாட்டம். வெற்றியை இலகுவாய் எட்டியது சென்னை. பழி தீர்க்கக் களம் வந்த புனே ஏமாற்றத்துடன் வெளியேற்றம். எட்டு விக்கெட்டுக்களால் சென்னை எட்டிப் பிடித்தது வெற்றியை.

ஐ.பி.எல்லின் 31 ஆவது ஆட்டம் நேற்று. நடந்தது மும்பையில். மோதின சென்னை சுப்ப கிங்ஸ் - புனே வாரியர்ஸ். வெற்றி நாணயச் சுழற்சியில் புனேக்கு. முடிவு துடுப்பெடுத்தாட. களத்துக்கு வந்தனர் ரைடர் - மிஷ்ரா ஜோடி. ஓட்டங்கள் குவிக்க முடிய வில்லை. சென்னையின் பந்து வீச்சு அபாரம். விக் கெட்டுக்கள் வீழ்ந்தன விரைவாய். ஓட்டங்கள் குவிப்பதற்கு இடையில்.

மீள முடியாதவாறு மடிய வைத்தது சென்னை. அடுத்தடுத்து வேகமாய் இழந்தது விக்கெட்டுக் களை. ரைடர் 19 ஓட்டங்களுடன் பொலஞ்சரின் பந்தில் வெளியேற்றம். மொனிஷ் மிஷ்ரா ஆட்டம் முடிந்தது 2 ஓட்டங்களுடன். மனிஷ் பாண்டி 10 ஓட்டங்கள். மன்ஹாஸ் பெறவில்லை ஓட்டம். வீழ்த்தினார் குலசேகர. 7.2 ஓவர்களில் எட்டப் பட்டது 41 ஓட்டங்கள். வீழ்த்தப்பட்டது நான்கு விக்கெட்டுக்கள்.

யுவராஜ் சிங் - உத்தப்பா இணைவு. மீளத் தொடங்கியது புனேயின் ஆட்டம். அதிரடி கள் தொடங்கியது. உத்தப்பா அஸ்வினின் பந்தில் விளாசினார் சிக்ஸர்கள். விட வில்லை அஸ்வின் அவரை. முடித்து வைத்தார் 31 ஓட்டங்களுடன். யுவ ராஜ் - மார்ஷ் இணைந்தனர். தொடர்ந் தது ஆட்டம்.

அதிரடிகள் அடிக்கடி காட்டினார் யுவராஜ். ஏறியது புனேயின் ஓட்ட வேகம். சிறப்பான ஆட்டம் தொடர்ந்தார் யுவராஜ். மறு முனையில் மார்ஷ்ஷின் ஆட்டம் 15 ஓட்டங்களுடன் வந்தது முடிவுக்கு. பொலஞ்சர் முடித்து வைத்தார் அவரது ஆட்டத்தை.

இருந்தும் தொடர்ந்தது யுவராஜ்ஜின் ஆட்டம். நெருங்கியது ஆட்டத்தின் இறுதிக்கட்டம். தொடங்கியது யுவராஜ்ஜின் அதிரடி. எட்டினார் அரைச்சதம். 43 பந்துகளில் அடித்தார் 62 ஓட்டங்கள். 4 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள் அவரின் அதிரடியில் அடக்கம்.

இருபது ஓவர்களில் எட்டப்பட்டது 141 ஓட்டங்கள். இழந்தது 6 விக்கெட்டுக்கள். பந்து வீச்சில் பொலஞ்சர் கைப்பற்றினார் 3 விக்கெட்டுக்கள். வீசியது நான்கு ஓவர்கள். கொடுத்தது 21 ஓட்டங் கள்.

இலகுவான இலக்கை விரட்டியது சென்னை. புனே சளைக்காது கலக்கியது பந்து வீச்சில். ஓட்டங்கள் எடுப்பதற்கு திணறியது சென்னை. ஓட்டமற்ற ஓவராக முடிந்தது முதலாவது ஓவர். இரண் டாவது ஓவரில் இரண்டு ஓட்டங்கள். மெதுவாய் நகர்ந் ஆட்டத்தில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹஸியின் விக்கெட் வீழ்ச்சி. மறுமுனை யில் முரளி விஜய் அளவான அதிரடி. பத்திரிநாத் தொடங்கினார் அதி ரடியாட்டம். ஏறியது சென்னையின் ஓட்டம். முரளி விஜய் இடை யிடையே காட்டினார் அதிரடி. நீண்ட இடைவெளியில் பிரிக்கப்பட் டது விஜய்யின் விக்கெட். வந்தார் ரெய்னா. பந்துகளும் வெற்றிக் குத் தேவையான ஓட்டங்களும் சமாந்தரப் பயணம். ரெயிலரின் 18 ஆவது ஓவரில் பறந்தன சிக்ஸர்கள். சென்னை நெருங்கியது வெற் றியை.

பத்திரிநாத் அதிரடியாய் கடந்தார் அரைச்சதம். 44 பந்துகளில் பெற்றார் 63 ஓட்டங்கள். ரெய்னா 25 பந்துகளில் பெற்றார் 34 ஓட் டங்கள். இறுதியில் மூன்று பந்துகள் மீதமிருக்கையில் எட்டு விக் கெட்டுக்களால் எட்டப்பட்டது வெற்றி. பந்து வீச்சில் பலவீனம் புனே. பொலஞ்சர் தெரிவானார் ஆட்டநாயகனாய்.

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 06 | 05 | 01 | 0 | 0 | + 0.707 | 10 |
| சென்னை சூப்ப கிங்ஸ் | 07 | 04 | 03 | 0 | 0 | + 0.143 | 08 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 07 | 03 | 03 | 0 | 1 | - 0.282 | 07 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 07 | 03 | 03 | 0 | 1 | - 0.357 | 07 |
| கொல்கத்தா நைட்ரைடர்ஸ் | 06 | 03 | 03 | 0 | 0 | + 0.393 | 06 |
| டெக்கான் சார்ஜஸ் | 07 | 03 | 04 | 0 | 0 | + 0.194 | 06 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 05 | 03 | 02 | 0 | 0 | - 0.095 | 06 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 07 | 03 | 04 | 0 | 0 | - 0.696 | 06 |
| புனே வாரியர்ஸ் | 06 | 02 | 04 | 0 | 0 | + 0.138 | 04 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 06 | 02 | 04 | 0 | 0 | - 0.230 | 04 |



# சர்மாவின் வேகத்தில் சரிந்தன விக்கெட்டுக்கள்

-அருண்மொழி-

இசாந் சர்மாவின் சிறப்பான பந்து வீச்சினால் கொச்சி அணி சுருண்டது. அபார வெற்றியை படைத்தது டெக் கான் சார்ஜர்ஸ். கொச்சி அணியின் ஆறு வீரர்கள் ஓட்ட மெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

ஐ.பி.எல் போட்டியின் 32 ஆவது ஆட்டம் கொச்சியில் நேற்று இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொச்சி அணித்தலைவர் ஜெயவர்த்தன டெக்கான் சார்ஜர்ஸ் அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார்.

இதன்படி களமிறங்கிய டெக்கான் அணி ஆரம்பத்தி லேயே விக்கெட்டுக்களை இழந்தது. ஆர்.பி சிங் முன்னணி வீரர்களை ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் பவிலியனுக்கு அனுப்பினார். இதனால் அதிரடியாக ஆட முடியாத நிலையில் திணறியது டெக்கான் அணி. 20 ஓட்டங்களில் 3 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

சங்கக்கார - கம்ரான் வைட் ஆகியோர் நான்காவது விக் கெட்டுக்காக இணைந்தனர். இருவரும் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேகரித்தனர். சங்கக்கார வேகமாக ஓட்டங் களை குவித்தார். இவர்களது இணைப்பை பிரிப்பதற்காக மஹேல ஜெயவர்த்தன பல வியூகங்கள் வகுத்தும் வாய்க்க வில்லை எதுவும்.

50 ஓட்டங்கள் இணைப்பாட்டம் கடந்தது. 31 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வைட் வினய்குமாரின் பந்து வீச்சில் ஆட்ட மிழந்தார். இருவரும் நான்காவது விக்கெட்டுக்கு இணைப்பாட் டமாக 90 ஓட்டங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. அதிரடியாக ஆடிய அணித்தலைவர் சங்கக்கார 47 பந்துகளில் 65 ஓட்டங்களை அடித்தெடுத்தார். பின்வரிசை வீரர்கள் பெரிதாக சோபிக்காத நிலையில் இறுதியில் 20 ஓவர்களில் 129 ஓட்டங்களை ஏழு விக்கெட்டுக்களை இழந்து பெற்றுக்கொண்டது.

பந்து வீச்சில் வினய்க்குமார் மூன்று விக்கெட்டுக்களையும், ஆர்.பி சிங் இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்ட களமிறங்கியது கொச்சி. முதலாவது ஓவரிலேயே அதிர்ச்சி கொடுத்தார் ஸ்ரெய்ன். அதிரடி ஆட்டக்காரர் பிரென் டன் மக்கலம் ஓட்டமெதனையும் பெறாது வெளியேறினார். அடுத்த ஓவரில் இசாந் சர்மா மூன்று விக்கெட்டுக் களைச் சரித்தார். பார்த்திவ் பட்டேல், கொமிஸ், பிரெட் ஹொஜ் ஆகியோர் ஓட்டங் கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினர். மீண்டும் தனது இரண்டாவது ஓவரை வீசிய இசாந் இரண்டு விக் கெட்டுக்களை கைப்பற்றினார். நான்கு ஓவர்களில் 11 ஓட்டங் களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்தது கொச்சி அணி. அடுத்து இணைந்த ஜடேஜா - திஸ்ஸர பெரேரா ஆகியோர் சரிவிலிருந்து



அணியை மீட்க கடுமையாகப் போராடி னர். முடிந்தவரை சிறப்பான ஆட் டத்தை வெளிப்படுத்தினர். ஏழாவது விக்கெட்டுக்காக 36 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் பெரேரா 22 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்து வெளியேறி னார். மறுமுனையில் ஜடேஜா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். வினய்குமாரும் சிறப்பாக ஆடி ஓட்டங் களைக் குவித்தார். இருந்தும் டெக் கானின் சிறப்பான பந்து வீச்சுக்கு முன் னால் நீண்ட நேரம் தாக்குப்பிடிக்க முடியவில்லை. 73 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஜடேஜா 23 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார். அடுத்த ஓவரி லேயே வினய்க்குமார் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆர்.பி சிங் ஓட்டமெதனை யும் பெறாத நிலையில் ஆட்ட மிழந்தார்.

இறுதியில் 55 ஓட்டங்களால் டெக் கான் சார்ஜஸ் அபார வெற்றியைப் பெற் றுக் கொண்டது. பந்து வீச்சில் இசாந் சர்மா மூன்று ஓவர்கள் பந்து வீசி 12 ஓட் டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக் களை கைப்பற்றினார். ஸ்ரெய்ன் 16 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட் டுக்களை வீழ்த்தினார். ஆட்ட நாயக னாக இசாந் தெரிவானார்.

## இன்றைய ஆட்டம்

- டெல்லி டெயாடெவில்ஸ் எதிர் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- சச்சின் – மும்பை இந்தியன்ஸ் (6 ஆட்டங்கள் 269 ஓட்டங்கள்)
- வல்த்தாட்டி – கிங்ஸ்லெவன் (5 ஆட்டங்கள் 261 ஓட்டங்கள்)
- வோர்னர் – டெல்லி டெயாடெவில்ஸ் (6 ஆட்டங்கள் 236 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை இந்தியன்ஸ் (6 ஆட்டங்கள் 16 விக்கெட்டுக்கள்)
- வோர்ன் – ராஜஸ்தான் றோயல்ஸ் (6 ஆட்டங்கள் 9 விக்கெட்டுக்கள்)
- மிஷ்ரா – டெக்கான் சார்ஜஸ் (7 ஆட்டங்கள் 9 விக்கெட்டுக்கள்)

DLF INDIAN PREMIER LEAGUE

# மகிழ்ச்சியை வெளிப்படுத்த தெரியவில்லை - யுவராஜ்




உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் டோனி ஆட்டமிழக்காமல் 91 ஓட்டங்கள் குவித்ததே அவரது வாழ்நாளின் சிறந்த ஆட்டம் என்று இந்திய அதிரடி ஆட்டக்காரர் யுவராஜ்சிங் பாராட்டியுள்ளார்.

உலகக் கிண்ண அணியில் இடம் பெற்றிருந்த வீரர்களுக்கு 'ரீபோக்' நிறுவனம் சார்பில் மும்பையில் நேற்று முன்தினம் பாராட்டு விழா நடைபெற்றது. விழாவில் யுவராஜ்சிங் கூறியதாவது:- உலகக் கிண்ணத்தை வென்ற போது எங்களின் கனவு நனவானது. அப்போது என்ன செய்வது என்றே தெரியவில்லை என்று முன்பு பேசிய டோனி கூறினார்.

வெற்றி பெற்றதும் நான் டோனி மீது பாய்ந்து அவரைக் கட்டி அணைத்தேன். 28 ஆண்டுகளுக்குப் பிறகு கிண்ணத்தை வென்றது எங்கள் கிரிக்கெட் வாழ்க்கையில் மிகச் சிறப்பானது. வெற்றி பெற்ற போது நாங்கள் அடைந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தத் தெரியவில்லை. கடந்த ஆண்டு என் வாழ்வில் மறக்க முடியாத ஆண்டு.

நான் தொடர் காயத்தால் அவதிப்பட்ட போதும், அணியின் சக வீரர்களும், நாட்டு மக்களும் எனக்கு ஆதரவாக இருந்தனர். நான் கடுமையாக உழைத்ததால் சரியான நேரத்தில் சிறப்பாக ஆட முடிந்தது என்றார். பாராட்டு விழாவின் போது வீரர்கள் அனைவருக்கும் நினைவுப் பரிசாக தங்க முலாம் பூசப்பட்ட 'ரீபோக்' துடுப்பாட்ட மட்டை வழங்கப்பட்டது. (15)

# இந்திய அணிக்கு பயிற்சியாளர் நியமனம்

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக சிம்பாப்வே நாட்டைச் சேர்ந்த டங்கன் பிளெட்சர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஏற்கனவே இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக பணியாற்றியவர் ஆவார். இது வரை இந்திய அணியின் பயிற்சியாளராக வெற்றிகரமாகச் செயற்பட்டு வந்த ஹரி கிர்ஸ்டனுக்குப் பதிலாக பிளெட்சர் பணியாற்றவுள்ளார்.

இதுகுறித்து கிரிக்கெட் வாரிய செயலாளர் சீனிவாசன் கூறுகையில், 2 ஆண்டு காலத்திற்குப் பயிற்சியாளராக பிளெட்சர் நியமிக்கப்பட்டுள்ளார் என்றார். நியூசிலாந்து முன்னாள் அணித்தலைவர் ஸ்டீபன் பிளமிங், முன்னாள் சிம்பாப்வே வீரர் அண்டி பிளவர் ஆகியோரும் பயிற்சியாளர் போட்டியில் இருந்தனர். இருப்பினும் பிளெட்சருக்கு இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அதே சமயம், பிளெட்சரின் பெயரை கிர்ஸ்டன் தான் பரிந்துரைத்ததாகவும் ஒரு தகவல் கூறுகின்றது. இந்திய கிரிக்கட் அணி ஜூன் 4 ஆம் திகதி முதல் ஜூலை 10 ஆம் திகதி வரை மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது.

இந்தப் போட்டித் தொடருக்கு முன்பாகவே இந்திய அணிக்குப் புதிய பயிற்சியாளர் நியமிக்கப்பட்டுள்ளார். (15)

# முன்னணி வீரர்கள் வேண்டும் - ஐ.சி.சி.

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி மே 28 ஆம் திகதி முடிகின்றது. இந்த போட்டி முடிந்த பிறகு இந்திய அணி மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டி, ஒரே ஒரு 20 ஓவர் போட்டி ஆகியவற்றில் விளையாடுகின்றது.

இந்த தொடர் ஜூன் 4 ஆம் திகதி தொடங்குகின்றது. உலகக் கிண்ண போட்டி, ஐ.பி.எல் என்று தொடர்ந்து போட்டிகளில் விளையாடிவருவதால் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடரில் ஓய்வு தருமாறு இந்திய அணியின் முன்னணி வீரர்கள் கேட்டுள்ளனர். அணித்தலைவர் டோனி, டெண்டுல்கர், சேவாக், ஹர்பஜன்சிங், சகீர்கான், கம்பீர் ஆகிய முன்னணி வீரர்கள் ஓய்வு எடுக்க விருப்பம் தெரிவித்து இருந்தனர்.

இது தொடர்பாக அவர்கள் கிரிக்கெட் வாரியத்துக்கு ஏற்கனவே கடிதம் எழுதி இருந்தனர். முன்னணி வீரர்களுக்கு ஓய்வு கொடுப்பது தொடர்பாக கிரிக்கெட் வாரியம் இன்னும் எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் மேற்கிந்தியத்தீவுகளுடனான தொடரில் இந்திய அணியின் முன்னணி வீரர்கள் விளையாடவேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) விருப்பம் தெரிவித்து உள்ளது. இது தொடர்பாக ஐ.சி.சி.யின் தலைமை நிர்வாக அதிகாரி ஹாரூன் லார்கட் கூறியதாவது:-

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான தொடரில் இந்திய அணியின் முன்னணி வீரர்கள் ஆடாமல் இருப்பது சரியல்ல. இதனால் கிரிக்கெட்டின் தன்மை பாதிக்கப்படும். முழுப்பலம் பெற்ற இந்திய அணி ஆடவேண்டும். ஒன்று அல்லது 2 வீரர்கள் ஓய்வு கேட்டால் பரவாயில்லை. 5 அல்லது 6 வீரர்கள் விளையாடமல் ஓய்வு கேட்பது சரியில்லை. - என்றார். (15)

# தூக்கி எறியப்பட்டார் கல்மாடி



கொமன்வெல்த் ஊழல் புகார் தொடர்பாக கைது செய்யப்பட்ட சுரேஷ் கல்மாடி, இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்டார். புதிய தலைவராக வி.கே.மல்கோத்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நடந்த கொமன்வெல்த் போட்டியின் ஒருங்கிணைப்புக் குழு தலைவராக கல்மாடி செயல்பட்டார். அப்போது, பல்வேறு வகைகளில் ஊழல் செய்ததாக இவர் மீது, 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இதன் அடிப்படையில் நேற்று முன்தினம் கல்மாடி, கைது செய்யப்பட்டார்.

கல்மாடியின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு (2012) வரை உள்ள நிலையில், தலைவர் பதவியில் இருந்து நேற்று அதிரடியாக நீக்கப்பட்டார். இவருக்குப் பதில் தற்போது துணைத்தலைவராக உள்ள வி.கே.மல்கோத்ரா, தற்காலிக தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இது குறித்து மல்கோத்ரா கூறுகையில், 'சர்வதேச ஒலிம்பிக் சங்க விதிகளின் படி, தலைவர் பதவி காலியாக இருக்கக்கூடாது. இதனால், தற்காலிக தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டேன். பொதுச் செயலர் ரந்திர் சிங் டெல்லி வந்தபின், அவரைக் கலந்து ஆலோசித்து, விரைவில் நிர்வாகக்குழு கூட்டத்தைக் கூட்ட உள்ளோம். அதில் அனைத்து பிரச்சினைகளும் விவாதிக்கப்படும்,' என்றார். (15)

# வேதனையில் வெதும்புகின்றார் சேவாக்

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் டெல்லியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் டெல்லி அணியை வீழ்த்தியது. முதலில் விளையாடிய டெல்லி அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 160 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் ஆடிய பெங்களூர் அணி 19.3 ஓவரில் 7 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 161 ஓட்டங்கள் எடுத்தது. பெங்களூர் அணி பெற்ற 3 ஆவது வெற்றியாகும். இதன் மூலம் 7 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்துக்கு முன்னேறியது.

டெல்லி அணி 4 ஆவது தோல்வியைத் தழுவியது. 4 புள்ளிகளுடன் அந்த அணி 9 ஆவது இடத்தில் உள்ளது. இந்த தோல்வி குறித்து டெல்லி அணித் தலைவர் சேவாக் கூறியதாவது:-

எங்களது விருப்பத்துக்கு ஏற்றவாறு ஆடுகளம் அமைய வில்லை. ஆனாலும் எங்களது தோல்விக்கு மோசமான பந்து வீச்சே காரணம். இந்த ஆடுகளத்தில் துடுப்பாட்டம் செய்வது சிரமமானது. பந்தை தூக்கி அடிப்பது கடினமாக இருந்தது. முதல் 6 ஓவரில் பந்து வீச்சாளர்கள் ஓட்டங்களை வாரி கொடுத்து விட்டனர். பின்னர் மோர்னி மோர்கல், சிறப்பாக பந்து வீசினார். ஆட்டத்தின் இறுதிப் பகுதியில் சரியாக பந்து வீசப்படவில்லை.

இந்த தோல்வியால் டெல்லி அணிக்கு கூடுதல் நெருக்கடி ஏற்பட்டு இருப்பது உண்மைதான். இனிவரும் ஆட்டங்களில் சிறப்பாக ஆடுவோம் - என்றார்.

வெற்றி குறித்து பெங்களூர் அணித் தலைவர் வெற்றோரி கூறியதாவது:-

ஹோக்லி - கெயில் ஜோடி 82 ஓட்டங்கள் சேர்த்தது ஆட்டத்தின் முக்கிய அம்சமாகும். ஹோக்லியின் ஆட்டம் மிகவும் அபாரமாக இருந்தது. 8-ஆவது விக்கெட்டுக்கு என்னுடன் இணைந்த செய்யது முகமது பொறுப்புடன் ஆடினார். எங்களது பந்து வீச்சு மிகவும் நன்றாக இருந்தது - என்றார். (15)




# பிரான்ஸின் பர்டோலி தோல்வி



உலக பெண்கள் ரென்னிஸ் அரங்கில் 13 ஆவது இடத்தில் உள்ள பிரான்ஸ் வீராங்கனை மாரியோ பர்டோலி பார்சிலோனா பெண்கள் திறந்த போட்டியில் நேர் செட் கணக்கில் அதிர்ச்சித் தோல்வியைத் தழுவினார்.

இந்த தோல்வி, பிரெஞ்சு திறந்த கிராண்ட் சலாம் போட்டிக்கு அவர் தயாராவதில் சரிவை ஏற்படுத்தி உள்ளது. முதல் சுற்று ஆட்டத்தில் ஆஸ்திரியாவின் மக்டலினா ரைபரிகோவா 6-4 6-1 செட் கணக்கில் வீழ்த்தினார். வெற்றி வாகை சூடிய மக்டலினா உலக ரென்னிஸ் அரங்கில் 72 ஆவது இடத்தில் இருப்பவர் ஆவார்.


பார்சிலோனா பெண்கள் திறந்த போட்டியில் முதன்மை நிலை வீராங்கனை என்ற அடிப்படையில் பர்டோலி விசேட அனுமதியுடன் ஆட வந்தார். ஆனால் மிக மோசமான ஆட்டத்தைக் கையாண்டு தோல்வியைத் தழுவினார்.

ருமேனியாவைச் சேர்ந்த 2 ஆம் நிலை வீராங்கனையான அலெக்ஸாண்ட்ரா துல்கெரு ஸ்லோவேகியா வீராங்கனை சுசானா குசோவாவை தோற்கடித்தார். சுசானா 1-6 0-5 என்ற கணக்கில் பின்னடைவு பெற்ற நிலையில் தசை பிடிப்பு காயம் காரணமாக விலகினார்.

6 ஆம் நிலை வீராங்கனையான இத்தாலியின் ரொபர்டா வின்சி 6-2 6-3 செட் கணக்கில் ஸ்பெயினின் சில்வியா சோலனா எஸ்பினோசாவை வென்றார். ரொபர்டா 2009 ஆம் ஆண்டில் பார்சிலோனா பெண்கள் திறந்த போட்டியில் சாம்பியன் ஆனவர். கடந்த ஆண்டு இங்கு 2 ஆவது இடம் பெற்றிருந் (15)

உதயன்
28 ஏப்ரல் 2011 வியாழக்கிழமை

# 4 அடுக்கு பாதுகாப்புக்கு மத்தியில் பாபாவின் திருவுடல் நேற்று நல்லடக்கம்



## யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் சாய் பாபாவுக்கு நேற்றுப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஏப்.28

ஸ்ரீ சத்திய சாய் பாபாவின் இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றதை யொட்டி யாழ். மாவட்டத்தில் 33 இடங்களில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாய் இல்லங்களிலும் நேற்றைய தினம் விசேட பிரார்த்தனை வழிபாடுகள் இடம்பெற்றன.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பாக அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாய் இல்லத்திலும் இந்த வழிபாடுகள் இடம் பெற்றன.

கடந்த 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணியளவில் ஸ்ரீ சத்ய சாய் பாபா சமாதியடைந்தார். அன்றைய தினம் முற்பகல் 11 மணியளவிலிருந்து நேற்றைய தினம்வரை இரவு பகலாக இந்த இல்லத்தில் பிரார்த்தனை வழிபாடுகள் இடம்பெற்றன.

அங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நேற்றைய தினம்வரை சுமார் 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பிரார்த்தனை நிகழ்வில் கலந்துகொண்டனர்.



புட்டபர்த்தியில் இடம்பெற்றுவந்த பிரார்த்தனை நிகழ்வுகள் யாழ். பல்கலைக் கழகத்துக்கு முன்பாகவுள்ள ஸ்ரீ சத்ய சாய் இல்லத்தில் நேற்று முன்தினம் தொடக்கம் ஒளிபரப்பப்பட்டன.

ஸ்ரீ சத்ய சாய் பாபா சமாதியடைவதற்கு 10 நாள்களுக்கு முன்பிலிருந்தே அவர் நலம் பெற வேண்டித் தொண்டர்களால் பிரார்த்தனையில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-4)

## ஓடோடி வந்தெம்முன் ஒளிர்வாய் மீண்டும்!



சத்தியம்தர் மம் அன்பு சாந்திசமா தானஞ்சந் தோஷம் எங்கும்
நித்தியமும் நின்றுநிலைத்திடவேண்டும் என்றவுயர் நோக்கை உந்தன்
சித்தமிசை வைத்து அருட் சொல்லெழுத்துச் செயலாலே சிறியோமுக்கு
எத்தினமும் எடுத்துக்காட் டாய்த்திகழ்ந்த ஏந்தல் சத் தியசாய் பாபா!

இறையொருவ னிருக்கின்றான் எல்லையிலா அருளுடையான் ஏற்றம் மிக்கான்
மறைந்திருந்தே மக்களைமற் றுயிர் பறவை மிருகங்கள் மரங்கள் தம்மை
முறையுடனே படைத்தளிக்கும் முதல்வனவ னென்கின்ற மூத்தோர் வாக்கைச்
சிறந்த அருட் செயல்களினாற் செகமுணரச் செயவைத்த சித்தன் நீயே.

எந்தவொரு நாட்டினிலெக் கோடியினி லிருந்தாலும் இதயத் தாலே
வந்தனைசெய் தேதமது வருத்தமிடர் தீர்க்கவுனை வேண்டி யோர்க்குச்
சிந்தனைகனிந் தேசுகமும் சீருடைய பெருவாழ்வும் சேர்த்தே யீந்த
அந்தணனே! அருட்குருவே! ஆனந்த வாகினியே! அருள்வாய் மீண்டும்

முற்காலத் தற்புதங்கள் முழுவதுமே புனைவல்ல என்ப தற்கோர்
நற்சான்றாய் நானிலத்தின் நம்பிக்கைக் காயுனது நல்லெண் ணத்தால்
நற்பாகும் கற்கண்டும் நறுந்தேனும் காப்பும்மோ திரமும் பட்டும்
பற்பலவாம் பொருள்களையும் பலபேர்முன் கையசைத்தே பகுத்தீந் தாயே!

அருள்சுரக்கும் ஆன்மீகச் சிந்தனையின் அருங்கலமாய் அமுதின் ஊற்றாய்
விரிசடையும் மென்னகையும் மிகுசெம்மை வண்ணஒளி உடையுங் கொண்ட
திருவுருவாய்த் தெய்வ அவ தாரமெனத் திகழ்சத்ய சாயீ பாபா
உருகியுளங் கரைகின்றோம் ஓடோடி வந்தெம்முன் ஒளிர்வாய் மீண்டும்.

- சிற்பி -

## பட்டதாரிகள் ஆள் சேர்ப்பு பரீட்சைக்கு அனுமதி அட்டையின்றியும் தோற்றலாம்

நாளை மறுதினம் சனிக்கிழமை இடம்பெறும் பட்டதாரிகளை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைப் பரீட்சைக்கான அனுமதி அட்கைள் கிடைக்கப் பெறாதவர்கள் - இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான தகுந்த சான்றுடன் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

இவ்வாறு வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவிடம் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆள் சேர்ப்புச் செய்வதற்கான தகைமைப் பரீட்சை திட்டமிட்டபடி நாளை மறுதினம் சனிக்கிழமை இடம் பெறும்.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அநேகமான விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் கிடைத்திருக்கும். சிலருக்கு இன்னமும் கிடைக்காமல் இருக்கலாம்.

இந்தப் பரீட்சைக்கு முறையாக விண்ணப்பித்தவர்கள் அனைவரும் பரீட்சை எழுத முடியும். நாளை வெள்ளிக்கிழமை வரையும் அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு வந்து சேரலாம்.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் எமது தொலைபேசி இலக்கத்துடன் (021 321 5543) உடனடியாகத் தொடர்புகொண்டு பரீட்சை நிலையம், சுட்டெண் போன்றவற்றை அறிந்துகொள்ளலாம்.

தொடர்புகொள்ள முடியாதவர்கள் பரீட்சை நிலையம் ஒன்றுக்கு பரீட்சைக்கு விண்ணப்பித்ததுக்கான சான்று ஆதாரத்துடன் சமுகமளித்து பரீட்சை எழுத முடியும்-என்றார்.

(ஒ-14)

## அருளாளர் நிலைக்கு உயர்த்தப்படுகிறார் திருத்தந்தை இரண்டாம் ஜோண் போல்

வத்திக்கான், ஏப்.28

மறைந்த திருத்தந்தை இரண்டாம் ஜோண் போல் வத்திக்கானில் எதிர்வரும் மே முதலாம் திகதி அருளாளர் நிலைக்கு உயர்த்தப்படவுள்ளார் என்று வத்திக்கான் திருப்பீடம் அறிவித்துள்ளது.

இறை இரக்கத்தின் ஞாயிறான மே முதலாம் திகதி திருத்தந்தை பதினாறாம் ஆசீர்வாதப்பர் இந்த விழாத் திருப்பலியை நிகழ்த்தி திருத்தந்தை இரண்டாம் ஜோண் போல் முத்திப்பேறு பெற்றவர் என அறிவிப்பார் என்பதை வத்திக்கான் திருப்பீடப் பேச்சாளரும் இயேசுசபை அருட் தந்தையுமான பேதரிக்கோ லொம்பார்தி தெரிவித்தார்.

(த)

வாழ்த்தி வரவேற்கிறோம்



Dr.V.Sutharshan

MBBS(COL),MS(Surgery) (COL),MRCS(ENG)
Consultant Surgeon,Teaching Hospital,Jaffna

தாய் மண்ணிற்கு சேவை செய்ய வேண்டும் என்ற பெரு விருப்புடன் நவீன சத்திரசிகிச்சை நிபுணராக யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையாற்ற வந்திருக்கும் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் வெ.சுதர்சன் அவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்.

— யாழ் இந்து நண்பர்கள். —

## கால்நடை வைத்திய நிலையம் இடமாற்றம்

யாழ். பிறவுண் வீதியில் இயங்கிவந்த கால்நடை வைத்திய நிலையம் பலாலி வீதியில் உள்ள முன்னைய விலங்கு புலனாய்வு நிலையக் கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கள் முதல் இந்த கால்நடை வைத்திய நிலையம் புதிய இடத்தில் இயங்கி வருவதாக கால்நடை திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வீ.அமிர்தலிங்கம் தெரிவித்தார். (ஒ-7)

மரண அறிவித்தல்

உருத்திரபாக்கியம் தியாகேசன்



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட உருத்திரபாக்கியம் தியாகேசன் நேற்று (27.04.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் உருத்திரபாக்கியம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பரமகுரு-நாகம்மா தம்பதியரின் மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் காந்தநேசன், ஜீவநேசன், அபர்ணா, செந்தூரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(28.04.2011) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வங்கி வீதி, ஆவரங்கால்.
தொ.பே.: 0714624070

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ் தலைமைகள் என்ன செய்யப் போகின்றன?

இலங்கை அரசினால் கசியவிடப்பட்ட, ஐ.நா சபையின் பொதுச்செயலாளர் நியமித்த நிபுணர்குழுவின் அறிக்கை நேற்று முன்தினம் பான் கீ - மூனினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. கொழும்பு அரசைக் கலக்கமுற வைத்த அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட போர்க்குற்றங்களை விசாரிக்குமாறு உத்தரவிடுவதற்குத் தமக்கு அதிகாரம் இல்லை என்று அவர் அறிவித்துவிட்டார். இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

அவ்வாறானால், எம் நாட்டு அரச வட்டாரங்கள் கிலி பிடித்து ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராகவும் நிபுணர் குழுவுக்கு எதிராகவும் வன்மம் கொண்டு எதிர்ப்பு அலைகளை ஏன் தோற்றுவித்து வருகின்றன என்ற வினா எவரிடமும் எழுவது இயல்பே.

அரசு, அதன் படையினர் போரின் போதான குறிப்பிட்ட சில கட்டங்களில் பொதுமக்களைக் கொன்றார்கள், மனித உரிமைகள் பலவற்றை மீறினார்கள் என்று நிபுணர் குழு தனது ஐந்து குற்றச்சாட்டுகளை அடுக்கியுள்ளது.

★ பரவலான எறிகணைத் தாக்குதல்கள் மூலம் அரசு பொதுமக்களை கொன்றது.
★ வைத்தியசாலைகள் மற்றும் மனித குடியிருப்புப் பிரதேசங்கள் மீது எறிகணைத் தாக்குதல்களை அரசு (படையினர்) மேற்கொண்டது.
★ மக்களுக்கு ஆற்ற வேண்டிய மனிதாபிமான உதவிகளை வழங்க மறுத்தது.
★ போரால் பாதிக்கப்பட்டவர்களதும், தப்பிப்பிழைத்தவர்களினதும் (இடம்பெயர்ந்தோர் மற்றும் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் உள்ளிட்டு) மனித உரிமைகளை மீறியமை.
★அரசை விமர்சித்தோருக்கும், ஊடகங்களுக்கும் எதிரான போக்கைக் கடைப்பிடித்தமை.
- போர்ப் பிரதேசங்களுக்கு வெளியே மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமை.

நிபுணர் குழு அரசாங்கத்தின் மீது மட்டுமன்றி, தமிழீழ விடுதலைப் புலிகள் மீதும் ஆறு வகையான குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளது.

★பொது மக்களை மனித கேடயங்களாகப் பாவித்தமை.
★புலிகளின் பகுதிகளிலிருந்து தப்பிச் செல்ல முயன்ற பொதுமக்களை சுட்டுக்கொன்றமை.
★பொதுமக்கள் தங்கியுள்ள இடங்களில் வைத்து இராணுவ உபகரணங்களைக் கையாண்டமை.
★சிறுவர்களைக் கட்டாயப்படுத்திப் படைகளில் சேர்த்தமை.
★தற்கொலைத் தாக்குதல்கள் மூலம் பொதுமக்களைக் கொன்றமை.
★ மக்களைக் கட்டாயப்படுத்தி வேலை வாங்கியமை.

அரசாங்கமோ - அரச படையினரோ, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரோ எவர் செய்திருந்தாலும் குற்றம் குற்றமே. சிவபெருமான் நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று புலவர் நக்கீரன் வாதாடிய நிலையில் நின்று, நிபுணர் குழு தனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அறிக்கையைத் தயாரித்திருக்கிறது என்பது அதனைப் படிக்கும் எவரையும் முடிவுக்கு வரத்தூண்டும்.

ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை, நடைபெறாத சம்பவங்களை சோடித்து அல்லது உள்நோக்கத்தை வைத்துப் புனைந்து வழங்கப்பட்ட தகவல்களை வைத்தே நிபுணர் குழு தனது அறிக்கையைத் தயாரித்திருக்கிறது என்று அரசு தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுக்கக் கங்கணம் கட்டி நிற்கிறது.

உலகத் தமிழர் பேரவையினர் வழங்கிய பொய்யான தகவல்களை அடிப்படையாக வைத்தே நிபுணர்குழு தனது அறிக்கையை - அதில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளை- தயாரித்துள்ளது என்று அரச சார்புடைய அரசியல்வாதிகளும், சில கல்விமான்களும் வாதம் செய்கின்றனர்; குற்றம் சுமத்துகின்றனர்.

அது மட்டுமன்றி, தாம் சொன்ன அரசியல், வர்த்தக வழிகாட்டுதல்களை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்காக அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியக் குழுமம் போன்றவை பின்னால் ஒளிந்திருந்து இலங்கைக்கு - அரசுக்கு - அபகீர்த்தி உண்டாக்க எடுக்கும் ஏற்பாடுகளின் விளைவுகளில் ஒன்றே நிபுணர் குழுவின் சிபார்சுகள் என்று கருத்துக் கூறுவோரும் உளர்.

இலங்கை விவகாரத்தில் சர்வதேசப் போர்க்குற்ற விசாரணைக்கு உத்தரவிடத் தமக்கு அதிகாரம் இல்லை என்று ஐ.நா. பொதுச் செயலாளர் தெரிவித்துவிட்டார் எனினும், ஐ.நா. பாதுகாப்புச் சபை அல்லது பொதுச்சபைக் கூட்டங்களில் இது விடயத்தை விவாதத்துக்கு எடுக்கலாம். அனேகமாக, மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் இலங்கை விவகாரம் விவாதத்துக்கு வருவதற்கான சாத்தியங்கள் அதிகம் என்று கருதப்படுகிறது. அதனால் அரசு இந்த விடயத்தில் முன்வைத்த காலை பின்னகர்த்தும் சாத்தியமில்லை.

இந்தப் பின் புலத்தில், தமிழ் அரசியல் கட்சிகள், அமைப்புகள், புத்திஜீவிகள் எந்த வழிநோக்கி நடக்கப் போகிறார்கள் என்ற பெரிய கேள்வி எழுந்து நிற்கிறது.

நிபுணர்குழு அறிக்கை குறித்து ஆராய்ந்து தமிழர்கள் சார்பில் பொது நிலைப்பாட்டை உருவாக்கி சர்வதேச சமூகத்துக்கும் இலங்கை அரசுக்கும் தாமதம் இல்லாமல் சமர்ப்பிக்க வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஒரு கருத்தை முன்வைத்திருக்கிறார்.

போர்க் குற்றங்கள் தொடர்பில், நிபுணர் குழுவின் அறிக்கை சம்பந்தமாக அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் பொது இணக்கப்பாடு ஒன்றுக்கு வரவேண்டும் -

தமிழ் மக்கள் மீது அக்கறை காட்டுகின்ற தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இந்த விடயத்தில் ஒத்த கருத்துக்கும் அணுகுமுறைக்கும் வரவேண்டும் - என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கமும் எம்.ஸ்ரீகாந்தாவும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எதுவோ எப்படியோ -

அரசியல் கருத்துகள் வேறுபட்டவையாக இருப்பினும் கூட, இந்த வேளையில் தமிழ்த் தலைவர்கள் ஒரே இலக்குடன் செயற்படுவது என்றுமில்லாதவாறு முக்கியம், பிரதானம், மிகத் தேவையானது.

தமிழ் மக்களுக்கு நேர்ந்த அரசியல் இன்னல்கள் பொது மக்களுக்கு எதிரான பாதிப்புகள், கொடுமைகள், மனித உரிமை மீறல்கள் எந்தக் காலத்திலும் உரிய நெறிமுறையில் விஞ்ஞான பூர்வமாக எம்மவர்களால், கட்சிகளால், நிறுவன ரீதியாக பதிவுசெய்யப்படவில்லை; ஆவணப்படுத்தப்படவில்லை.

இனியாவது, இப்போதாவது தமிழ்த் தலைமைகள் உரிய விதத்தில், ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் அதில் ஈடுபட வேண்டும்; மனங்கொள் வார்களா?

நாட்டில் நல்லிணக்கம் காண்பதற்கான முனைப்புக்களின் ஆரம்பப் புள்ளியாகக் கூட இது அமையலாம்.

# 17ஆவது திருத்தம் வழங்கியிருந்த நன்மைகளை 18ஆவது அரசமைப்புத் திருத்தம் அபகரித்துவிட்டது

## எதிர்க் கட்சிகளை குற்றஞ்சாட்டுகிறார் பிரதம நீதியரசர்

கொழும்பு, ஏப். 28

ஜனாதிபதிக்கு இருக்கின்ற மிதமிஞ்சிய நிறைவேற்று அதிகாரங்களைக் குறைத்துவிடுவதற்கான முயற்சிகள் யாவும் எதிர்க்கட்சியினரின் செயற்பாடுகளினால் வியர்த்தமாகி விட்டன என்று பிரதம நீதியரசர் அசோக்கா டி சில்வா கூறியிருக்கிறார்.

பி.பி.சியின் சிங்கள சந்தேசிய சேவைக்கு அளித்துள்ள நேர்காணலில் நீதியரசர் அசோக்கா டி சில்வா, நீதித்துறையில் சகல சிரேஷ்ட பதவிகளுக்குமான நியமனங்களை வழங்கும் அதிகாரங்களை நிறைவேற்று ஜனாதிபதிக்கு வழங்கியுள்ள 1973 ஆம் ஆண்டின் அரசமைப்பு அம்சங்கள் அனைத்துமே 18 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் மூலம் மீளவும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டு விட்டன என்றார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:

17 ஆவது திருத்தத்துக்கு முன்னர் ஜனாதிபதி அல்லது பிரதம மந்திரியானவர் நீதித்துறைக்கான நியமனங்களை செய்வதற்கு தன்விருப்பு அதிகாரங்களைப் பெற்றிருந்தார். இந்தத் தன்விருப்பு அதிகாரத்தை மாற்றுவதற்காகவே 17 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. இந்தத் திருத்தமானது மனித உரிமைகள், பொலிஸ், நீதித்துறை மற்றும் தேர்தல் ஆணைக்குழுக்களை நியமிப்பதற்கான சுயேச்சை ஆணைக்குழுகளை நியமிப்பதற்கு வழி வகை செய்திருந்தது. ஆனால் அவசர அவசரமாகக்கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட 18 ஆவது திருத்தச்சட்டமானதன் மூலம் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி அரசமைப்புச்சபையின் ஒப்புதலின்றியே நியமனங்களை மேற்கொள்வதற்கான அதிகாரத்தை மீளவும் பெற்றுக் கொண்டு விட்டார்.

முன்னைய முறை நல்லது என்று நான் சொல்லவரவில்லை, ஆனால் எமது அரசியல் கட்சிகளின் தோல்வி நிலைகளால் நாம் மீளவும் அந்த முறையை ஏற்றுக்கொண்டு விட்டவர்களாகிவிட்டோம் என்றார். (ப)

## யாழ். போதனா வைத்தியசாலையில்

# 30 ஆம் திகதி பிறக்கும் குழந்தைகளுக்கு இலவசமாக வங்கிக் கணக்குகள்

யாழ்ப்பாணம், ஏப். 28

சென்றல் இன்வெஸ்மன் பிறைவேட் லிமிட்டெட்டின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு அன்றைய தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் பிறக்கும் குழந்தைகளுக்கு இலவசமாக சேமிப்புக் கணக்குகள் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளன.

இந்த நிறுவனத்தின் ஒரு வருடப் பூர்த்தியை முன்னிட்டு எதிர்வரும் 30 ஆம் திகதி விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ். கிளையின் பிரதேச முகாமையாளர் ஆர். இராஜமகேந்திரசிங்கம் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும்.

இலங்கையில் 10 கிளை நிறுவனங்களை கொண்டு பொது மக்களுக்கான சேவையினை வழங்கும் இந்த நிதிநிறுவனம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் தனது சேவைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் நலிவுற்ற குடும்பங்களுக்கு வாழ்வாதாரக் கடனுதவிகளையும் பல்வேறு சமூகத் தொண்டுகளையும் வழங்கி வருகின்றது. (ம-313)

# சங்கானை மத்தியில் குடியமர்ந்துள்ள மக்களுக்கு காணி வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.28

சங்கானை மத்தியில் குடியமர்ந்துள்ள மக்களுக்கு வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளரின் பணிப்புரையை அடுத்து காணி பகிர்ந்து வழங்கப்படவுள்ளது.

இதனையடுத்து. வலி. மேற்கு பிரதேச செயலர் திருமதி தே.பாபு, சங்கானை மத்தியில் குடியமர்ந்துள்ள மக்களின் விவரங்களை வலி. மேற்கு பிரதேச சபையிடம் கோரியுள்ளார்.

வலி. மேற்கு பிரதேச சபையிடம் இருந்து காணி வழங்கல் தொடர்பான ஆவணங்களை பெற்றதும் காணிபகிர்ந்து வழங்கப்படும் என பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்குமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் கடந்த வாரம் சங்கானை மத்தி - அராலி ஊரத்தி காணிவிடயமாக ஆராய்ந்துள்ளதுடன் முன்னேற்ற அறிக்கையும் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-302)

# தமிழ், தென்பகுதி கவிஞர்கள் இணைந்த சுற்றுலாவுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்க் கவிஞர்கள் தென்பகுதிக் கவிஞர்கள் இணைந்த வெளிநாட்டு சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்ய கலாசார, கலை அலுவல்கள் அமைச்சர் டி.பி. எக்கநாயக்கா திர்மானித்துள்ளார். அகில இலங்கை கவிஞர் சம்மேளனத்தின் உறவுக்கான பயணம் நிகழ்வின் போது சம்மேளனத்தின் பிரதித் தலைவர் நில்மடுத விமலசூரியதேரர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

உறவுக்கான பயணம் நிகழ்வு சனிக்கிழமை யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டாவாறு கூறினார். (ம-7)

# தியாகம்

தியாகம் என்பது என்ன! உடலைத்துறப்பதல்ல தியாகம், காட்டுக்குச் செல்வதல்ல, வீடு, மக்கள், மனைவியை விட்டுச் செல்வதுமல்ல, ராகம், துவேஷம், அகங்காரம் (விருப்பு, வெறுப்பு, தான் என்ற ஆணவம்) இவற்றைத் துறத்தலே தியாகம். மனிதத் தன்மை இந்த மூன்று குணங்களால் மூடப்பட்டிருக்கிறது.

கண்ணில் புரை விழுந்திருக்கிறது. கண் பார்வை மங்கிவிட்டது. அதற்காக புதிய கண் தேட வேண்டியதில்லை. புரையை அகற்றினால்போதும். அதுபோல் ராகம், துவேசம், அகங்காரம் ஆகிய இத்திரைகள் இதயத்தை மூடியுள்ளன. இந்த மூன்று திரைகளையும் விலக்குவதே தியாகம். சொத்துக்களைப் துறப்பதல்ல இந்தத் துர்க்குணங்களை, கெட்ட இயல்புகளை விடுத்தபின்பு ஆத்ம இயல்பு தானாகவே கைவரப் பெறும். அதைப் பெறுவதற்கு உனக்கு முழு உரிமை உண்டு.



*(நன்றி: சாயி அருளமுதம் -1998)*

## சாயி சிந்தனை

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி சுபாமா பிரபாகரன் அவர்களின் அன்புத் தாய்

**அமரர் தேவாம்பிகை பாலசிங்கம்**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி,
மானிப்பாய். (3576) (45-24-26)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1288 நீலம்

தனுசு

03 13 27 35

26-04-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 2,901,150/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 223,156 | 20/- | 4,463,120/- |
| 2 இலக்கங்கள் | 20,569 | 40/- | 822,760/- |
| 1 இல. + லக்கினம் | 20,251 | 60/- | 1,215,060/- |
| 2 இல. + லக்கினம் | 1,866 | 200/- | 373,200/- |
| 3 இலக்கங்கள் | 536 | 1000/- | 536,000/- |
| 3 இல. + லக்கினம் | 58 | 10,000/- | 580,000/- |
| 4 இலக்கங்கள் | 02 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,901,150/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 8,390,140/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 599 | | 598,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 267,037 | | 8,988,640/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,898,400/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

கன்னி

25 28 34 41

ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 597 | 500/- | 298,500/- |
| 4 இலக்கங்கள் | 1 | 100,000/- | 100,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 200,000/- | 200,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 599 | | 598,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-


## போதையில் இடைஞ்சல் ஏற்படுத்திய இருவருக்கு ரூபா 3 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி, ஏப்.28

பொது மக்களுக்கு இடைஞ்சல் தரும் வகையில் மதுபோதையில் நடமாடிய இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்த வழக்கை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விசாரித்த நீதிவான் இந்த இருவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து, அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா ஒரு மாத சாதாரண சிறையில் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

(ஒ-207)

## பெந்தேகொஸ்தே சுவிசேஷ ஆராதனை

யாழ்ப்பாணம், ஏப். 28

இலங்கை பெந்தே கொஸ்தே சபைச் சாலையில் வருடாந்த கன்வென்ஷனும் சுவிசேஷ ஆராதனைகளும் சபையின் சுண்டுக்குளி ஆலயத்தில் நேற்று ஆரம்பமாகின.

எதிர்வரும் முதலாம் திகதிவரை காலை 7 மணி முதல் வேதபாடம், ஆராதனை, கூட்டம் என்பன நடைபெறும். தினமும் மாலை 5.30 மணிக்கு விசேட ஆராதனைகள் இடம்பெறும். (ஐ)

## கைதடி அலுவலகத்தில் முத்திரையிடும் பணி

தென்மராட்சி ஏப்.28

கைதடி, நாவற்குழி ஆகிய பகுதிகளின் வர்த்தக, வியாபார நிலையங்களின் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணிகள் இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் சாவகச்சேரி பிரதேச சபை கைதடி உப அலுவலகங்களில் யாழ். மாவட்ட அளவைகள் நிறுவைகள் திணைக்கள உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## கண்ணீர் அஞ்சலி

யா/ இணுவில் மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்ற

**திருமதி கனகேஸ்வரி இராசையா**

அவர்கள் இறைபதம் எய்தியுள்ளார். அவரது ஆத்மா சாந்தியடைய எமது பிரார்த்தனையைச் செலுத்துவதுடன் அவரது குடும்ப உறுப்பினர்களுடன் துக்கத்தைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

(3578)

ஆசிரியர் கழகம்,
யா/ இணுவில் மத்தியகல்லூரி.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் நடராசா மகேந்திரன்**

தோற்றம்
24.03.1959

மறைவு
09.05.2010

வையகத்தில் எம்மை வாழவைத்த அப்பாவே
நல்வாழ்வுக்கு வழிகாட்டி - எம்மை
மேல் நிலைக்கு இட்டுச்சென்ற - அப்பாவே
ஆண்டு ஒன்று சென்றாலும் - என்றும்
உம் நினைவுடன் வாழுகின்றோம்.

தாமன்தோட்டம், அல்வாய் கிழக்கு,
அல்வாய். T.P.0779909812

மனைவி,
பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
24 ★ 08 ★ 1981



இறப்பு
29 ★ 03 ★ 2011

**செல்வன் இரத்தினம் கிருபானந்**

திதி : தசமி

*எங்களின் உடன் பிறப்பே*
*எமக்கினிய சகோதரமாய்*
*இன்பமுடன் நாம் வாழ்ந்திருந்தோம்*
*இப்போ தனியே நீ போய்விட்டாய்*
*வந்த வினை என்ன அண்ணா?*
*எங்களை ஏன் வாட விட்டாய்*
*நாங்கள் இனி எப்படி அண்ணா*
*இவ்வுலகில் வாழப்போகிறோம்.*

22/4 A, விதானையார் வீதி,
சுண்டுக்குளி. (3583) (34)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



திருமதி
# தேவாம்பிகை பாலசிங்கம்

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவாம்பிகை பாலசிங்கம் (27.04.2011) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி - தையல்முத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பையா -வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும் பாலசிங்கத்தின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செ.பரமேஸ்வரி, இ.பாக்கியவதி மற்றும் சு. இந்திராணி, காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், ஞானேஸ்வரன் மற்றும் விக்னேஸ்வரி (பிரான்ஸ்), மனோரஞ்சிதம், ரதிமலர் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஓய்வுபெற்ற ஆசிரியைகளான திருமதி பூரணம் செல்லத்துரை, திருமதி சின்னாச்சிப்பிள்ளை திருச்செல்வம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுபாகரன் (மருந்துக் கலவையாளர், சிலாபத்துறை வைத்தியசாலை, மன்னார்.) சுபாமா (ஆசிரியை- யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி), சுபாமதி ((முகாமைத்துவ உதவியாளர் - சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), சுபா உமா (ஆசிரியை- மன்/ எழுத்தூர், றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் சு.கவிதா (ஆசிரியை, யா/ நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை), இ.பிரபாகரன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் - பச்சிலைப்பள்ளி பிரதேச சபை), ந.ஜெயராஜ் (ஆசிரியர், வ/புளியங்குளம் இந்துக் கல்லூரி), ஞா. நரேந்திரம் (மன்னார் மின்சாரசபை) ஆகியோரின் அன்பு மாமியும் ஜீபனா, ஜீபஹி, சதுர்த்தியன், பானுஜி ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுதுமலை கிழக்கு, மானிப்பாயில் உள்ள அவரின் இல்லத்தில் இன்று (28.04.2011) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மலை வேம்படி,*
*சுதுமலை கிழக்கு, மானிப்பாய்.* (3571) (45)

தகவல் :
**பாலசிங்கம் குடும்பத்தினர்.**


## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

26.04.2011

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2386

வெற்றி எழுத்து: V

வெற்றி எண்கள்: 9 6 4 3 6 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | V | 9 | 6 | 4 | 3 | 6 | 3 | ரூபா.10,123,896/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 9 | 6 | 4 | 3 | 6 | 3 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 6 | 4 | 3 | 6 | 3 | ரூபா. 100,000/= | பரிசுகள் 12 |
| 3 பரிசுகள் | | | | 4 | 3 | 6 | 3 | ரூபா. 10,000/= | பரிசுகள் 119 |
| 4 பரிசுகள் | | | | | 3 | 6 | 3 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1210 |
| 5 பரிசுகள் | | | | | | 6 | 3 | ரூபா. 100/= | பரிசுகள் 11908 |
| 6 பரிசுகள் | | | | | | | 3 | ரூபா. 20/= | பரிசுகள் 118588 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | | | | | | | | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 9 | 6 | 4 | 3 | 6 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 11 |
| 8 பரிசுகள் | | 9 | 6 | 4 | 3 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 128 |
| 9 பரிசுகள் | | 9 | 6 | 4 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1195 |
| 10 பரிசுகள் | | 9 | 6 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 11966 |
| 11 பரிசுகள் | V | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 47141 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 11,061,180.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 11,111,874.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
2342 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk

## யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில்

# எக்ஸ்ரே கதிர் இயக்கப் படங்களை பெற்றுக்கொள்வதில் நோயாளர் சிரமம்

வடமராட்சி,ஏப்.28

யாழ்.குடாநாட்டில் உள்ள பிரதான வைத்தியசாலைகளில் எக்ஸ்ரே கதிர் இயக்கப் படங்களைப் பெற்றுக் கொள்வதில் நோயாளர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

எக்ஸ்ரே கதிர் இயந்திரத்தை இயக்கும் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவுகள்வழங்கப்படாமையினாலேயே இந்தச் சிரமங்கள், காலதாமதங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.குடாநாட்டில் உள்ள பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பழை ஆகிய மூன்று அரசினர் ஆதார வைத்திய சாலைகளிலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையில் பணியாற்றும் எக்ஸ்ரே கதிர் இயந்திர இயக்குநர்களுக்கு முன்னர் வழங்கப்பட்டு வந்த மேலதிகக் கொடுப்பனவுகள் கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து இப்பிரிவில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் கடமையாற்றுவதை நிறுத்திக் கொண்டனர்.

வாரத்தில் திங்கள் முதல் வெள்ளி வரை மட்டுமே இவர்கள் பணிபுரிவதால் எக்ஸ்ரே கதிர் படங்களை எடுப்பதில் நெருக்கடிகளும் சிரமங்களும் ஏற்பட்டுள்ளன. இதனால் நோயாளர்களுக்கு உடனடியாக எக்ஸ்ரே கதிர் படங்களை வழங்க முடியவில்லை. மாறாக பிறிதொரு திகதி அறிவிக்கப்பட்டே எக்ஸ்ரே கதிர் படம் எடுத்து வழங்கப்படுகின்றது. சனி, ஞாயிறு, அரச விடுமுறை தினங்களில் ஏதாவது விபத்து போன்ற அவசர சிகிச்சைகளுக்குக் குறிப்பிட்ட இந்த வைத்தியசாலைகளில் எக்ஸ்ரே கதிர்ப் பட இயக்குநர்கள் கடமையில் இன்மையால் எக்ஸ்ரே கதிர் வீச்சுப் படங்களை உடனடியாக எடுத்து சிகிச்சை அளிக்க முடியாத நிலையில் அவசர நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

இந்த நிலையால் நோயாளர்கள் உரிய காலத்தில் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை வடமாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு அரசினர் வைத்திய சாலைகளில் பணியாற்றும் எக்ஸ்ரே கதிர் இயந்திர இயக்குநர்களான உத்தியோகத்தர்களுக்குத் தங்குதடையின்றி மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் யாழ்.குடாநாட்டு வைத்திய சாலைகளில் பணியாற்றும் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு மட்டும் மேலதிகக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த மாதம் 11 தினங்களுக்கு மேல் விடுமுறை தினங்களாக இருந்ததினால் எக்ஸ்ரே கதிர்ப் படம் எடுக்க வேண்டிய பல நோயாளர்களுக்குப் பிறிதொரு திகதியில் வருமாறு பணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆகவே இந்த விடயத்தில் சமபந்தப்பட்ட தரப்பினர் அக்கறை எடுத்து செயலாற்றுவதன் மூலம் நோயாளர்களின் உடனடி சிகிச்சைக்கு வழியமைக்க முடியும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.(எ-236)

# எட்டு மணித்தியால சேவையை உப தபாலதிபர்கள் வழங்க வேண்டும்

## அஞ்சல் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28

உபதபாலதிபர்கள் எட்டு மணித்தியாலங்கள் பொதுமக்களுக்கான தபால் சேவையை வழங்குவதற்கு முன்வர வேண்டும்.

கடந்த காலங்களில் போக்குவரத்துப் பிரச்சினை, நாட்டில் அமைதியற்ற சூழல் தபால் சேவையைப் பாதிப்படையச் செய்தது.

ஆனால் தற்போது அவ்வாறான சூழ்நிலைகள் மாறி சுமுகமான சூழல் காணப்படுகிறது. இது தபாலதிபர்களுக்குச் சாதகமாக உள்ளது. இதனை அனைவரும் சரியான வழியில் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ஜெபரத்தினம்.

யாழ்.பிரதம தபாலக மண்டபத்தில் இடம்பெற்ற உப தபாலதிபர்களின் தொழிற் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் கூறுகையில்:

இந்தத் தொழிற்சங்கத்தின் தாய்ச் சங்கம் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்று அனைத்துக் கிளைகளுடனும் இணைப்புப் பாலமாகத் தமது சேவையை வழங்க வேண்டும்.

இதனால் தபால் சேவையை மேலும் அபிவிருத்தியடையச் செய்தவதற்கும் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கும் இலகுவாக இருக்கும்.

ஏனைய அரச உத்தியோகத்தர்கள் போன்று உப தபால் அதிபர்கள் சேவைகளை வழங்க முடியாது.

இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 8 மணித்தியால சேவையை சரிவர அனைவரும் கடமையுணர்வுடன் வழங்க வேண்டியது கட்டாயமாகும்.

இந்த உன்னதமான சேவைகளை வழங்கும் போது உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் தாமதமாகவே வந்து சேரும்.

யாழ்.மாவட்டத்தில் உப தபாலதிபர்களின் தொழிற் சங்கம் கூடிய நலன் கொண்டு தனது சேவ்வையை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (ம-313)

**ஊக்குவிப்பு....**



நினைவுச் சின்னம்: கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரி கிளையில் 'அருணலு' சேமிப்பு திட்டத்தில் இணைந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்குகிறார்.

# சித்தாந்த ஆய்வாளராக இணைய தகுதியானோர் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

சைவ சித்தாந்த ஆய்வு நிறுவனத்தில் சித்தாந்த ஆய்வாளர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிப்பவர்கள் சைவ சமயத்தவராகவும் சமய தீட்சை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்

அத்துடன் சமயத்துறையில் சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் கௌரவப்பட்டங்கள், துறைசார்ந்த பண்டிதர் கௌரவப்பட்டங்கள், துறைசார்ந்த கல்வியலாளர், சீரிய சமய வாழ்வியல் ஆகியவற்றில் குறைந்தது ஒரு தகுதியேனும் இருப்பதுடன் மேற்குறிப்பிட்ட விதிகளில் குறைந்தது இரண்டு விதிகளையும் தகுதியாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

தகுதியுடையவர்கள் ஏழாலை சைவ சிந்தாந்த ஆய்வு நிறுவனத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று இயக்குநர், சைவ சித்தாந்த ஆய்வு நிறுவனம், ஏழாலை மேற்கு, சுன்னாகம் எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

# உதவிகோரி விண்ணப்பித்த 11 பேருக்கு கொடுப்பனவுகள்

தென்மராட்சி,ஏப்.28

தென்மராட்சிப் பிரதேச செயலகம் ஊடாக மாகாண சமூக சேவைகள் திணைக்களத்துக்கு உதவிகோரி விண்ணப்பித்த 11பேருக்கான கொடுப்பனவுகள் தென்மராட்சிப் பிரதேச செயலத்துக்குக் கிடைத்துள்ளன.

'யுனிசெப்' செயற்றிட்டத்தின் கீழான நலிவுற்ற குடும்பங்களுக்கான உபகரண திருத்தம் மற்றும் மருத்துவத் தேவை ஆகியவற்றுக்கு விண்ணப்பித்தவர்களில் 3 பேருக்கு உபகரணத் திருத்ததுக்கும் 8 பேருக்கு மருத்துவ தேவைக்கென இக் கொடுப்பனவுகள் கிடைத்துள்ளன.

பின்வரும் பயனாளிகள் எதிர்வரும் மே நான்காம் திகதி புதன்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் இந்தக் கொடுப்பனவுகளைப் பெற் றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

**உபகரணத் திருத்தம்**

செ.யோகராசா- நுணாவில் மேற்கு, மு.வேலுப்பிள்ளை- மட்டுவில் கிழக்கு, மு.தினேஸ்குமார்-கச்சாய் தெற்கு.

**மருத்துவ தேவை**

[illegible].இராகினி-வரணி வடக்கு இ.[illegible]யரஞ்சினி- தாவளை, இயற்றாலை, ஏ.சுந்தரலிங்கம்- கைதடி தெற்கு, கி.ஜெயதேவி- தட்டாதெரு, சங்கத்தானை, மெர.சகாயராசா- கோவிற்குடியிருப்பு, ப.தவமலர்-வெள்ளாம் போக்கட்டி, நா.சரஸ்வதி- கச்சாய் வீதி, கொடிகாமம், ந.தங்கரத்தினம்- வரணி வடக்கு. (ம-207)

# தேசிய கலை, இலக்கியப் பெருவிழா; பிரதேச, மாவட்ட , தேசிய ரீதியில் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.28

தேசிய கலை, இலக்கிய பெருவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் கலை இலக்கியப் போட்டித் தொடர் இந்த ஆண்டும் பிரதேச , மாவட்ட, தேசிய ரீதியில் நடத்தப்படவுள்ளது.

கலாசாரத் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இந்தப்போட்டிகளில் 19 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான திறந்த போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் தாங்கள் பங்குபற்ற விரும்பும் ஆக்கங்களைப் போட்டி நிபந்தனைகளுக்கு அமைய தயார் செய்து எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக் கிழமைக்கு முன் அனுப்பி வைக்க வேண்டும்.

நல்லூர்ப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்டவர்கள் நல்லூர்ப் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்குமாறு நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

**பாடல் ஆக்கம்:** விரும்பிய தலைப்பின் கீழ் பாடல் ஆக்கத்தை முன்வைக்க முடியும். ஒருவர் ஓர் ஆக்கம் மட்டுமே சமர்ப்பிக்கலாம்.

**நாட்டார் பாடல்:** உங்கள் பிரதேசத்துக்குரிய 10 வகையான நாட்டார் கலைகளின் தொகுப்பு, கிராமியக் கதைகள், நாட்டார் பாடல்கள், மாந்திரிகச் செயல் முறைகள், உவமைகள் போன்றவையோ அல்லது கிராம நாமங்கள் தொடர்பான விவரணம்.

**விமரிசனம்:** தேர்ந்தெடுக்கும் நாவல், சிறுகதை, மொழி பெயர்ப்பு, கவிதைகள் தொகுப்பு, பாடல்கள் தொகுப்பு, மேடை நாடகம் தொடர்பான விமரிசணம்.

**சிறுகதை:** விருப்பத்துக்கு ஏற்றவாறு [illegible] தலைப்பின் கீழும் முன் வைக்கலாம்.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவிருக்கும் பாடசாலை மாணவர்களுக்கென போட்டி தொடர்பான விவரங்கள் பிரிவில் உள்ள பாடசாலைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள[illegible] தெரிவிக்கப்பட்டு[illegible] (ம-7)

# கால்நடைகளின் தங்குமிடமாகியுள்ள காக்கைதீவு இளைப்பாற்று மண்டபம்

சண்டிலிப்பாய், ஏப்.28

கடற்றொழிலாளர்களின் நலன் கருதி காக்கைதீவு கடற்கரையில் பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இளைப்பாறும் மண்டபம் கால்நடைகளும் நாய்களும் தங்கும் மடமாக மாறியுள்ளது.

இது குறித்து அதிருப்தி தெரிவித்துள்ள சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தலைவர் என்.பொன்னம்பலம், இந்த மண்டபத்தை தொழிலாளர்கள் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியுள்ளார்.

சாவல்கட்டு, ஆணைக்கோட்டை, நவாலி, காக்கைதீவு, உயரப்புலம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர் காக்கைதீவு இறங்கு துறையிலிருந்து கடலுக்குச் சென்று தொழில்செய்து வருகிறார்கள்.

இவர்கள் தொழிலுக்குச் செல்வதற்கு முன்பும், தொழில் முடிந்து வந்த பின்பும் சேதமடைந்த வலைகளைத் திருத்தி அமைப்பதற்கு தங்குமிடம் இன்றிப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை குறித்தும் அவர்களுக்கு இளைப்பாறும் மண்டபம் அமைப்பது குறித்தும் பொது அமைப்புகளுடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து 2000 ஆம் ஆண்டு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் 5 இலட்சம் ரூபா செலவில் இளைப்பாறும் மண்டபத்தை அமைத்துக் கொடுத்தது.

இந்த மண்டபத்தைத் தொழிலாளர் பயன்படுத்துவதற்கு வரி செலுத்த வேண்டுமென்று வலி.தென்மேற்குப் பிரதேச சபை அறிவித்தது. இதனால் தொழிலாளர் இந்த மண்டபத்தைப் பயன்படுத்துவதில்லை.

தற்பொழுது இந்த மண்டபம் கால்நடைகளும் நாய்களும் தங்கும் மடமாக மாறியுள்ளது.

தமது தொழிலில் ஏற்படும் சிரமங்களை தவிர்ப்பதற்கு உதவும் முகமாக கடற்றொழிலாளர்கள் இந்த மண்டபத்தை பயன்படுத்துவதற்கு வலி. தென்மேற்குப் பிரதேச சபை நடவடிக்கை எடுத்து உதவ முன்வர வேண்டுமென்று சங்கத்தலைவர் கோரியுள்ளார்.

(ம-115)

## தென்னையை பாதுகாக்கும் திட்டம்

பருத்தித்துறை, ஏப்.28

தென்னையை கருவண்டுத் தாக்குதலில் இருந்து பாதுகாக்கும் பொறிவைக்கும் திட்டம் வட மராட்சியிலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

கடந்த ஆண்டு தென்னையை கருவண்டுத் தாக்குதலில் இருந்து பாதுகாப்பதற்கான பொறிவைக்கும் திட்டம் தென்னை அபிவிருத்திச் சபையினால் அச்சுவேலியில் மேற்கொள்ளப்பட்டு வெற்றியளித்துள்ளது.

இதனையடுத்து வடமராட்சியிலும் இதனை தனியார் காணிகளிலும் மேற்கொள்ள தென்னை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுக்கவுள்ளது.

(ம-190)

## பிரதேச செயலகங்களில் பணியாற்ற 30 முகாமைத்துவ உதவியாளர்

தென்மராட்சி, ஏப்.28

யாழ்மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் பணியாற்றுவதற்கு மத்திய அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு முகாமைத்துவ உதவியாளர் தரம் III இற்கு 30 பேரை நியமித்துள்ளது.

கடந்த 8ஆம் திகதி அமுலுக்கு வரும் வகையில் நியமனங்கள் வழங்கப்பட்ட இவர்கள் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் ஆகியவற்றில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இதன் பிரகாரம் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு செல்வி ஜெயராம் பிரியதர்சினி, செல்வி இராசேந்திரம் பிரிந்தா, செல்வி சண்முகலிங்கம் சோபனா, செல்வி ஆறுமுகம் கமலவேணி ஆகியோர் நியமனம் பெற்று கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இதேவேளை, தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்துக்கு முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு 8 பேர் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

வேலாயுதபிள்ளை இமயவல்லி, திருமதி அனுராதா பிரதீபன், செல்வி ஜெகபாலசர்மா இராஜமல்லிகை, செல்வி மகாலிங்கம் தயாழினி, செல்வி செல்லத்துரை சுபாஷினி, செ.அகல்யா, அழகேசன் பிரதீபன், பரஞ் சோதி தர்ஷிகா ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளவர்களாவர். (த-267)

### கல்வி ஊக்குவிப்பு...




மண்கும்பான் அ.த.க பாடசாலையின் பயன்பாட்டுக்கெனப் பாடசாலை அதிபர் திருமதி நா.சரவணபவானந்தனிடம் என்.விவேகானந்தராசா விளம்பரப் பலகை ஒன்றை வழங்குகிறார். (7)

## கோழிக்குஞ்சுகள் விநியோகம்

அச்சுவேலி பிராந்திய கால்நடைப் பண்ணையில் ஒருநாள் புறொயிலர் குஞ்சுகள் விற்பனை செய்யப்படுகின்றன.

தேவையானவர்கள் பிராந்திய கால்நடைப் பிரிவுக் கால்நடை வைத்திய பணிமனையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்று பிரதிப் பணிப்பாளர் திருமதி வீ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். (ம-7)

## நல்லூர் கோட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப்.28

நல்லூர் கோட்ட மட்ட தமிழ் மொழித்தினப் போட்டிகள் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தினப் போட்டிக்கான சுற்று நிருபங்கள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டு பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்தச் சுற்று நிருபத்தின்படி போட்டிகள், வாசிப்பு, பேச்சு, ஆக்கத்திறன் வெளிப்பாடு, பாவோதல், இசையும் அசைவும், தமிழறிவு வினா விடை, விவாதம், நாட்டார் பாடல், வில்லுப்பாட்டு, தனிஇசை, குழுஇசை, தனி நடனம், குழு நடனம், நாட்டிய நாடகம், மேடைநாடகம் ஆகியன நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிக்குரிய பாடசாலைகள் தங்கள் வரவை யாழ். இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் உள்ள அலுவலகத்தில் பதிந்து உறுதிப்படுத்த வேண்டும்.

அத்துடன் போட்டியாளர்களுக்குரிய சுட்டெண்களை தவறாது அணிந்து கொண்டு மண்டபத்தில் போட்டியாளர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள ஆசனங்களில் அமர்ந்து கொள்ளவும்.

தமிழ்த்தினப் போட்டிகள் சிறப்பான முறையில் நடைபெற ஆசிரியர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா அறிவித்துள்ளார்.

(ம-311)

## அவலத்தை எதிர்கொள்ள வைக்கும் இந்து ஆரம்பப் பாடசாலை முன் வீதி

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி இந்து ஆரம்பப் பாடசாலை முன்பாக உள்ள வீதி நீண்ட நாள்களாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மழைநீர் தேங்கி மிகவும் மோசமான நிலையில் இந்த வீதி உள்ளபோதும் இதுவரை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பார்வையில் படாதவண்ணம் உள்ளது.

மழை காலத்தில் வீதியில் வெள்ளம் நிறைந்து உள்ளது. இந்தப் பகுதியில் பாடசாலையின் நுழைவாயிலும் உள்ளது.

பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் வெள்ளத்தில் விழுந்தெழும்பும் சம்பவங்களும் இடம் பெறுகின்றன.

இந்த வீதியைத் திருத்தி சிறுவர்களுக்கு ஏற்[illegible]க்கூடிய



கஷ்டங்களைத் தவிர்க்க சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ம-7-23)

## யாழ்.நூலக சிறுவர் பகுதியை நவீனமயமாக்கும் பணி துரிதம்

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ்.பொது நூலகத்தின் சிறுவர் பகுதி சிங்கப்பூர் பாணிக்கு மாற்றும் முயற்சியின் திட்டத்தின் பாதி வேலைகள் பூர்த்தியடைந்து விட்டன என்று யாழ். பொது நூலகத்தின் பிரதம நூலகர் தெரிவித்துள்ளார்.

யாழ். பொது நூலகத்தின் சிறுவர் பகுதியினை சிங்கப்பூர் பாணிக்கு மாற்றும் முயற்சியின் அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அந்த நாட்டு அரசு யாழ். நூலக சிறுவர் பிரிவிலுள்ள ஆறு பேருக்கு பயிற்சிகளையும் வழங்கியுள்ளது. சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சும், சிங்கப்பூர் ஒத்துழைப்புக்குரிய அமைப்பும் இணைந்தே இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

சிங்கப்பூர் சர்வதேச ஒத்துழைப்பு அமைப்பின் பணிப்பாளர் மார்க்கட் தவக்கோன் 3 மில்லியன் ரூபா நிதியை இதற்கு ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதன்படி சிங்கப்பூரில் உள்ள சிறுவர் நூலகப் பகுதி போல் யாழ். பொது நூலக சிறுவர் பகுதியும் நவீனமயப்படுத்தி மாற்றி அமைக்கப்படுகிறது.

பெப்ரவரி 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைகள் யாவும் ஜூன் மாத இறுதியில் பூர்த்தியாக்கப்பட்டுப் பொது மக்களின் பாவனைக்காக திறந்து விடப்படும் என்று கூறப்பட்டது.

இலங்கையில் உள்ள சகல நூல் நிலையங்களிலும் யாழ். பொது நூலகம் முன் மாதிரியாகத் திகழும் எனவும் யாழ். பொது நூலகத்தின் பிரதம நூலகர் மேலும் தெரிவித்தார்.

(ம-311)

யாழ். பொலிஸ் நிலையங்களில்

# தமிழ்ப் பொலிஸார் கடமையில்; சிங்களத்தில் மட்டும் பதிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ்.மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ்ப் பொலிஸார் நியமனம் செய்யப்பட்டுள்ள போதிலும் முறைப்பாடுகள் சிங்களத்தில் பதிவு செய்யப்படும் செயற்பாடுகளே தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன என மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகளைப் பதிவு செய்யச் செல்லும் பொதுமக்கள் கூறும் முறைப்பாடுகள் யாவும் தனிச் சிங்களத்தில் பதிவு செய்யப்பட்ட பின்னர் பொதுமக்கள் எழுதப்பட்ட விடயம் என்னவென்பது தெரியாமலே கையொப்பம் இட்டுச் செல்லும் நிலைமை தொடர்ந்த வண்ணம் உள்ளது.

கடந்த மாதம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலகத்தால் சிவில் சமூகத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இரண்டு பொலிஸ் நிலையங்களில் தமிழிலும் பதிவுகள் இடம்பெறும் எனக் கூறப்பட்டது.

முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரி லுடாவை கடமையில் இருந்த வேளை தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் பதிவு செய்யப்பட்டதாகவும் அவர் சென்ற பின்னர் தனிச் சிங்களத்தில் பதிவுசெய்யப்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

புதிதாக நியமனம் பெற்ற தமிழ் பொலிஸார் முறைப்பாடுகள் பதிவு செய்யும் அலுவலகத்தில் கடமைகளில் ஈடுபடுத்தப்படாமல் இருப்பதுடன் கூடியளவுக்கு வெளிக் கடமைகளுக்கே இவர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றனர் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ்ப் பொலிஸாரும் கூட பொலிஸ் நிலையங்களில் சிங்களத்தில் உரையாட முற்படுவதும் தம்மைத் தமிழர் என இனம் காட்டிக்கொள்ள மறுக்கும் துர்ப்பாக்கிய நிலைமையும் கூடக் காணப்படுவதாகவும் பொதுமக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (எ-68)

அறிவூட்டல்...



புதிய உற்பத்தி: யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஏற்பாட்டில் புகைப்படக்கலை தொடர்பான கருத்தரங்கு யாழ்.பல்கலைக்கழக புதிய கலைப்பீடக் கட்டடத் தொகுதியில் அண்மையில் இடம்பெற்றது. இலங்கையின் பிரதான புகைப்படக் கலைஞர்களில் ஒருவரான மெனிக்கா வன்கடர் பேட்டன் இது தொடர்பாக விளக்கமளிக்கிறார். (23)

# வலி.வடக்கு மக்களுக்கு உதவிகள்

சுன்னாகம்,ஏப்.28

டெனிஸ் அகதிகள் பேரவை வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மீளக்குடியமர்ந்த கிராம மக்களுக்கு உதவிகளை வழங்கியுள்ளது.

இந்த நிறுவனம் இந்தப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு கத்தி, மண்வெட்டி, வாளி, தண்ணீர்க் கொள்கலன் முதலான அத்தியாவசிய உதவிகளை வழங்கியுள்ளது.

இதேவேளை, சேவாலங்கா நிறுவனம் இந்தப் பிரதேசத்திலுள்ள பொதுக்கிணறுகளைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

சேதமடைந்த கிணறு கட்டப்பட்டு பாதுகாப்பான முறையில் நீரள்ள வசதி செய்யப்படுவதோடு கிணறு சுத்திகரிக்கப்பட்டு சுத்தமான குடிதண்ணீர் கிடைப்பதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. (ம-38)

# 791 இலக்க பேருந்துச் சேவையை இருவேளையாவது நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 28

சில்லாலையிலிருந்து யாழ். நோக்கி வரும் 791 இலக்கப் பேருந்து சேவையைப் பாடசாலை மாணவர்களின் நலன் கருதிச் சேவையில் ஈடுபடுத்துமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சில்லாலையில் இருந்து இளவாலை ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி வரும் பேருந்துச் சேவையும் 788 இளவாலை பேருந்துச் சேவையும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்கள், தனியார் பேருந்துச் சேவையை நாடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபட்டிருந்த போதும் மிகவும் நெரிசலான நிலையிலேயே பயணம் செய்ய-வேண்டியுள்ளது.

இதனால் பாடசாலைகளுக்கும் தொழில் இடங்களுக்கும் தாமதமாகச் செல்ல வேண்டியுள்ளது.

வார நாள்களிலாவது காலை, மாலை இரு வேளையும் 791 இலக்கப் பேருந்தை சேவை. யில் ஈடுபடுத்துமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம- 313)

18 லட்சம் ரூபா ஒதுக்கீட்டில்

# காசுக்கு வேலை செயற்றிட்டத்தில் கீரிமலைப் பகுதியைப் புனரமைக்க ஏற்பாடு

சுன்னாகம்,ஏப்.28

கீரிமலை நகுலேஸ்வரம் கிராம சேவகர் பிரிவில் காசுக்கு வேலை செயல் திட்டத்தின் கீழ் பிரதேச பொது நிறுவனங்கள், வீதிகள் என்பன புனரமைக்கப் படவுள்ளன.

இதற்கென 18 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இந்தப் பிரதேசத்தைப் பிரதித் திட்டப் பணிப்பாளர் எஸ்.சுதர்சன், வலி. வடக்குப் பிரதேச செயலர் எஸ். முரளிதரன் ஆகியோர் பார்வையிட்டதுடன் மக்களுடனும் கலந்துரையாடினர்.

இதன் பிரகாரம் முதற்கட்டமாகப் பற்றைகள் சூழ்ந்துள்ள கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தையும் அதனையடுத்து -பிரதேசத்திலுள்ள எட்டு சிறிய வீதிகளையும் புனரமைப்பதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டத்தில் பங்கேற்போருக்கு நாளொன்றுக்கு 500 ரூபா வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (எ-38)

# சாதாரண தர மாணவர் பெறுபேறு தொடர்பாக நடமாடும் செயலணி

பருத்தித்துறை, ஏப்.28

கடந்தவருடம் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்களின் பெறுபேறுகளை வழங்குவதற்கான விசேட ஏற்பாட்டில் நடமாடும் செயலணி வடமராட்சியில் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின்போது பரீட்சைத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டையைப் பரீட்சை நிலையத்துக்கு எடுத்துச் செல்லாமையால் பல மாணவர்களின் பரீட்சை முடிவுகள் பரீட்சைத் திணைக்களத்தால் இடைநிறுத்தி வைக்கப்பட்டன.

இந்தப் பரீட்சை முடிவுகள் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகளுக்கு அவர்களது பெயருக்குத் தனித்தனியே கடிதங்களைப் பரீட்சைத் திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது. பரீட்சைத் திணைக்கள அதிகாரிகளே இந்த நடமாடும் செயலணியில் கலந்துகொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-190-236)

# அல்லைப்பிட்டி வீட்டுத்திட்டம் பயனாளிகளிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.28

கியூடெக்-கரித்தாஸ் நிறுவனத்தால் அல்லைப்பிட்டி பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட நிரந்தர வீட்டுத்திட்டக் குடியிருப்புக்கள் பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளன.

நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நிறுவன இயக்குநர் வண.பிதா ஜே.எக்ஸ்.பேணாட் றெக்னோ தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகவும், செடெக்-கரித்தாஸ் தேசியமட்ட இயக்குநர் வண.ஜோர்ஜ் சிகமொனி அடிகள் சிறப்பு விருந்தினராகவும், முன்னாள் கியூடெக்-கரித்தாஸ் இயக்குநரும் ஊர்காவற்றுறைப் பங்குத் தந்தையுமான அருட்பணி இ.ஜோ.ஜெயக்குமார் அடிகள், நெய்தலம் இயக்குநர் ஜெ.ஜெயசேகரம் அடிகள் மற்றும் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வேலணை கடற்படைக் கட்டளை அதிகாரி ஏ. எம்.எல்.ஏ.திஸநாயக்க, வேலணைப் பிரதேச செயலர் எம்.நந்தகோபாலன், செடெக் நிதிவளவாளர் றெலி பெரேரா, செடெக் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் கே.தெய்வேந்திரராஜா, செடெக் விநியோக முகாமையாளர் நெவ்மன் பெர்னாண்டோ, ஜே/10 கிராமசேவை அதிகாரி எஸ்.பத்தினேஸ்வரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (எ)

வீதி அகலிப்பின் போது

# மரபுரிமைச் சொத்துக்களை அழிப்பதற்கு எதிராக வழக்குத் தொடுக்க முடியும்

யாழ்ப்பாணம், ஏப்.28

வீதி அகலிப்பின்போது அழிக்கப்படும் எமது மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாப்பது குறித்து வழக்குத் தொடுக்க முடியும் என்று பேராசிரியர் இரா.சிவசந்திரன் தெரிவித்தார்.

ஆறுதல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் 'இலங்கையில் மரவுரிமைகளைப் பாதுகாப்போம்' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பா.அகிலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பேராசிரியர் சிவசந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வீதி அகலிப்பின்போது எமது பாரம்பரிய சொத்துக்களாகக் கருதப்படும் சொத்துக்கள் பல அழிந்துபோகவுள்ளன. குறிப்பாக நாவலர் பாடசாலை, வண்ணார் பண்ணைச் சிவன்கோயில், யாழ்.இந்துக் கல்லூரி ஆகியன.

நூறு வருடங்களுக்கு மேற்பட்ட கட்டடங்கள், தாவரங்கள் இவை அனைத்தும் மரபுரிமைச் சொத்துக்களாகப் பாதுகாக்கப் படவேண்டியவை. தற்போது அகலிப்பில் இருக்கும் காங்கேசன் துறை வீதியில் அதிகமான தொல்பொருள்கள் உள்ளன. அவற்றை அழிக்குமிடத்து எம்முடைய அடையாளங்களை இழக்கநேரிடும் அபாயம் ஏற்படுகிறது.

தொன்மைகளையும் பாரம்பரியங்களையும் பேணவேண்டும்; பாதுகாக்கவேண்டும் என்று அரசு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. ஆனால், வீதி அகலிப்புக்காக எமது தொன்மைகளை அழிப்பது வேதனைக்குரியது.

வழக்குகள் தொடர்வதன் மூலம் நிரந்தரத் தீர்வைக் காண வேண்டும். இல்லாவிட்டால் இந்த வழக்கு இழுபறிப்பட்டே செல்ல நேரிடும். எமது தொன்மைகளை அழிக்க எப்போதும் அனுமதிக்க மாட்டோம். - என்றார். (எ-311)

# இலவச மூக்குக் கண்ணாடி விநியோகம்

கிளிநொச்சி, ஏப். 28

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு. மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் கண்பரிசோதிக்கப்பட்டவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் முல்லைத்தீவு மாவட்டப் பொது மருத்துவமனையிலும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனையிலும் இந்தக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளவர்களின் பெயர் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டம்

கீர்த்தனன் (சின்னடம்பன், நெடுங்கேணி), எஸ். ராமசாமி (பழம்பாசி, நெடுங்கேணி), சிவலிங்கம் (பட்டுப்பூச்சி, பாலிநகர், வவுனிக்குளம், மல்லாவி), றேவதி அரியராசா (சிவன் கோயில், ஒட்டுசுட்டான்), சரவணமுத்து சிதம்பரநடராசா (யுனிட்-2 இ கோம்பாவில்), செல்வராசா சிறீரங்கன் (ராமனூர், புளியங்குளம்), வேதநாயகம் ஜெயக்குமார் (ஜெயபுரம், மல்லாவி), பூவாயி (மன்னன்கண்டல், வசந்தபுரம், புதுக்குடியிருப்பு), ஆர்.தயாபரன் (கைவேலி, புதுக்குடியிருப்பு), கமலேஸ்வரன் (புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு), செல்லத்துரை விநாயகமூர்த்தி (பழையவாடி றோட், புளியன்குளம்), சிறீதரன் மோகனராணி (யுனிட்-4, முள்ளியவளை), சோமசுந்தரம் சிவபாக்கியம் (மாங்குளம்), குழந்தைநாச்சி (முல்லைத்தீவு), அந்தோனிப்பிள்ளை அருளானந்தம் (நீலம்பிட்டி முள்ளியவளை, முல்லைத்தீவு), விஜியகாண் டீபன் விஜிதா (விநாயகபுரம், துணுக் காய்), ஜி.கஜனி (யுனிட்-2, அனிச்சியங்குளம், மல்லாவி), ஜெ.ஜெயராணி (தீர்த்தக்கரை, சிலாவத்துறை, முல்லைத்தீவு), சூரியகுமார் சுஜன் (மூங்கிலாறு, உடையார்கட்டு), சண்முகசுந்தரம் இராசமணி (இல, 98. கணேசபுரம், முத்து ஐயன்கட்டு, ஒட்டுசுட்டான்), சங்கரப்பிள்ளை சீவரட்ணம் (யுனிட்-4, புதுக்குடியிருப்பு), ராசையா அன்னம்மா (பணிக்கநீராவி, புளியன்குளம்), சித்திரவேல்குமார் (இடதுகரை, முத்து ஐயன் கட்டு), வேலுப்பிள்ளை சிவலிங்கம் (செம்மலை, அளம்பில், முல்லைத்தீவு), சோமசுந்தரம் கந்தசாமி (ஏ-9 றோட், புளியங்குளம்), பூச்சி முனியாண்டி, முத்து கதிர்வேல், பாக்கியராணி எஸ்தர், புஸ்பானந்தன் ரவி, வி.கலைச்செல்வி, திருமூர்த்தி, சந்திராணி, கோபட் மொரினோ சரோஜாதேவி, யாக்கோபு ஞானவதி, ஜெயராஜ் ரத்திணசிங்கம், ரி.பாக்கியநாதன், கே.வள்ளியம்மா, ராஜலக்சுமி, நிறோஜினி, ரதன், தணிகாசலம், ரி.சுகந்தி.

கிளிநொச்சி மாவட்டம்

ஆறுமுகம் சரஸ்வதி (உருத்திரபுரம், கிளிநொச்சி), வசந்தகுமார் (இல.14, சோலை பல்லவராயன்கட்டு), சி.சலோமி (இல.141/3, சாந்தபுரம், அம்பாள்நகர், கிளிநொச்சி), மைக்கலோடிபார் ஜெயமணி (ஜெயபுரம் தெற்கு, பூநகரி), நாராயணமுத்து மல்லிகாதேவி (உதயநகர், கிளிநொச்சி), சபாபதி சிறீதர் (யுனிட்-6, இராமநாதபுரம்), தர்மலிங்கம் தங்கேஸ்வரி (வட்டக்கச்சி), ஏ. இராசையா (சாந்தபுரம், கிளிநொச்சி), சுப்பையா தர்மகுலசிங்கம் (கோணாவில், கிளிநொச்சி), இராசரத்தினம் பாலசுப்பிரமணியம் (செல்வபுரம், கிளிநொச்சி), எஸ்.ஆனந்தராஜ் (கல்மடுநகர், கிளிநொச்சி), கந்தசாமி ரூபவதி (முரசுமோட்டை, கிளிநொச்சி), யோகலட்சுமி விஸ்வநாதன் (யுனிட்-6, இராமநாதபுரம்), இராசையா சந்ரோதயன் (கண்ணகிநகர், விசுவமடு), இராமலிங்கம் பரமேஸ்வரி (மயில்வாகனபுரம், பிரமந்தனாறு), சண்முகலிங்கம் (கோட்டைகட்டியகுளம், விடத்தையடி), கதிர்வேல் ராஜி (அம்மன் கோயிலடி, கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம்), கிருஸ்ணசாமி (ஆனைவிழுந்தான்), சிங்காரம் இராசமணி (இல. 109, கிருஸ்ணபுரம், கிளிநொச்சி), வீரசாமி இராமையா (கல்மடுநகர், இராமநாதபுரம்), பெருமாள் கந்தசாமி (2ஆம் வாய்க்கால் வில்சன்றோட், கிளிநொச்சி), மாயழகு ஜெயகாந்தன் (இல.60, ஜெயபுரம், பூநகரி), சின்னத்துரை பாக்கியராஜ் (யுனிட்-4, தர்மபுரம், கிளிநொச்சி).

## பயன்தரு மரக்கன்றுகள்

கிளிநொச்சி, கண்டாவளை ஊரியான் கிராமத்தில் மீளக்குடிய மர்ந்த குடும்பங்களுக்குப் பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

ஊரியான் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ள நிரந்தரக் காணிகளையும் கிணறுகளையும் கொண்ட குடும்பங்களுக்கு உலக உணவு ஸ்தாபனமும் யு.எஸ்.எயிட் நிறுவனமும் இணைந்து வாழை, பப்பாசி, கொய்யா, தென்னை, மாதுளை, எலுமிச்சை, பலா, மா, தோடை போன்ற பயன்தரு மரங்களையும் வழங்கியுள்ளன. சுமார் இருநூறு வரையான குடும்பங்களுக்கு இந்தப் பயன் தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## மருத்துவமனையைத் தேடி பல கி.மீ. அலையும் மீளக்குடியமர்ந்த வட்டக்கச்சி பிரதேச மக்கள்

வட்டக்கச்சி, ஏப்.28

வைத்தியர்களின் வருகைக்காக வட்டக்கச்சி வைத்தியசாலை தவம் கிடப்பதால் 11 கிலோமீற்றருக்கு அப்பால் சென்று தமது மருத்துச் சேவை யைப் பெறுகின்றனர் அந்தப் பகுதி மக்கள்.

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் ஆன நிலையிலும் வட்டக்கச்சி வைத்தியசாலை மூடிக் கிடப்பதால் அந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த பொது மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள வட்டக்கச்சிப் பகுதியில் இதுவரை 3 ஆயிரத்து 87 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளன.

இந்தப் பகுதி மக்கள் தமது மருத்துவச் சேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் 11 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டி உள்ளது.

மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டு இரண்டு வருடங்களைக் கடந்த நிலையிலு அந்தப் பகுதியில் உள்ள வட்டக்கச்சி அரசினர் வைத்தியசாலையில் நிரந்தர வைத் தியர் ஒருவர் இன்னும் நியமிக்கப்படாமையால் அந்த வைத்திய சாலை மூடிக்கிடக்கின்றது.

இந்த வைத்தியசாலையை மீளவும் இயக்குவதற்கான உரிய நட வடிக்கையை மேற்கொள்ள வேண்டு மெனஅந்தப் பகுதி மக்கள் பல்வேறு தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-9)

அம்பாள் துணை

### சிவாசார்யாபிஷேக அழைப்பு

சிவாசார்யாபிஷேகம் பெறுபவர்
**பிரம்மஸ்ரீ.சீ.ஸ்ரீசாரங்க சர்மா**

இடம்: பாணன்குளம் நாச்சியம்மன் கோயில் மண்டபம்- நல்லூர்.
முகூர்த்தம்- 29.04.2011 வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் 9 மணி வரை
தீக்ஷாகுரு : சிவஸ்ரீ தா.மஹாதேவக் குருக்கள் இணுவில்.
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சமேதரராக மேற்படி முகூர்த்தத்துக்கு வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபமஸ்து

ஆசி வழங்குபவர்:
பிரம்மஸ்ரீ ம.பத்மநாபசாஸ்திரிகள்
இந்தியா (மாமன்).

பிரம்மஸ்ரீ ஞா.சீதாராமகிருஷ்ண சர்மா (சீதா) தம்பதிகள்,
பிரம்மஸ்ரீ க.பிரபாகரசர்மா தம்பதிகள் (கனடா).

(40-20-21)(3563)

### மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



உயர்திரு.
**சபாபதி குகதாசன்** அவர்கள்
(உதவி அதிபர், இலங்கை ஆசிரியர் சேவை தரம்-I)

பணிச் சிறப்பு

- 03.06.1977 - 31.12.1979 வரை
  நு/றம்பொட தமிழ் மகா வித்தியாலயம்.
- 01.01.1980 - 31.12.1982 வரை
  பயிற்சி ஆசிரியர் சமூக விஞ்ஞானம்
  கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை.
- 01.01.1983 -14.06.1984 வரை
  மு/உடையார்கட்டு தமிழ் மகா வித்தியாலயம்
- 15.06.1984 - 31.01.1991 வரை
  யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்

01.02.1991 -25.06.2006 வரை
"பகுதித் தலைவர்"
யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

- 26.06.2006 -28.04.2011 வரை
  "உதவி அதிபர்"
  யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்

நல்லாசிரியராய், பகுதித் தலைவராய், உதவி அதிபராய் மிளிர்ந்து அரும்பணியாற்றி அகவை அறுபதில் ஓய்வுபெறும் எமது ஆசான் அவர்கள் மேன் மேலும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

(40-20-21)(3549)

### சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் கேள்வி அறிவித்தல் - 2011

**சாவகச்சேரி பிரதேச சபையால் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

01. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட் M-09,M08) பதிவு செய்யப்பட்டவர்கள் கீழ் குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்தி, கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்" என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.
03. ஒவ்வொரு கேள்விகளும் தனித்தனியாக உறையிலிடப்பட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டுக் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்ல் வேண்டும்.
04. கேள்விகள் பரிசீலிக்கப்படும்போது கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
05. கேள்விப்படிவம் வழங்கப்படும் இறுதித் திகதி: - 06.05.2011 பிற்பகல் 2மணிவரை, கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி:- 12.05.2011 நன்பகல் 12மணிவரை, கேள்விகள் திறக்கப்படும் திகதி:- அன்றையதினம் (12.05.2011) பிற்பகல் 1மணியளவில் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.
06. மேலதிக விவரங்களைச் சாவகச்சேரிப் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் (கொடிகாமம்) அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப் படிவப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத VAT + NBT 12%+3%ரூபா |
|---|---|---|---|---|
| 01 | மிருசுவில் பொதுச்சந்தைக்கு வேலி அமைத்தலும், கேற் பொருத்துதலும், கொட்டகை திருத்தமும். | 3,200.00 | 750.00 | 112.50 |
| 02 | கைதடி பொது நூலகத்துக்கு முன்பாகவுள்ள காணியில் சிறுவர் பூங்கா அமைத்தலும், நீர் வசதி ஏற்படுத்தலும் | 5,000.00 | 1,000.00 | 150.00 |
| 03 | வரணி இயற்றாலைச் சந்தைக்கு வேலி, கேற் அமைத்தல். | 2,250.00 | 750.00 | 112.50 |
| 04 | கொடிகாமம் மீன் சந்தை திருத்தம். | 3,000.00 | 750.00 | 112.50 |
| 05 | மிருசுவில் பொதுநூலகத் துக்கு லெவல் சீற் அடித்தல். | 3,800.00 | 750.00 | 112.50 |

சாவகச்சேரி பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
கொடிகாமம்.
27.04.2011

**தியாகராஜா தர்சினி**
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை.

(சி/77956) (45-21-26)

# மீன்பிடி உபகரணங்கள் எதுவும் இல்லை கண்டாவளை மீனவர் தொழிலின்றித் தவிப்பு

கண்டாவளை, ஏப்.28

கண்டாவளை உதவி அரச அதிபர் பிரிவில் வசிக்கும் மீனவர்கள் கடல்தொழிலில் ஈடுபடுவதற்குத் தேவையான உபகரணங்கள் இல்லாமையால் தொழிலுக்குச் செல்ல முடியாமல் வீண் பொழுது போக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடியால் வாழ்க்கையை நடத்த முடியாமல் பாதிக்கப்பட்டிருக்கும் இவர்கள், கடல்தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக மீன்பிடி உபகரணங்களைத் தந்துதவுமாறு கரைச்சி வடக்கு கடல்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் உதவி அரச பிரிவில் மீன்பிடித் தொழிலையே நம்பி வாழ்ந்து வந்த மீனவர்கள் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து பல மாதங்களுக்குப்பின் சொந்த இடங்களில் மீள் குடிமர்ந்துள்ளார்கள்.

வெறும் கையுடன் வந்த இவர்கள் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவதற்கு மீன்பிடி உபகரணங்கள் இல்லாமையால் வருமானமின்றி, வாழ்க்கை நடத்த முடியாமல் திண்டாடுகின்றார்கள்.

இவர்களின் வாழ்வாதாரத்தை வளம்படுத்தும் நோக்குடன் மீன்பிடி உபகரங்ணகளை வழங்கித் தொழிலில் ஈடுபட ஊக்குவிக்குமாறு சமாசச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை, இவர்கள் கடலுக்குச் சென்று தொழில் செய்ய வசதியாக, போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையிலுள்ள சுண்டிக்குளம் ஊடாக பேய்ப் பாரைப்பிட்டிக்குச் செல்லும் 18 கி.மீ. நீளமுள்ள -வீதியைப் புனரமைத்துத் தருமாறும் சமாசச் செயலாளர் கேட்டுள்ளார். (க-115)

## விசுவமடுவில் வங்கிக் கிளை

விசுவமடு, ஏப்.28

விசுவமடுவில் இலங்கை வங்கிக் கிளையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விசுவமடுச் சந்தியில் இந்த வங்கிக்கிளை கடந்தவாரம் முதல் இயங்க ஆரம்பித்தது. இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்கள் தமது வங்கித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கிளிநொச்சிக்கே சென்று வந்தனர். இதனால் இவர்களுக்குப் பண, நேர விரயம் ஏற்பட்டு வந்தன.

தற்போது விசுவமடுவிலேயே வங்கிக்கிளை அமைந்துள்ளதால் மக்கள் சிரமமின்றித் தமது வங்கிக் கடமைகளை ஆற்ற முடிகிறது. (க)

## ஆங்கில பாடப் பயிற்சி வழங்கல் தெரிவுப் பரீட்சை கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஏப்.28

ஆங்கிலபாட ஆசிரியர் அல்லாதவர்கள் ஆங்கிலப் பாடத்தைக் கற்பிக்கும் பொருட்டுப் பொருத்தமானவர்களைத் தெரிவுசெய்து பயிற்சி வழங்குவதற்கான தெரிவுப் பரீட்சையொன்று கிளிநொச்சியில் நடைபெறவிருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்தப் பரீட்சைமூலம் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி பெறும் ஆசிரியர்கள் கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் ஆங்கில பாடத்தைக் கற்பிப்பதற்கு நியமிக்கப் படுவார்கள்.

மேற்படி பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும். இந்தப் பரீட்சைக்கு ஏற்கனவே விண்ணப்பிக்கத் தவறிய ஆசிரியர்களும் தோற்ற முடியுமெனக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சிகளை வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழங்குகின்றது.

இந்த ஆங்கிலப் பயிற்சிகள் 10 மாதங்களுக்கு வழங்கப்பட இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-405)

என்றும் நினைவில் நிற்பவர்...



ஈழத்துக் காந்திக்கு அஞ்சலி: அமரர் தந்தை செல்வாவின் 34 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியா மணிக்கூட்டுச் சந்தியிலுள்ள அன்னாரின் சிலைக்கு மாலை அணிவிக்கப்படுகின்றது. (க)

## திக்காய்குளம் புனரமைப்புப் பணி விரைவில் ஆரம்பம்

அக்கராயன், ஏப்.28

கிளிநொச்சி வன்னேரிக் குளம் பகுதியிலுள்ள திக்காய்க்குளம் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் குளத்தின் புனரமைப்பு வேலைகளுக்கான மதிப்பீட்டுப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன் பணிகள் பூர்த்தியடையும்போது மேட்டு நிலத்தில் 20 ஏக்கரும், வயல் நிலத்தில் 20 ஏக்கரும் பயிர்செய்கை மேற்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் குஞ்சுக்குளத்தின் புனரமைப்புப் பணிகளும் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீடுகளும் பூர்த்தியான நிலையில் உள்ளன. இந்தக் குளத்தின் கீழுள்ள பெருமளவு வயல் நிலங்கள் உவரடைந்து காணப்படுகின்றன. குளம் புனரமைக்கப்பட்டு நீர்ப்பாசனம் நடைபெறும்போது உவரடையும் தன்மை குறைந்து விடுமென வன்னேரிக்குளம் விவசாயிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். திக்காய் குளம் புனரமைக்கப்படவுள்ள நிலையில் அதன் கீழ் புகழ்பெற்ற திக்காய் முனியப்பர் ஆலயம் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-410)

## கிளிநொச்சியில் அதிக மழை பெய்வதால் சிறுபோக நெற்செய்கை தீவிரம்

கிளிநொச்சி, ஏப்.28

கிளிநொச்சியில் பெய்துவரும் அதிக மழையைத் தொடர்ந்து விவசாயிகள் சிறுபோக நெற்செய்கைக்கான வேலைகளில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

வழக்கமாகக் குளத்து நீரை நம்பியே விவசாயிகள் சிறுபோக நெற்செய்கைகளில் ஈடுபடுவது வழக்கமாகும். விதைப்பிலிருந்து அறுவடை காலம்வரை குளங்களிலிருந்தே வயல்களுக்கு நீர்பாய்ச்சப்படும்.

ஆனால், இந்தமுறை அதிக மழை பெய்துள்ளதால் விவசாயிகள் வழக்கமாக மேற்கொள்ளும் பலயைடிப்பைக்கைவிட்டு புழுதி விதைப்பில் ஈடுபட்டுள்ளனர். பயிர்கள் முளைத்து வளரும் போது தொடர்ந்து மழை பெய்யாவிட்டால் இந்தப் பயிர்களுக்குக் குளங்களின் மூலம் நீர்பாய்ச்ச முடியும்.

ஆனால், கிளிநொச்சியில் பல குளங்கள் புனரமைக்கப்படாத நிலையிலும், வாய்க்கால்கள் சேதமடைந்த நிலையிலும் உள்ளதால் குளத்துநீர்பாசனத்தில் சிக்கல் ஏற்படலாமென்று கவலை தெரிவித்தனர். (க)

## குளங்களில் அதிகரித்த நீர்ப்பிடிப்பு

கிளிநொச்சியில் தொடர்ந்து பெய்துவரும் கோடை மழை காரணமாகக் குளங்களில் நீர்ப்பிடிப்பு அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் சிறுபோக நெற்செய்கையை முழு அளவில் மேற்கொள்ளமுடியுமென விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (க)

## பஸ் பயணியிடம் ரூ 90 ஆயிரம் திருட்டு

கிளிநொச்சி, ஏப்.28

பரந்தன் சந்தியில் இருந்து விசுவமடு நோக்கிப் பயணித்த பயணி ஒருவரிடமிருந்து 90 ஆயிரம் ரூபா பணம் களவாடப் பட்டுள்ளது.

கிளிநொச்சி முரசு மோட்டையைச் சேர்ந்த சுகந்தன் அனுஷா என்பவர் வங்கியில் இருந்து பணத்தை வீட்டுத்திட்ட வேலைக்கென எடுத்துச் சென்றபோது பரந்தன் சந்திக்கும் முரசு மோட்டைக்கும் இடையில் வைத்துப் பணம் பேருந்தில் களவாடப் பட்டுள்ளது.

இதுபோன்று பேருந்துகளில் களவுச் சம்பவங்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப் படுகின்றன. கடந்த வாரம் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்குப் பயணித்த ஒருவரிடம் ஒரு பவுண் சங்கிலி களவாடப்பட்டுள்ளது.

இதேபோன்று வங்கிக் கடனைச் செலுத்தவென சுமார் 75 ஆயிரம் ரூபாவைக் கொண்டு சென்ற ஒருவரிடம் அந்தப் பணம் களவாடப்பட்டுள்ளது. இவ்வாறு பேருந்துகளில் பயணிக்கும் பயணிகளிடம் என்றுமில்லாதவாறு திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. (க-6)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் மத்தியஸ்தர் சபை அமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.28

முல்லைத்தீவு மாவட்டத்திலும் அடுத்த மாதமளவில் பிரதேச செயலர் பிரிவுகளில் மத்தியஸ்தர் சபைகள் அமைக்கப்படவுள்ளன.

மத்தியஸ்தர் சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ப. சனாதனசர்மா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். நீதியமைச்சின் ஏற்பாட்டில் கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் பிரதேச செயலக ரீதியாக மத்தியஸ்தர் சபைகள் உருவாக்கப்பட்டன.

வன்னிப் பகுதியில் கடந்த காலங்களில் இடம்பெற்ற போர் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த மத்தியஸ்தர் சபைகள் அமைக்க முடியாமல்போனது.

போர் முடிவடைந்து இரண்டு வருடங்களை எட்டியுள்ள நிலையில் இந்த மாவட்டங்களில் மத்தியஸ்தர் சபைகள் அமைக்கப்படவுள்ளன.

கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் முதற் கட்டமாக மத்தியஸ்தர் சபைகளை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## மண் அணை, மிதிவெடி அகற்றும்பணி

அக்கராயன், ஏப்.28

கிளிநொச்சி அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பை ஊடறுத்துச் செல்லும் மண் அணை மற்றும் மிதிவெடிகள் என்பன வற்றை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 11 மாதங்களாக இந்த மண் அணையும் மிதிவெடிகளும் அகற்றப்படாமல் இருந்தமையால் மக்கள் மீள்குடியமர முடியாத நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் மக்கள் மீண்டும், மீண்டும் விடுத்த வேண்டுகோளையடுத்து மண் அணை அழிக்கப்பட்டு மிதிவெடிகளை அகற்றும் பணியில் மனிதநேய கண்ணி வெடியகற்றும் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, வன்னேரிக் குளம், ஆனைவிழுந்தான்குளம் ஆகிய பகுதிகளில் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் அக்கராயன் பிரதேசத்தில் மிதிவெடிகள் அபாயம் நிறைந்த பகுதிகளாகப் பல இடங்கள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளன. இராணுவத்தினரும் மிதிவெடி அபாயம் தொடர்பாக மீளக்குடியமர்த்த மக்களும் விழிப்புணர்வூட்டி வருகின்றனர். (க-410)

# தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வு; ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்தாகும்

## இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவிப்பு

நுவரெலியா, ஏப்.28

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு சம்பந்தமான புதிய ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதியொருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பழைய ஒப்பந்தம் இந்த வருடம் மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் காலாவதியானது. புதிய ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும்.

இந்த ஒப்பந்தத்தில் தோட்டத்தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாளாந்த சம்பளம் 500 ரூபாவாகவும் அதற்கேற்ப இதர கொடுப்பனவுகளும், பெண் தொழிலாளர்களின் நாளாந்த வேலை நேரம் ஆறு மணித்தியாலங்களாகவும் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இந்தப் புதிய ஒப்பந்தம் சம்பந்தமாக முதலாளிமார் சம்மேளனத்துடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், இலங்கைத் தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கம், தோட்டத்தொழிலாளர்களின் ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் அண்மையில் கொழும்பில் பேச்சு நடத்தியுள்ளனர் - என்றார். (ச-5)

# ஆர்ப்பாட்டம்

கண்டி, ஏப்.28

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான்கீ மூனின் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கண்டியில் நேற்று முன்தினம் பிற்பகல் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.

அரசியல் கட்சியொன்றின் ஆதரவாளர்களால் ஏற்பாடுசெய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டமானது கண்டி, ஜோர்ஜ் டி சில்வா பூங்காவுக்கு முன்னால் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் 'பான் கீ மூன் அளவுகடந்து இலங்கையில் தலையிடுகிறார் என்றும், அதனை உடனே நிறுத்த வேண்டும் என்றும் கோஷமிடப்பட்டது.

# மாநகர சபை உறுப்பினர் நியமனம்

காணாமல் போன மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர் பிரகாசம் சகாயமணிக்குப் பதிலாக சந்திரசேகரன் ஜோன்சன் திலிப்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய உறுப்பினரான சந்திரசேகரன் ஜோன்சன் திலிப்குமார் மாநகர மேயர் சிவகீதா பிரபாகரன் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு நகரில் வைத்து இனந்தெரியாத நபர்களால் பிரகாசம் சகாயமணி கடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நான்கு கைதிகள் தப்பியோட்டம்

திருகோணமலை,ஏப்.28

திருகோணமலை சிறைச்சாலையிலிருந்து நான்கு சிறைக்கைதிகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு தப்பியோடியுள்ளதாக சிறைச்சாலை அதிகாரி தெரிவித்துள்ளார்.

தர்மகுமார், ஜெஸ்ரின், சுரேஷ் குமார், அலி ஆகிய சிறைக்கைதிகளே நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 10.30 மணியளவில் தப்பிச் சென்றுள்ளனர்.

சிறைச்சாலையின் பின்புறமாகவுள்ள யன்னலை உடைத்துக்கொண்டு வெளியில் சென்ற இந்த சிறைக் கைதிகள், மதிலின் மேல் போர்வையை தொங்கவிட்டு அதன் மூலம் ஏறித் தப்பியோடியுள்ளனர்.

தப்பியோடியுள்ள இந்த நான்கு பேரையும் உடனடியாக கைது செய்யுமாறு திருகோணமலை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இவர்களைத் தேடும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் (ச)

# தோட்ட சேவையாளர் சங்க மே தினக் கூட்டம் கண்டியில்

கண்டி, ஏப்.28

இலங்கைத் தோட்ட சேவையாளர் சங்கத்தின் இந்த வருடத்துக்கான மே தினக் கூட்டம் கண்டி நகரில் இடம் பெறவிருப்பதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் நாத் அமரசிங்க அறிவித்துள்ளார்.

மே தினத்தன்று சங்க உறுப்பினர்கள் அனைவரும் காலை 9 மணிக்கு கண்டி போகம்பரை மைதானத்தில் ஒன்று கூடுவார்கள். பின்னர் தலதா வீதி, ராஜவீதி, வில்லியம் கோபல்லாவ மாவத்தை என்பவற்றினூடாக ஊர்வலமாகச் சென்று வை.எம்.பி.ஏ மண்டபத்தை அடைவார்கள். முற்பகல் 10.30 மணிக்குக் கூட்டம் ஆரம்பமாகும்.

இந்த நிகழ்வில் சங்கத்தின் தலைவர் தஸன் தம்பிக்க ஜெயவர்த்தனா, பொதுச் செயலாளர் நாத் அமரசிங்க, பொருளாளர் ஜி.கே. கருணாரத்ன, பிரதித் தலைவர் அன்ரன் வர்ணகுலசூரிய , உப தலைவர்களான எஸ். எஸ். ஜெயக்குமார், டி.எம். பியதிலக்க ஆகியோர் கலந்துகொண்டு உரைநிகழ்த்தவுள்ளனர்.

கடந்த 90 ஆண்டுகளாக நிலைத்துச் செயற்படும் ஒரு தொழிற்சங்கமாக இலங்கைத் தோட்டச் சேவையாளர் சங்கம் விளங்குகிறது. இந்தப் பழைமை வாய்ந்த தொழிற்சங்கம் மாதாந்த ஊதியம் பெறும் பெரும்பான்மையான தோட்டத் தொழில்துறை உத்தியோகத்தர்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

இந்த ஆண்டு மே தினத்திற்கான கருப்பொருளாக 'தொழிற்சங்கத்தின் ஒற்றுமை மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளை அடைவதற்கு முன்னோக்கிய நடைப் பயணம்' என்பவை இருக்கும் என்றும் பொதுச் செயலாளர் மேலும் அறிவித்துள்ளார். (க)

# நிபுணர் குழு அறிக்கைக்கு மட்டு. மாநகரசபை கண்டனம்

மட்டக்களப்பு,ஏப்.28

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக மட்டக்களப்பு மாநகரசபை கண்டனத் தீர்மானமொன்றை நேற்று புதன்கிழமை நிறைவேற்றியுள்ளது.

நேற்று புதன்கிழமை காலை மட்டக்களப்பு மாநகர மேயர் திருமதி சிவகீதா பிரபாகரன் தலைமையில் ஒன்றுகூடிய மாநகரசபை உறுப்பினர்கள் இந்தக் கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றினர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகியவற்றை சேர்ந்த உறுப்பினர்கள் கண்டனப் பிரேரணை அங்கீகாரத்தின்போது அமர்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈரோஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை. (ச-21)

# அதிக நோய்கள் ஏற்படுவதற்கு மன அமைதியின்மையே காரணம்

## நரம்பியல் விசேட வைத்திய நிபுணர் தெரிவிப்பு

கண்டி, ஏப்.28

அதிக நோய்கள் ஏற்படுவதற்கு மன அமைதியின்மையே முக்கிய காரணமென நரம்பியல் விசேட வைத்திய நிபுணர் சமிந்த வீரசிறிவர்தன தெரிவித்துள்ளார்.

கலாசார மத்திய நிதியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட குடும்பப் பிணக்குகள் தொடர்பான விசேட செயலமர்வு கண்டி தகவல் மையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், மதக்கொள்கைகளின் மூலம் மனதைக் கட்டுப்படுத்தினால் மனிதன் சுகதேகியாக வாழமுடியும்.

மனக்கட்டுப்பாடற்ற நிலை மற்றும் மன அமைதியின்மை ஆகியவற்றால் பல்வேறு புதுப்புது நோய்கள் தோன்றுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கவலை, கோபம், மகிழ்ச்சி, குரோதம், படபடப்பு, ஆசை போன்ற சில குணவியல்புகள் காரணமாக சுமார் 240இற்கும் மேற்பட்ட மனவெழுச்சி வடிவங்கள் பட்டியல் படுத்தப்பட்டுள்ளன - என்றார். (ச)

**2ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

மலர்வு 18 ★ 05 ★ 1964



உதிர்வு 20 ★ 04 ★ 2009



மலர்வு 27 ★ 10 ★ 2000

தே. ஞானசோபனை

தே. ரேனிதா

ஞாலத்தில் பிறந்து ஞானம் என்ற பெயருடன்
கோலத்தின் விளையாட்டால் ரேனிதா என்னும் மகளைப் பெற்று
காலத்தின் சதியால் காலன் அவன் உங்களைப் பறித்து விட்டான்
ஊனில் இருந்து உயிர் பிரியும் வேளை என்ன நினைத்தாயோ? யார் அறிவார்?

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(3565)
தந்தை, கணவர்,
சகோதரர்கள்.

**குறைந்த விலையில் விற்பனையாகிறது**

3 ரக்டர் கட்டுமணல் 22, 000/=, 4 ரக்டர் கட்டுமணல் 25, 000/=, 3 ரக்டர் பூச்சுமணல் 23, 000/=, 4ரக்டர் பூச்சுமணல் 26, 000/=, 1 சிமெந்துக்கல் 40/=, சல்லி போட்டது 44/=

தொடர்பு:-0776253719.

**பூநகரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

**அறிவித்தல்**

எமது சங்கம் தனது செயற்பாடுகளை மீளவும் ஆரம்பித்துச் செயற்பட்டு வருகின்றது. இதுவரை பணிக்குத் திரும்பாத அனைத்துப் பணியாளர்களும் 20.05.2011 ஆம் நாளுக்கு முன்னதாக பணிக்குத் திரும்புமாறும் அவ்வாறு சமுகம் தராத பட்சத்தில் தாங்களாகவே பதவி விலகியதாகக் கருதப்படும் என்பதனையும் அறியத் தருகின்றேன்.

'' பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி''

கூட்டுறவு சேவையிலுள்ள
பொது முகாமையாளர். (3546)

தென்மராட்சி, கொடிகாமம், கச்சாய் றோட், கச்சாய் அரசினர் பாடசாலைக்கு அருகில் எதிர்கால முதலீட்டுத் திட்டத்துக்கு ஏற்றவகையில் பெரிய நிலப்பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ள:-
0750476078, 0772021691, 0247911178.




**மரண அறிவித்தல்**

**திலலையம்பலம் முத்தம்மா**

5ஆம் வட்டாரம், இறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், தற்போது 3ஆம் வட்டாரம், பெருங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் முத்தம்மா 24.04.2011 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் நாகநாதி தில்லையம்பலத்தின் அன்பு மனைவியும் குணரட்ணம் (நாதன்), சிவபாலன் (வசந்தன்), ஜெயரட்ணம் (ஜெயா), திருக்குமார், உருத்திரசீலன், ஈஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் திருமகள், யோகமலர், ஜெயலட்சுமி, சித்திரா, இராஜநிதி, செல்வராசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் நிதர்சன் (கனடா), இலக்சனா, பாகீஸ்வரன், கஜானன், கஜீபன், ஜெயலக்சன், அனித்தா, தர்சனா, அருள்குமரன், நிவேதா, கேசிகன், நிபுணன், காவியன், அஸ்வின் (கனடா), ஜானு (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2011) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக முனைவுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்

5ஆம் வட்டாரம்,
பெருங்காடு.
(3564)

# ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாகத் தவறான தகவல்களை வழங்கியோருக்குத் தண்டனை

## கிழக்கு கல்விப் பணிப்பாளர் நிஸாம் அறிவிப்பு

பொத்துவில், ஏப்.28

''ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாகப் பல பாடசாலைகளும் கல்வி வலயங்களும் பிழையான தகவல்களை வழங்கியுள்ளன. எனவே, இந்தப் பிழையான தகவல்களை வழங்கியோருக்குத் தண்டனை வழங்கப்படும்.''

இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிஸாம்.

பொத்துவில் பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு, கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளவுள்ள ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு :

இதுவரை காலமும், கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளதாகவே எமக்குக் கூறப்பட்டு வந்தது. எந்தப் பாடசாலைக்குச் சென்றாலும், அங்கு ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. அதை நிவர்த்தி செய்து தருமாறு எம்மிடம் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன.

பாடசாலைகளும், கல்வி வலயங்களும் தருகின்ற தகவல்களை அடிப்படையாக வைத்தே ஆசிரியர்கள் பற்றிய தொகை மதிப்பீட்டை நாம் மேற்கொள்வதுண்டு. ஆனால், அநேகமான பாடசாலை நிர்வாகங்களும், கல்வி வலயங்களும் ஆசிரியர் கணக்கெடுப்புத் தொடர்பில் எமக்குப் பிழையான தகவல்களையே வழங்கி வந்திருக்கின்றன. அந்தத் தகவல்களின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் ஆயிரம் முதல் ஆயிரத்து 500 ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகிறது எனக் கூறப்பட்டது.

ஆனால், ஒவ்வொரு வலயத்துக்கும் அண்மையில் நாம் நேரடியாகச் சென்று அந்தந்த வலயங்களில் சம்பளம் பெறுகின்ற ஆசிரியர்களைக் கணக்கெடுக்கும் நடவடிக்கையொன்றில் ஈடுபட்டோம்.

அதன்போது, எமக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த தகவல்கள் பிழையானவை என்பதை நாம் அறிந்து கொண்டோம். கிழக்கு மாகாணத்தில் சுமார் 2 ஆயிரத்து 254 ஆசிரியர்களின் தகவல்கள் திட்டமிட்டு மறைக்கப்பட்டிருந்தமையை அதன்போது நாம் கண்டுபிடித்தோம்.

இவ்வாறு நாம் நேரடியாகப் பெற்றுக் கொண்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரித்த கணக்கெடுப்பின் பிரகாரம் கிழக்கு மாகாணத்தில் ஆயிரத்து131 மேலதிக ஆசிரியர்கள் உள்ளனர் என்பதை அறிந்து கொண்டோம்.

எனவே, மேலதிகமாகவுள்ள ஆசிரியர்களை வலயத்துக்குள், வலயத்துக்கு வெளியில் என்கிற இரண்டு முறையில் நாம் இடமாற்றம் செய்யவுள்ளோம். மேலும் இந்த இடமாற்றம் ஒழுங்கு மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த இடமாற்றம் என்னுடைய திட்டமல்ல. ஆளுநரின் கட்டளைக்கிணங்கவே இந்த இடமாற்றம் இடம்பெறவுள்ளது. கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோரின் அங்கீகாரமும் இந்த இடமாற்றத்துக்குக் கிடைத்திருக்கின்றது.

எதிர்வரும் மே மாதத்துக்குள் இந்த இடமாற்றங்கள் செய்து முடிக்கப்படும் -என்றார். (ச)

## நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக சப்ரகமுவ மாகாண சபையில் தீர்மானம்

பதுளை,ஏப்.28

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர்குழுவின் அறிக்கைக்கு எதிரான தீர்மானம் சப்ரகமுவ மாகாண சபையில் நேற்றுமுன்தினம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானம் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கி மூனுக்கு அனுப்பி வைக்கப்படும் என சபையின் தவிசாளர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார். ஜே.வி.பியின் மாகாணசபை உறுப்பினர் ரஞ்சித் பிரியந்த குமாரவும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக முதலமைச்சரினால் முன்வைக்கப்பட்ட இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார். (ச)

## சூழலை மாசுபடுத்துவோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

கண்டி,ஏப்.28

கண்டி நகர்ப் பிரதேசத்தில் கழிவுப் பொருள்களை வீசி இயற்கை எழிலையும் சூழலையும் மாசுபடுத்துவோர் மீது எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு செயற்படும் நபர்களைக் இனங்கண்டு அவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தின் முன் நிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கண்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுர சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி நகரைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டியது பிரதேச மக்களின் பொறுப்பாகும் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

## வீதி புனரமைப்பு நிறுத்தம்; மக்கள் பயணிப்பதில் சிரமம்

அம்பாறை,ஏப்.28


அட்டாளைச்சேனைப் பிரதேசத்திலுள்ள கிரவல் வீதிகள் பலவற்றைக் கொங்கிறீட் வீதிகளாக அமைத்துத் தருவதாகக்கூறி, குறிப்பிட்ட வீதிகளிலுள்ள மண் மற்றும் கிறவல்கள் தோண்டியெடுக்கப்பட்ட பின்னர் அந்த வீதிகள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

இந்த வீதிகளில் தற்போது பெய்துவருகின்ற மழை காரணமாக வெள்ளம் தேங்கியுள்ளதால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலையொட்டி அட்டாளைச்சேனையிலுள்ள கிரவல் வீதிகள் பலவற்றைக் கொங்கிறீட் வீதிகளாக அமைத்துத் தருவதாகக் கூறி, அதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. சில அமைச்சர்கள் வாக்குறுதியளித்து, இதற்கான நினைவுக் கற்களையும் நட்டனர். ஆனால், ஒரு மாதம் கடந்த நிலையிலும் இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் கைவிடப் பட்ட நிலையிலுள்ளன.

இந்த வீதிகள் ஆழமாகத் தோண்டப்பட்டுள்ளதால், தற்போது பெய்யும் மழையால் அதிகளவு வெள்ளம் தேங்கியுள்ளது. இதனால், இந்த வீதியால் செல்லும் பாடசாலை மாணவர்களின் சீருடைகள் அழுக்கடைவதுடன், இரவு வேளைகளில் பயணிக்கும் பொதுமக்கள் விபத்துக்குள்ளாகின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது. இந்த வீதிகளை உடனடியாக கொங்கிறீட் வீதிகளாக அமைப்பதற்கு உரியவர்கள் கவனமெடுக்க வேண்டுமென அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.(ச)

**தந்தைக்கு அஞ்சலி...**



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வநாயகத்தின் 34 ஆவது நினைவு தின நிகழ்வு நேற்றுமுன்தினம் திருகோணமலை சிவன்கோயிலுக்கு அண்மையில் உள்ள அன்னாரின் நினைவாலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் தந்தை செல்வாவின் நினைவுச்சிலைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் , திருமலை நகரசபையின் தலைவர் க.செல்வராஜா ஆகியோர் இணைந்து மலர் மாலை அணிவித்தனர். (ச)

## காற்றுடன் கூடிய மழை; மின்சாரம் தடை

மட்டக்களப்பு,ஏப்.28

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடிப் பிரதேசத்தில் பெய்த காற்றுடன் கூடிய பலத்த மழை காரணமாக அந்தப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவில் இருந்து மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

அம்பாறை - வீரக்கொட பிரதேசத்தில் காற்றுக் காரணமாக மின்கம்பத்தின் மீது மரமொன்று முறிந்து வீழ்ந்துள்ள நிலையில் மின்சாரம் தடைப்பட்டுள்ளதாக மின்சாரசபையின் களுவாஞ்சிக்குடி அலுவலகம் தெரிவித்துள்ளது. தற்போது திருத்த வேலைகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## டெங்கு நோய்த்தாக்கம் வேகமாக அதிகரிப்பு; மட்டக்களப்பில் 254 டெங்கு நோயாளர்கள்

மட்டக்களப்பு,ஏப்.28

மட்டக்களப்பு, கோறளைப்பற்று மேற்கு பிரதேசசபைப் பிரிவில் வேகமாகப் பரவிவரும் டெங்கு நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் ஓட்டமாவடி பிரதேச சபைக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் முதல் கடந்த வாரம் வரையிலிருந்து பெறப்பட்ட தகவலின்படி 254 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் 5 பேர் மரணமடைந்துள்ளனர். ஓட்டமாவடி பிரதேசசபை எல்லைக்குள் 54 டெங்குநோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ். சதுர்முகம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில், எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் பொலிஸார், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பிரதேச சபை சமூகசேவை அமைப்புக்கள், விளையாட்டுக்கழகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து பிரதேசத்தின் அனைத்து வீடுகளுக்கும் சென்று டெங்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

ஓட்டமாவடி பிரதேசசபைத் தவிசாளர் கே.பி.எஸ்.ஹமீட் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ். சதுர்முகம், கோறளைப்பற்று மேற்கு மற்றும் கோறளைப்பற்று மத்தி ஆகியவற்றின் சுகாதார வைத்திய அதிகாரி எம். அர்ச்சுதன், சுகாதாரப் பரிசோதகர்கள், ஓட்டமாவடி பிரதேசசபையின் உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், பொலிஸார், பள்ளிவாசல் தலைவர்கள், பொது அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

## கண்டியில் குற்றச் செயல்களைத் தடுக்க பொலிஸ் துரித சேவைப்பிரிவு ஆரம்பம்

கண்டி,ஏப்.28

கண்டியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இடம்பெறும் வீடுடைப்பு மற்றும் கொள்ளை போன்ற குற்றச்செயல்களை ஒழிப்பதற்காக கண்டி பொலிஸ் தலைமையகம் மூலம் விசேட துரித அதிரடி சேவைப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என மத்திய பிராந்தியத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களில் கண்டியின் பல பிரதேசங்களில் குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்பட்டன. இவற்றுடன் தொடர்புடைய பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறான குற்றச் செயல்களை ஒழிப்பது குறித்து கண்டி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் ஒன்றுகூடிக் கலந்தாலோசித்த பின்னர், விசேட துரித அதிரடி சேவைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவை கண்டி, கட்டுகஸ் தோட்டை, தெல்தெனிய, பேராதனை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் தற்போது செயற்பட ஆரம்பித்துள்ளது என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# அஞ்சல் மத்திய பரிவர்த்தனை நிலையத்தில் நாளாந்தம் 50,000 தபால்கள் தேக்கம்

கொழும்பு, ஏப்.28

அஞ்சல் மத்திய பரிவர்த்தனை நிலையத்தில் நாளாந்தம் சுமார் 50,000 தபால்கள் தேங்குகின்றன என அஞ்சல் தொலைத் தொடர்புத்துறை தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாளாந்தம் 10 தொடக்கம் 12 லட்சம் சாதாரண மற்றும் பதிவுத் தபால்கள் மத்திய பரிவர்த்தனை நிலையத்துக்கு வருகின்றன. இவற்றை அனுப்ப வேண்டிய இடங்களுக்கு பிரித்து அனுப்பும்போது நாளாந்தம் 50,000 தபால்களை அனுப்பமுடியாமல் போவதால் அவை தேங்குகின்றன. மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தில் ஊழியர்களின் பற்றாக்குறை நிலவுவதே இந்தத் தேக்க நிலைக்குக் காரணம்.

இந்த நிலையை நிவர்த்தி செய்வதற்காக தற்போது பணியிலுள்ள ஊழியர்களுக்கு மேலதிக வேலைக் கொடுப்பனவாக பெருந்தொகைப் பணம் செலவிடப்படுகிறது என அஞ்சல் தொலைத் தொடர்புத்துறை தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

தகுதி வாய்ந்த இளைஞர் - யுவதிகளுக்குத் துரிதமாக நியமனம் வழங்கினால் மட்டுமே இந்த நிலையை நிவர்த்தி செய்ய முடியும் என அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

## யூரி ககாரின் நினைவாக...



*மனிதத் தடங்கள்:* யூரி ககாரியின் விண்வெளிப் பயணத்தின் 50 ஆண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பு, கோல்பேஸ் ஹோட்டலில் ரஷ்ய தூதரகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வின்போது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள புகைப்படங்களை பிரதமர் டி.எம்.ஜெயரத்ன உள்ளிட்ட குழுவினர் பார்வையிடுகின்றனர். (ச)

# பொலன்னறுவை வைத்தியசாலை மருத்துவர்கள் வேலை நிறுத்தம்

கொழும்பு, ஏப்.28

பொலன்னறுவை வைத்தியசாலையில் பணிபுரியும் சகல வைத்தியர்களும் நேற்று முன்தினம் முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வைத்தியர்களுக்கான புதிய கட்டடத்தின் ஓய்வறையை பெண் தாதியொருவர் பலாத்காரமாக ஆக்கிரமித்துள்ளதைக் கண்டித்தே இந்த வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் பொலன்னறுவைக் கிளைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வைத்தியர்களுக்கான ஓய்வறையை குறிப்பிட்ட தாதியிடமிருந்து மீட்டுத் தரும்படி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அஜித் மெண்டிஸ் மற்றும் சுகாதார அமைச்சு செயலாளர் டாக்டர் ரவீந்திர ருபேரு ஆகியோரிடம் பல முறை வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் இதுவரை சாதகமான முடிவுகள் எடுக்கப்படவில்லை. இந்த ஓய்வறை மீட்டு தரப்படும் வரை போராட்டம் தொடரு மெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வைத்தியர்களின் இந்தப் பணிப் பகிஷ்கரிப்பினால் சுமார் 1,500 நோயாளிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். (ச)

# இலங்கையில் திட்டங்களுக்கு தடங்கல்; வெளிவந்த செய்திக்கு இந்தியா மறுப்பு

கொழும்பு,ஏப்.28

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் இந்தியாவினால் அமைக்கப்பட்டு வரும் 50 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் எவ்வித தடங்கல்களும் ஏற்படவில்லை என்று இந்தியா அறிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவராலயம் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இந்தியா மேற்கொள்ளும் திட்டங்களுக்கு இலங்கை அரசு தடங்கல்களை ஏற்படுத்தியுள்ளதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதன் காரணமாகவே பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் இந்தியா மௌனத்தைக் கடைப்பிடிப்பதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையிலேயே இந்தியத் தூதுவராலயம் தமது கருத்தை வெளியிட்டுள்ளது.

தமது திட்டங்களுக்குத் தடங்கல் என்று கூறப்பட்ட செய்தி பிழையானதாகும். தமது வீட்டுத் திட்டத்தின் மூலம் இந்த ஆண்டின் இறுதியில் வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் பயனடைவர் என்று தூதுவராலயம் தெரிவித்துள்ளது. (ச)

# வீதி விபத்துக்களைத் தடுக்க புதிய கொள்கை

கொழும்பு, ஏப்.28

வீதி விபத்துகளைத் தடுக்கும் வகையில் புதிய கொள்கை ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி குறித்த கொள்கை அறிமுகப்படுத்தப்படும் என வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் முன்னாள் அமைச்சர் மனோ விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

நாளாந்த வீதி விபத்துகள் காரணமாக 10 பேர் உயிரிழந்திருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விபத்துகளை குறைப்பதற்கென எதிர்வரும் 11ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வெளியிட்டு வைக்கப்படவுள்ள புதிய கொள்கையில் 5 நிபந்தனைகள் காணப்படும் என்றும்அவர் தெரிவித்துள்ளார். (ச)

# புத்தளம் பிரதேச சபைக்கான தேர்தலை மீண்டும் நடத்தக்கோரி மனுத்தாக்கல்

கொழும்பு,ஏப்.28

கடந்த மாதம் 17 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின்போது புத்தளம் வாக்களிப்பு நிலையமொன்றில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. இதன் காரணமாக புத்தளம் பிரதேச சபைக்கான தேர்தல் மீண்டும் நடத்தப்படவேண்டும் என்று கோரும் ஆட்சேபனை மனு ஒன்று புத்தளம் மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புத்தளம் அட்டவில்லு கிராமத்தைச் சேர்ந்த முஹாந்திரம் முதியான்சலாகே பிரியலால் என்பவர் சட்டத்தரணி இஸ்தி அசிப் இக்பால் ஊடாக இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

மனுவில் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணையாளர், புத்தளம் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி, வாக்குகள் கணக்கிடும் அதிகாரி, வாக்கெடுப்பு பிரதான அதிகாரி, புத்தளம் பிரதேசசபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தேர்தல் தினத்தன்று புத்தளம் கல்லடி கிராமத்திலுள்ள வித்தியா சகர வித்தியாலய வாக்களிப்பு நிலையத்தில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என மனுதாரர் தமது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். (ச)

# நீரிழிவு நோய்க்கான மருந்து சகல வைத்தியசாலைகளிலும்

கொழும்பு,ஏப்.28

சிறுநீரகங்கள் மாற்றீடு செய்யப்பட்ட நோயாளிகளுக்கு அவசியமான 'சைக்லொஸ் போரின்' எனும் மருந்து சகல வைத்தியசாலைகளுக்கும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்பட்டுள்ளதாக அரச மருந்துகள் உபகரணங்கள் விநியோகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சிறுநீரகங்கள் மாற்றீடு செய்யப்பட்ட பின் அவற்றை நோயாளியின் உடல் ஏற்றுக் கொள்வதற்கு இடமளிக்காத போது 'சைக்லொஸ் போரின்' வில்லைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

இரு இந்திய மருந்து நிறுவனங்களில் இருந்து 3 லட்சம் வில்லைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மருந்து உபகரண விநியோகப் பிரிவின் பணிப்பாளரான டாக்டர் சுமல் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலங்களில் இந்த மருந்துக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டால் அதிகளவு நோயாளிகள் சிரமங்களுக்கு முகம் கொடுத்தனர்.

அதனை நிவர்த்தி செய்வதற்காக நேற்று முன்தினம் சகல வைத்தியசாலைகளுக்கும் போதியளவு வில்லைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# சத்திய சாயி பாபாவின் மறைவு ஆன்மிக உலகுக்கே பேரிழப்பு

## இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.28

இந்த நூற்றாண்டில் உலகின் பல லட்சக்கணக்கான பக்தர்களை ஈர்த்திருந்த பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் மறைவு அவருடைய பக்தர்களுக்கு மட்டுமல்லாது ஆன்மிக உலகுக்கே மிகப் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது - என இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பாபாவின் மறைவு குறித்து அனுப்பியுள்ள செய்தியில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

பாபா ஒரு தனிமனிதராகக் கருதப்பட்டாலும் அவரை நம்பிய பக்தர்கள் ஒரு இறை அவதாரமாகவே பாபாவை வழிபட்டனர். அவரைத் தரிசித்து மனமுருகி வேண்டுவதால் அனைத்துத் துன்பங்களும் தீர்ந்து தமது வாழ்வு வளம்பெறும் என நம்பினர். பல்லாயிரக்கணக்கானோருக்கு அந்த நம்பிக்கை தொடர்ந்தும் இருந்து வருகின்றமை கண்கூடான விடயமாகும்.

பாபா தமது பக்தர்களை ஆன்மிக வழியில் ஈடுபடுத்தியவர் மட்டுமல்லாது பல துறைகளிலும் சமூக சேவைகளைச் செய்தவராகவும் போற்றப்படுகின்றார். கல்வி, மருத்துவம், கலை, அறிவியல் போன்ற துறைகளில் அளப்பரிய சேவைகளை அவர் ஆற்றியுள்ளார். அவர் நிறுவிய கல்லூரிகளும் மருத்துவமனைகளும் உலகப் புகழ் பெற்றவையாக விளங்குகின்றன.

எந்தவொரு மதத்தினரையும் தமது மதத்தை மாற்றிக் கொள்ளுமாறு அவர் ஒருபோதும் வற்புறுத்தியதில்லை. அவரவர் மதத்தில் உயர்ந்த தத்துவங்களை அவ்வாறே பின்பற்றிப் பேணுமாறு வலியுறுத்தினார்.

இங்ஙனம் ஒரு தனிமனித இயக்கமாக வாழ்ந்து எண்ணிப் பார்க்க இயலாத அளவு அரும்பெரும் சாதனைகளை இயற்றிய பாபாவின் தூல சரீரம் மறைந்தாலும் அவரை வணங்கிய பக்தர்கள் எப்போதும் அவரது அருளும், கருணையும், அன்பும் நிரந்தரமாக கிடைக்குமென நிச்சயமாக நம்புகின்றனர். அந்த நம்பிக்கையிலும், பிரார்த்தனைகளிலும் நாமும் இணைந்து கொள்கின்றோம் - இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)



நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெற்ற யோகர் சுவாமிகள் குருபூசை நிகழ்வில் தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவர்கள் சுவாமிகளது கீர்த்தனைகளை இசைக்கின்றனர். வைத்திய கலாநிதி சி.ஜமுனாநந்தா மற்றும் ஆறு. திருமுருகன் ஆகியோரும் உள்ளனர்.

# சேவை செய்யும் மனப்பான்மையை விரதங்கள் கற்றுத் தருகின்றன

யாழ்ப்பாணம்,ஏப்.28

கடவுள் பற்றிய சிந்தனையை அதிகரிக்கச் செய்வதுடன் அனைத்து ஜீவராசிகளுக்கும் சேவை செய்யவேண்டும் எனும் மனப்பக்குவத்தையும் விரதங்கள் கற்றுத் தருகின்றன.

விரதத்தால் உடலும் உளமும் சுத்தமடைகின்றன.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். சின்மயா மிஷன் நிறுவனத்தைச் சேர்ந்த யாழ்.வதிவிடத் துறவி பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய.

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தின் பெருந் திருவிழா அண்மையில் இடம் பெற்றது.

அங்கு 'விரத அனுஷ்டானங்களும் அதன் முக்கியத்துவமும்' எனும் தலைப்பில் பிரசங்கத்தை மேற்கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து ஆன்மீகச் சொற்பொழிவை நிகழ்த்தும் போது:

சைவ சமயத்தின் வாழ்வியல் முறையில் விரதங்களை மேற்கொள்வது வாழ்வின் இன்றியமையாத தேவையாகவுள்ளது.

மனம், வாக்கு, காயம் மூன்றும் இறைவனைப் பின்பற்றி இருத்தல் விரதம் என்பதால் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் நாம் பல்வேறு நன்மைகளை அடைகின்றோம்.

விரதத்தின் முக்கிய பங்கு உபவாசம் என்பதாகும். இதன் கருத்து இறைவன் அருகில் இருத்தலாகும்.

விரதங்கள் நாள்தோறும் மட்டுமல்லாது மாதம், வருடம் என்று பல்வேறு வடிவங்களில் அனுஷ்டிக்கப்படுகின்றன.

இதில் 'மௌன விரதம்' என்பது முக்கியமானதாகும். பேச்சுத் திறனைக் குறைத்து மனதைக் கட்டுப்படுத்துவதற்கும் நம்மைப் பழக்கப்படுத்துகின்றது.

அத்துடன் ஏனைய விரதங்களில் உணவை விடுத்து இருப்பதால் சமிபாட்டுத் தொகுதி ஓய்வடைவதுடன் அனைத்து ஜீவராசிகளுக்கும் உதவ வேண்டும் எனும் மனப்பாங்கையும் உருவாக்குகின்றது.- என்றார். (ம-313)

# திணைக்களங்களை அபிவிருத்தி அடையச் செய்தால் எதிர்காலச் சந்ததிக்குத் தொழில்வாய்ப்புக் கிட்டும்

யாழ்ப்பாணம்,ஏப்.28

தொழிற்சங்கங்களின் மூலம் திணைக்களங்களை அபிவிருத்தியடையச் செய்தால் எமது எதிர்காலச் சந்ததியினருக்குத் தொழில் வாய்ப்பை வழங்குவதற்கும் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கும் இலகுவாக இருக்கும்.

கிராமங்களை அபிவிருத்தி அடையச் செய்தால் மாத்திரமே நகரம் அபிவிருத்தியடையும்.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாணத்தின் உபதபாலகத்தின் அஞ்சல் அதிபர் எஸ்.இரத்னசிங்கம்.

யாழ்.பிரதம தபாலகத்தில் அண்மையில் இடம்பெற்ற உபதபாலதிபர்களுக்கான விசேட கலந்துரையாடல் நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரைநிகழ்த்தும் போது:

தொழிலாளர்களிடையே பல்வேறுபட்ட வேறுபாடுகளும் பிரச்சினைகளும் தோன்றியமையால் தான் தொழிற்சங்கங்களை உருவாக்க வேண்டிய தேவை உருவானது.

இதன் பிரகாரம் தொழிற்சங்கங்கள் தமது சேவைகளைத் திறமையாக வழங்க வேண்டும். அதற்கு உயர் அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

திணைக்களங்களின் பிரச்சினைகளை தொழிற்சங்கங்களால் மட்டுமே தீர்க்கப்படமுடியும்.

இவற்றுக்குத் தீர்வுகள் கிடைத்தால் மட்டுமே திணைக்களங்கள் அபிவிருத்தியடைய முடியும்.

திணைக்களங்களின் அபிவிருத்தியில் தான் எதிர்காலச் சந்ததியினரின் தொழில் வாய்ப்புத் தங்கியுள்ளது.

அத்துடன் கிராமங்களின் அபிவிருத்தியில் இவ்வாறான சிறுசிறு திணைக்களங்களின் அபிவிருத்திகள் தங்கியுள்ளன.

கிராமங்கள் அபிவிருத்தி அடைந்தால் நகரம் தானாக அபிவிருத்தியடையும். தற்போது வடமாகாணத்தில் உள்ள கிராமங்களில் 600 உப தபாலகங்களில் 3 ஆயிரத்து 400 உபதபாலதிபர்களும் சேவையில் உள்ளனர்.

இந்த 600 உபதபாலகங்கள் களினதும் அபிவிருத்திக்குத் தொழிற்சங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். - என்று கேட்டுக்கொண்டார்.

(ம-313)

# தொழிற் சங்கங்கள் மூலம் நன்மைபெற அங்கத்தவராக வேண்டியது அவசியம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

தொழிற்சங்கங்களின் மூலம் நன்மைகளைப் பெறுவதற்கு சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளவேண்டியது கட்டாய தேவையாக உள்ளது.

அங்கத்தவர்கள் அதிகரிக்கப்படுவதால் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் அதிகளவு இலாபத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் அகில இலங்கை உபதபாலகங்கள் தொழிற்சங்கத்தின் பொருளாளர் எஸ்.பி.ஜட்டவர.

உபதபாலதிபர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் அண்மையில் யாழ்.பிரதம தபாலகத்தில் இடம்பெற்றது. இதில் சிறப்புரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:

வடமாகாணத்தில் தற்போது 68 உறுப்பினர்கள் மட்டுமே உபதபாலதிபர்களின் தொழிற்சங்கத்தில் அங்கத்தவர்களாக உள்ளனர்.

ஆனால், உபதபாலகங்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன.

இதற்கான தீர்வைப் பெற வேண்டும் எனில் சங்கங்களுடன் இணைந்து கொள்வதன் மூலமே நன்மைகளைப் பெறமுடியும்.

அங்கத்தவர்களாக இணைந்து கொள்பவர்களுக்குச் சம்பளத்தில் நிலுவைகள் கழிக்கப்பட்டாலும் இவர்களுக்கான நன்மைகள் அதிகம்.

அதாவது அங்கத்தவரின் குடும்பத்தினர், உறவுகளின் மரணம், அங்கத்தவரின் ஓய்வு நிலையின் போது வேலையை இழக்கும் சந்தர்ப்பங்களில் தொழிற்சங்கத்தின் மூலம் ஒரு தொகுதி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.

இவ்வாறு உத்தியோகத்தர் சேவையில் இருக்கும் போதும், அல்லது விலகும்போதும் அங்கத்தவர்களான தொழிற்சங்கத்தில் இணைக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமே நன்மைகள் கிடைக்கின்றன.

இதனை அனைத்து உத்தியோகத்தர்களும் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியதேவையாகவுள்ளது - என்றார்.

(ம-313)

# மாணவருக்கு போட்டிகள்

சுன்னாகம் ,ஏப்.28

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் தரம் 10 மாணவர்களுக்கு 'உங்களுக்குத் தெரியுமா?' என்ற தலைப்பிலான போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

எழுத்துப் பரீட்சையாக நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் போஷாக்கு, சுகாதாரம், குடிதண்ணீர், எய்ட்ஸ் முதலிய விடயங்கள் உள்ளடக்கப்பட உள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் முதல் 5 இடங்களைப்பெற்றுக் கொண்டோர் இரண்டாம் சுற்றுப் பரீட்சைக்குத் தோற்றுவர்.

வலய மட்டத்தில் நடைபெறும் இந்தப் பரீட்சையில் வலயம் சார்பாக 15 பேர் தெரிவு செய்யப்பட்டு மாகாணப் போட்டி இடம்பெறுமெனத் தெரிவிக்கப் படுகிறது.

பாடசாலை மட்ட எழுத்துப் பரீட்சை அடுத்த மாதம் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது.(எ-38)

# வாழ்வாதார உதவிகள் வழங்கல்

யாழ்ப்பாணம் ,ஏப்.28

யாழ்ப்பாணம் வணிகர் மன்றத்தினர் யாழ்.மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 150 பேருக்கு வாழ்வாதார உதவியாகக் கோழி வளர்ப்புக்கான வசதிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகப் பிரிவுகளில் தலா 10 பேருக்குத் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழி வளர்ப்புக்குரிய கோழிக்கூடும் தலா 30 கோழிக்குஞ்சுகள், உபகரணங்கள், தீவனங்கள் போன்றனவும் வழங்கவுள்ளனர்.

இதன் பிரகாரம் தென்மராட்சிப் பிரதேசத்தில் பின்வரும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு உதவிகள் வழங்கப்படவுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாந்தி-கைதடிமேற்கு, குணமலர்-மீசாலை வடக்கு, அன்னபாக்கியம்-விடத்தற்பளை, சர்மிளா- வரணி வடக்கு, சுதர்சினி-மீசாலை வடக்கு, யோகேஸ்வரி - பலாலி வடக்கு, விஜயகௌரி-மட்டுவில் தெற்கு, ஜெகதீஸ்வரி- தவசிகுளம், சுகந்தினி-கிராம்புவில், குமுதினி -சரசாலை வடக்கு.

இந்தப் பயனாளிகளைத் தென்மராட்சிப் பிரதேச சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-207)

# கிளைக்குழுத் தெரிவுக்கூட்டம்

பருத்தித்துறை ,ஏப்.28

புலோலி ப.நோ.கூ.சங்கத்தின கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளரால் நியமிக்கப்படவுள்ள கூட்டுறவு உத்தியோகத்தர்களின தலைமையில் இந்தக் கிளைக் குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

(ம-190)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
சுகமான இனிய அனுபவங்களைப் பெறலாம். கடனாகக் கொடுத்த பணம் வந்து சேரும். வியாபாரிகளுக்கு அலைச்சல் அதிகரிக்கும். சக ஊழியர் ஒருவர் கேட்ட உதவியை மறுக்காமல் செய்வீர்கள். பெண்கள் மகிழ்ச்சி, உற்சாகமாகக் காணப்படுவர். பழைய நண்பர் ஒருவர் மூலம் புதிய நண்பரின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்:**
மற்றவர்கள் மூலம் உங்களின் வேலை ஒன்றை முடித்துக் கொள்வீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு. நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். தொழில் ரீதியாக சிலரின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம்.

**மிதுனம்:**
உங்களிடம் வாக்குக் கொடுத்த சிலர் அதைக் காப்பாற் றாமல் இழுத்தடிக்கலாம். பிள்ளைகள் வகையில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். கௌரவத் திற்கு பாதிப்பு வரும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். பெற்றோர் வழியில் உதவிகள் கிடைக்கலாம். சிறிய செலவுக்கு யோசித்த நீங்கள், ஒரு விடயத்திற்கு பெரிய அளவில் செலவிடலாம்.

**கடகம்:**
தேவையற்ற செலவுகளைச் செய்யலாம். சிலருக்கு வாக்குக் கொடுத்து விட்டு அதைக் காப்பாற்ற முடியாமல் சாக்கு போக்குச் சொல்லிச் சமாளிக்க லாம். அடுத்தவர் விடயங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருப்பது நல்லது. சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளு வைச் சந்திக்கலாம்.

**சிங்கம்:**
விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு, சந்தோஷம் அதிகரிக்கும். நண்பர்கள் சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். மற்ற வர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில செலவு களைச் செய்யலாம். கடந்த காலத்தில் உங்களை துச்சமாக மதித்த ஒருவர் இப்போது பாராட்டிப் பேசலாம். ஆதாயகரமான நாள்.

**கன்னி:**
எதிர்பாராத திடீர் பணவரவுகளைப் பெறலாம். அரசு தொடர்பான காரியங்களில் அலைச்சல்களைச் சந்திக்கலாம். ஏட்டிக்குப் போட்டியாக செயற் பட்டவர்கள் எல்லை விட்டுச் செல்வர். சகோதரர்கள் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். மற்றவர்களுக்காக உங்களுக்குப் பிடித்தமான ஒன்றை விட்டுக் கொடுப்பீர்கள்.

**துலாம்:**
சிறு உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். சுய தொழில் புரிவோர் ஏற்றம் பெறுவர். நீங்கள் செல்லும் இடத்தில் உறவினர் அல்லது நண்பர் ஒருவரை எதிர்பாராமல் பார்க்கலாம். பணவரவு ஒன்று வந்தாலும், அது உடனடியாகக் கைக்கு கிடைக்காமல் தடைபடலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

**விருச்சிகம்:**
எதிலும் கவனமுடன் இருக்க வேண்டிய நாள். உங்களை வைத்து உறவினர்கள் சிலர் தங்களின் வேலைகளை முடித்துக் கொள்ளலாம். வெளிவட் டாரத் தொடர்புகள் விரிவடையும். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றுக்கு அலைவதால், படபடப்பு, பதற்றமும் உண் டாகும். வெளியூர் பயணங்கள் செல்ல முன்னேற்பாடு செய்யலாம்.

**தனுசு:**
பெரிய மனிதர்களின் உதவியுடன் நினைத்ததைச் சாதிக்கலாம். வியாபாரிகளுக்கு கையில் பணப்பு ழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் பெருமைப் படும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள்.

**மகரம்:**
வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் பணிபுரியலாம். முக்கியமான வேலைகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். சொந்தபந்தங்கள் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர் ஒருவர் உங்களின் பேச்சைக் கேட்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து, எரிச்சல் உண்டாக்கலாம். ஊக்கம், உற்சாகம் கூடும்.

**கும்பம்:**
உறவினர் ஒருவர் உங்களிடம் உதவி கேட்கலாம். பண விடயங்களில் நினைத்தது நடக்க வாய்ப்பு உண்டு. எதிர்ப்புகள், போட்டிகளை முறியடிப்பீர்கள். புதிய திட்டங்களைத் தீட்டி அதைச் செயற்படுத்துவீர்கள். நேரம், காலம் பார்த்து சில நல்ல காரியங்களைச் செய்வீர்கள். சிலர் உங்களை விமர்சித்தாலும், அதை அறிவுரையாக ஏற்றுக் கொள்வீர்கள்.

**மீனம்:**
சோர்வு, சோம்பல் அதிகரிக்கும். சிறிய வேலை ஒன்றை கடும் பிரயத்தனம் செய்து முடிக்க நேரிடலாம். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். எதிர்பாராத முக்கிய செய்திகளைக் கேட்கலாம். சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்ய நேரிடலாம். மருந்துப் பொருள்கள் வாங்கலாம். செலவு கூடும்.

# உதைபந்தாட்ட கலாசாரத்தை விழுங்கியது கிரிக்கெட் !



bro
'.:.
மகாஜ
ஆரோ
நாங்க
திரும்
பாலே
செ

கிரிக்கெட், கிரிக்கெட் எங்கு பார்த்தாலும் கிறிக்கெட். பாட சாலை மாணவிகள் கிறிக்கெட் வீரர்களின் படங்களைப் 'பேஸ் புக்'கில் வைத்திருக்கிற அளவுக்கு கிரிக்கெட் அனைவரை யும் ஆக்கிரமித்துவிட்டது.

குடும்பத் தலைவிகள் கூட தொலைக்காட்சிக்கு முன்னால் அமர்ந்து உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை இரசித் துக் கொண்டிருக்கிறார்கள். கிறிக்கெட் தவிர்ந்த ஏனைய விளையாட்டுகளை ஊடகங்கள் ஊக்குவிப்பதாகத் தெரியவில்லை .

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் உதைபந்தாட்டத்தில் பிரபல்யம் பெற்று விளங்கிய பாடசாலைகள் யாவும் இன்று உதை பந்தாட்டத்தை மறந்துவிட்டன. மகாஜனா, கொக்குவில் இந்து, யாழ். இந்து, யாழ். மத்திய கல்லூரி, ஸ்கந்தா போன்ற பாடசாலைகள் உதைபந்தாட்டத்தில் முன்னணியில் திகழ்ந்தன.

யாழ்ப்பாண பாடசாலை உதைபந்தாட்டச் சங்கம் (Jaffna School Soccor Association - J.S.S.A.) யாழ்ப்பாணப் பாடசாலைகளிடையே உதை பந்தாட்டப் போட்டியை நடத்தி வந்தது. மகாஜனாக் கல்லூரி எட்டு வருடங்கள் தொடர்ச்சியாக 1967 முதல் 1974 வரை ஒ.கு.கு.அ. கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

ஒன்பதாவது வருடம் கொக்குவில்
கிறிஸ்தவ மிஷனரி பாட சாலைகள்
பற்றுவதில்லை. முன்பு ஒருமுறை பர
கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற
மாறி மதச் சார்புடையதாக மா
பங்குபற்றாமைக்குக் காரணம்.

மகாஜனா ஒ.கு.கு.அ. கிண்ணத்தை
நிறுவனத்தால் அகில இலங்கை ரீதி
கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்

இறுதியாக (ஆண்டு ஞாபகமில்
துக்கும் மகாஜனாவுக்குமிடையே ந
மாவட்டப் பாடசாலை அணிகளுக்கி
தாகத் தெரியவில்லை. சுறு சுறுப்பான,
மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட வேண்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்
போட்டியை (Champion Match) நின

ஒரு வானும் லொறியும் பாடசாலை வாச லில் ஆயத்தமாக நின்றன. வான் விளை யாட்டு வீரர்களுக்கு, லொறி ஆதரவாளர் கள் போவதற்கு.

சிவானந்தம் கடை உரிமையாளரின் லொறிதான் பாடசாலை வாசலில் நிற்கிறது. அம்பனைச்சந்தியால் பன்னாலைக்குத் திரும்பும் மூலையிலுள்ளது சிவானந்தம் கடை.

சிவானந்தத்தின் தம்பி பவாண்ணையும் எங்களுடன் லொறியில் வருவார். அவர் வந்தால் நாங்கள் எவருக்கும் பயப்படமாட்டோம். மாணவ னொருவன், ''டேய் தோட்டக்காரர் ஆரேன் வாறாங்களோ எண்டு பார்'' என்று சொல்லிவிட்டு பாடசாலைக்கு முன்னாலிருந்த வாழைத்தோட்டத் தினுள் இறங்கி இரண்டு வாழைகளை வெட்டிக் கொண்டுவந்தான். இன்னொருவன் பாடசாலை மதிலின் பின்புறம் துரையப்பா பிள்ளையின் சிலைக்கருகில் நின்ற வாழைக்குட்டிகளில் இரண்டை வெட்டிக்கொண்டு வந்தான்.

வானிலும் லொறியிலும் வாழைகளை இரு புறமும் கட்டினோம். இன்றைக்கு 'சம்பியன் மச்', யாழ். இந்துவுக்கும் மகாஜனாவுக்குமிடையில் தான் இம்முறை போட்டி. இந்த முறை ''ஜவ்னா ஹிண்டு நல்ல ரீம்'' என்று எல்லோரும் கதைக் கிறார்கள். இந்தமுறை மகாஜனா வெல்வது கஷ்டமென்றும் பலரும் சொல்லுகினம்.

போன முறைக்கு முதல் முறை கொக்குவில் இந்து வென்றுவிட்டது. தொடர்ந்து எட்டுவருசம் மகாஜனாதான் சம்பியனா வந்தது. போன வருசத் துக்கு முதல் வருசம் கொக்குவில் இந்து வென்று விட்டது. இந்த வருசம் மகாஜனாவை எப்படியும் வீழ்த்தவேண்டுமென்று 'ரவுண்' பாடசாலைகள் எல்லாம் கொக்குவில் இந்துவுக்கு ஆதரவ ளித்தன.

கொக்குவில் இந்துவில் விளையாடின 'பிளயர்ஸ்' எல்லோருக்கும் ஆளுக்கொரு Seiko Quartz மணிக்கூடு ஆரோ ஒரு கடைக்காரன் அன்பளிப் பாகக் கொடுத்தவனாம். பட்டிக்காடா? பட்ட ணமா? என்ற நோட்டீசும் அடிச்சு விட்டவை (பட்டிக்காடா? பட்டணமா? என்ற திரைப்படம் அப்போது யாழ்ப்பாணத்தில் ஓடிக்கொண்டி ருந்தது).

உங்களுடைய பாடசாலை மைதானத்தைக் கொத்திவிட்டு மைதானத்தினுள் மரவள்ளிக்கட்டை ஊன்றுங்கள் என்று யாரோ அதிபருக்கு மொட்டைக் கடிதமும் போட்டவர்களாம். நான் மகாஜனாவிலை சேர்ந்து அடுத்த வருசம் முயல் விளையாடேக்கை மூண்டு ரீமும் சம்பியன் அடிச்சது. (வேகமாக ஓடுவதன் காரணமாக முயல் என்ற பட்டப் பெயர் சூட்டப்பட்டது. இயற்பெயர் சிவானந்தராஜா).

'பிறின்சிப்பல்' பள்ளிக்கூடம் லீவு என்று அறிவித்த வுடன் நாங்களெல்லாம் எவ்வளவு துள்ளிக் குதிச் சம். பெடியள் 'ரி.பி'யையும் (பயிற்றுவிப்பார்) 'பிறின் சிப்பலை'யும் தோளிலை தூக்கிப் போட் டார்கள்.

நாங்கள் 'சம்பியன் மச்'சிலை தோத்தாலும் மகா ஜனா பழைய மாணவர் ரீமை ஒருத்தராலும் வெல்ல ஏலாது. 'சம்பியன் மச்' முடிஞ்ச பிறகு கம்பளை ஸாஹிரா, திருமலை இந்து எல்லாம் வந்து மகாஜனா பழைய மாண வர் 'ரீமுடன்' சினேகபூர்வ ஆட்டம் ஆடுவார்கள்.

ஆனால், ஒருக்காலும் மகாஜனா பழைய மாண வர் ரீமை வென்றதாகச் சரித்திரம் கிடையாது. அதிலும், வடிவேஸ் புல்பக் ஆகவும், சிறிகாந்தா கோலியாக வும் நின்றால் மகாஜனா ரீமை ஒருத்தராலும் ஒன்றும் செய்ய ஏலாது. பிளேயர்ஸின் வான் புறப்பட்டு விட்டது.

பவாண்ணை சொன்னார் ''நாங்கள் கொஞ்சம் பொறுத்துப்போவம். நாலரைக்குத்தானே 'மச்'. கோட்டூரும் பவாண்ணையும் ஒவ்வொரு வருடமும் லொறியில் மச்சுக்கு வருவார்கள்.

லொறியில் போகிற படியால் பஸ் காசு மிச்சம். லொறி வெளிக்கிட்டுவிட்டது. ஒரு ஆள் கத்த நாங்க ளெல்லாரும் சேர்ந்து 'கோரஸா'கக் கத்தினோம். தலைமை வகிப்பவர் தொடங்க நாங்கள் முடிப்போம்.

''ஜனா ஜனா மகாஜனா'' ''அப்பே ஜனா மகாஜனா''
What`s the colour

### வேர் பெயர்ந்த பூ
### நூலறா நினைவ

கே.கே
பழை,
வீதியி
தனர்.
றைக்
பேசிக்
செ
பவான்
விடுங்
வைத்
சுருட்
மஞ்ச
லொறி
பவா
செலுத்
செ
களை
கொன்
ஜனா

பவா
சுருட்
கூறிய
வரைய
னால்
இறங்
வரும்
மூலை
கள்
வை
கொடி
ஒரே
அவர்
கிறது.



brown and white

'ஃபுட்போலு'க்கு மகாஜனா, கிறிக்கெட்டுக்கு மகாஜனா, படிப்புக்கு மகாஜனா. இடையிலை ஆரோ ஒருத்தன் குறுக்கிட்டான். ''சரக்குக்கு'' நாங்களெல்லாரும் 'மகாஜனா' என்றோம். பவாண்ணை திரும்பிப் பார்த்தார். நாங்க ளெல்லாம் 'கப்சிப்' பானோம்.

லொறி தெல்லிப்பழைச் சந்தியால் திரும்பி

கொக்குவில் இந்து மகாஜனாவைத் தோற்கடித் தது.
சாலைகள் ஒ.கு.கு.அ. கிண் ணப் போட்டியில் பங்கு
முறை பரமேஸ்வராக் கல்லூரிக்கும் சம்பத்திரிசியார்
டைபெற்ற உதைபந்தாட் டப் போட்டி கைகலப்பாக
பதாக மாறியதே கிறிஸ்தவ பாடசாலைகள்
ாம்.
ண்ணத்தை மட்டுமல்ல 1978 ஆம் ஆண்டு சிங்கர்
ங்கை ரீதியில் நடத்தப்பட்ட போட்டியில் சிங்கர்
க் கொண்டது.
நாபகமில்லை) வசாவிளான் மகாவித்தியாலயத்
டையே நடைபெற்ற போட்டிக்குப் பின்னர் யாழ்.
ணிகளுக்கிடையே உதைபந்தாட்டம் நடைபெற்ற
சுறுப்பான, விறுவிறுப்பான உதைபந்தாட்டத்துக்கு
ப்பட வேண்டும்.
ளுக்கு முன்னர் நடைபெற்ற உதைபந்தாட்ட இறுதிப்
latch) நினைவு கூர்கிறது இந்த நடைச் சித்திரம்.

கே.கே. எஸ். வீதி வழியாகப் புறப்பட்டது. தெல்லிப் பழை, மல்லாகம், சுன்னாகம் எல்லா இடமும் வீதியில் நின்றவர்கள் எமக்கு வாழ்த்துத் தெரிவித் தனர். வீதியில் நின்ற சிலர் இன்றைக்கு 'மச்', இன் றைக்கு 'சம்பியன் மச்' என்றெல்லாம் தமக்குள் பேசிக்கொண்டனர்.

லொறி குளப்பிட்டிச் சந்தியை நெருங்கியதும் பவாண்ணை "டே பெடியள் தலையளை உள்ளுக்கு விடுங்கோ'' என்று சொல்லி விட்டு வாயில் விரலை வைத்துக் காட்டினார். நாங்கள் கொடி களை உள்ளே சுருட்டியபடி 'கப்சிப்'பானோம். லொறி மஞ்சவனப்பதி கோயிலுக்கு நேரே வந்தபோது, லொறியினுள் இரண்டு கற்கள் வந்து வீழ்ந்தன. பவாண்ணை றைவரிடம் லொறியை வேகமாகச் செலுத்தும்படி கூறினார்.

கொக்குவில் சந்தி தாண்டியதும் நாம் தலை களையும் கொடிகளையும் வெளியே நீட்டிக் கொண்டு மறுபடியும் கத்த ஆரம்பித்தோம் .''ஜனா ஜனா மகாஜனா'' லொறி தட்டாதெருச் சந்தி யைத் தாண்டியதும் லொறியில் வந்த ஒருவர் வாயில் விரலை வைத்து 'உஸ்' என்றார். ''இம் மட் டைக்கு அவங்களெல்லாம் போயிருப்பாங்கள்; ஒருத் தரும் நிக்கமாட்டாங்கள்'' என்றார் பவாண்ணை.

## ...ந்த பூமியின் ...நினைவுகள்

நாங்களும் கொடிகளைச் சுருட்டிக்கொண்டு 'கப் சிப்'பானோம். பவாண்ணை கூறியது போல் இந்துக் கல்லூரி வாசலில் ஒரு வரையும் காணவில்லை. றீகல் தியேட்டருக்கு முன் னால் முற்றவெளியில் லொறியை நிறுத்தி விட்டு இறங்கி 'ரிக்கெற்'றை எடுத்துக்கொண்டு அனை வரும் உள்ளே சென்று ஸ்ரேடியத்தின் வடமேற்கு மூலையில் முனியப்பர் கோயில் பக்கமாக கொடி களை அசைத்தவாறு அமர்ந்து கொண்டோம்.

மைதானத்தைச் சுற்றிவர இந்துக் கல்லூரிக் கொடிகள்தான் காணப்பட்டன. பவிலியனில் ஒரேயொரு பெண்மணி மட்டும் அமர்ந்திருந்தார். அவர் பிரதம விருந்தினரின் மனைவி போலிருக் கிறது. பவிலியனுக்கு மேலே துரையப்பா விளை யாட்டரங்கு என எழுதப்பட்டுள்ளது.

நடுவர்கள் மைதானத்தினுள் இறங்கினார்கள். தொடர்ந்து இரண்டு கல்லூரி வீரர்களும் பந்து டன் ஓடிச்சென்று மைதானத்தின் இருபுறமும் நின்று கொண்டனர். மத்தியஸ்தர்கள் நாணயக் குற்றியை எடுத்து இரண்டு அணித் தலைவர் களையும் அழைத்து பூவா, தலையா போட்டுப் பார்த்தனர். எமது கல்லூரி அணிக்குத்தான் பந்தை வைத்து அடிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் மகிழ்ச்சியடைந்தேன்.

பந்தை மைதானத்தின் நடுவே வைத்து எமது அணித் தலைவர் காலால் பின்னே தள்ளிவிட பின்னால் நின்ற வீரன் பந்தை தட்டிக் கொண்டு போக அவருக்கு நேரே இடம்புறமாக நின்ற எமது அணி வீரனிடம் அடித்து விட அவர் பந்தைக் காலால் நிறுத்திவிட்டு கோல் போஸ்ரை நோக்கி அடித் தார். அவங்கடை புல்பாக் பந்தை வயிற்றால் தடுத்து நிறுத்திவிட்டு திருப்பி அடித்தார். அது நேரே எமது புல்பாக்கிற்குக்கிட்ட வந்து விழுந் தது. எங்கடை புல்பாக் பந்தை நிறுத்த உடனே யாழ். இந்து வீரர்களெல்லோரும் குழுமிவிட்டனர்.

எமது வீரர்களால் பந்தை மைதானத்தின் மையப் பகுதிக்கு அப்பால் கொண்டு செல்ல முடிய வில்லை. இடைவேளைக்குக் கொஞ்சம் முந்தி யாழ். இந்து ஒரு கோல் அடித்து விட்டது. இந்துக் கல்லூரிக் கொடிகள் உயர்ந்தன. தம்பட்டைகள் முழங்கின. நாங்கள் எம்மிடமிருந்த பெரிய கொடி களிரண்டையும் தவிர ஏனைய கொடிகளைச் சுருட்டிக்கொண்டோம். இடைவேளை வந்தது. இனி பக்கம் மாறி ஆடுவார்கள். இடைவேளை விட்டு போட்டி மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. இந்துக் கல்லூரி இரண்டாவது கோலும் அடித்து விட்டது. நாங்கள் கொடிகளைச் சுருட்டி வைத்துக் கொண்டு பேசாமலிருந்தோம். எமது அணி வீரர் கள் மிகவும் கஷ்ரப்பட்டு விளையாடிக் கொண்டிருந் தார்கள். ஆ... பந்து போகி றது. எமது அணி வீரர்கள் பந்தைக் கொண்டு போகிறார்கள். யாரோ அடித்து விட்ட கோலால் நாங்கள் துள்ளிக்குதித்தோம். சுருட்டி வைத்திருந்த எமது கொடிகளை மறுபடி எடுத்து உயர்த்திப் பிடித்துக்கொண்டோம்.

இன்னும் இருபது நிமிடங்கள்தான் இருக்கின் றன. அதற்கிடையில் இன்னொரு கோல் அடித் தால் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடை யும். நேரம் போய்க்கொண்டிருந்தது. இன்றும் ஐந்து நிமிடங்கள் தான் உள்ளன போட்டி முடிவ தற்கு. எமது அணி வீரர்கள் மிகவும் கஷ்டப் பட்டு விளையாடிக்கொண்டிருந்தனர். கடைசி

**ந. பரமேஸ்வரன்**

நேரத்திலா வது எமது வீரர்கள் ஒரு கோல் அடித்தால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடையும்.

ஆ... பந்து போகிறது இந்துக்கல்லூரிப் பக்கமாக எமது வீரர்கள் கொண்டுசெல்கிறார்கள். நாங்களும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டி ருந்தோம். மகாஜனா வீரன் ஒருவன் பந்தை அடித்தான். நாங்களும் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தோம். இந்துக்கல்லூரி கோல் காப்பாளர் பந்தை இருகைகளாலும் லாவகமாகப் பிடித்து மேலே எறிந்துவிட்டு காலால் அடித்தார்.

மைதானத்தின் வடக்குப் புறமாக 'சென்ரரு'க் குக் கிட்ட நின்ற எமது அணி வீரன் பந்தைக் காலால் நிறுத்தினார். நடுவர் விசிலைப் பலமாக ஊதியபடி இரண்டு கைகளையும் தோள் மூட் டுக்கு நேரே பிடித்துக் காட்டினார். லொறியில் கட்டியிருந்த வாழைகளை அறுத்தெறிந்துவிட்டு லொறியில் ஏறி அம்பனை நோக்கிப் புறப்பட் டோம். ✱

# முக்திக்கான முன் பதிவு



முன்பதிவு என்பது தற்போது மிகவும் அவசியம். புகையிரதமா?, விமானமா? பத்திரிகையா?, தீபாவளி மலரா? சாப்பிடும் சாப்பாடா? எதுவானாலும் முன்கூட்டியே பதிவு செய்ய வேண்டியிருக்கிறது. நல்ல சொற்பொழிவு, கச்சேரி என்கின்ற இலவச விடயங்களில் கூட இடம் கிடைப்பது கடினம் தான். ஒரு கதிரையாக இருக்கிறதே என்று தேடிப் பிடித்து இருக்கப்போனால், ஓர் அழுக்குத்துணி அதன்மேல் இருந்து கொண்டு நம்மைப்பார்த்துச் சிரிக்கிறது. அழுக்குத் துணி வேறொருவர் வருகைக்கான முன்பதிவாம். அட கடவுளே!

பஸ்ஸில் துண்டுபோட்டு இடம்பிடித்தார் ஒருவர். அலட்சியமாக அதை நகர்த்திவிட்டு இருந்தார் இன்னொருவர். துண்டின் உரிமையாளர் வந்து ''நான்தான் இந்தத் துண்டைப் போட்டிருந்தேன்... இந்த இடம் என்னுடையது... எழுந்திரு!'' என்று கூச்சலிட்டார். இருந்தவர் அமைதியாக அப்படியென்றால் ''பஸ் மேல் வேட்டியைப் போட்டால் பஸ் என்னுடையதாக ஆகிவிடுமா?'' என்றார். அந்தமாதிரி கோபம் இல்லாமல் தப்பிக்கவேண்டும் என்றால் முன்பதிவு முக்கியம்.

பக்தி உலகம் முக்தி பெறுவதற்கு முன்பதிவுத் திட்டம் வைத்திருக்கிறது. ''அப்போதே, இப்போதே சொல்லிவைத்தேன்'' என்கிற ஆழ்வார் வாக்குத்தான் அதற்கான விளக்கம்.

மரணத் தறுவாயில் கடவுள் பெயரை உச்சரித்தால், மறுபிறவி இல்லை என்கிறது பக்தி உலகம்.

மரணத்தின்போது எந்த நினைவுடன் சாகிறோமோ அதற்கேற்ப மறுபிறவி என்றொரு கொள்கை உண்டு. ஜடாபரதர் தாம் வளர்ந்த மான்மீது பற்றுக்கொண்டு அதன் நினைவில் உயிர் விட்டதால் மறுபிறப்பில் மானாகவே வந்து பிறந்தார் என்கிறது ஸ்ரீமத்பாகவதம். எனவே, மரண காலத்தில் இறைவன் நினைப்புடன் இறந்துவிட்டால் நாமும் இறைவனாகவே ஆகவேண்டியதுதான். மீண்டும் பிறக்கவேண்டியதில்லை. இது பக்தி உலகின் தீர்மானம்.

இறக்கப்போகும்போது மட்டும் சட்டென்று கடவுள் ஞாபகம் வந்து 'முருகா' என்றோ, 'நாராயணா' என்றோ சொல்ல நம்மால் முடியுமோ? முடியாது. எப்போதும் நினைத்தும் சொல்லியும் வந்தால் மரணத்தின்போது சொல்ல வரும். திருநாவுக்கரசர் மதம் மாறி சமணத்தில் சேர்ந்தபோதும் ''சலம்பூவொடு தீபம் மறந்தறியேன், உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்...'' என்று பாடுகிறார். ''வழுக்கி வீழினும் நின்திருப்பெயர் அல்லால் மற்று நான் அறியேன் மறுமாற்றம்'' என்றே சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுகிறார்.

எப்போதும் இறைநாமம் சொன்னால்கூட இறக்கும்போது சொல்லமுடியுமா என்பது சற்று சிக்கலான கேள்வி. பகவான் இராமகிருஷ்ணர் சொன்ன கதையொன்று.

ஒரு பக்தர் ஒரு கிளி வளர்த்தார். கிளியைக் கூட பக்தியாக வளர்த்தார். அதன் நெற்றியில் திருநீறு இட்டுப் பரம பாகவதர்போல ஆக்கிவிட்டார். அந்தக் கிளியோ சும்மா இருக்கும் போது கூட ''ராமா....ராமா..? என்று கத்தும். 'கிருஷ்ணா... கிருஷ்ணா என்று அழைத்துக் கொண்டிருக்கும். அந்தக் கிளியைப் பக்தகிளி, பாகவதக்கிளி பரம பாகவதகிளி, என்று ஊரே கொண்டாடியது. ஒருநாள் கூண்டு திறந்திருந்தபோது வெளியே வந்து 'ராமா... ராமா... என்று தலையைத் தலையை ஆட்டியபடி பாடிக் கொண்டிருந்தது.

எங்கிருந்தோ இதைப் பார்த்துக் கொண்டிருந்த பூனை எமனாகப் பாய்ந்து கிளியின் கழுத்தைக் கவ்வியது. அவ்வளவுதான். ராமா.. ராமா... என்று மரணத்தறுவாயில் பத்திமழை பொழியாமல் கிறீச்... கிறீச் என்று கத்திச் செத்தது அந்த பாகவதக்கிளி. இந்தக் கிளி மாதிரித்தான் பலரும் ராமா, கிருஷ்ணா, முருகா என்று பக்திக் கோஷம் போட்டாலும் சாகும்போது சொல்வார்களா என்பது சந்தேகமே!

காந்தி அடிகள் மாதிரி 'ஹேராம் என்று குண்டுக்குப் பதிலடி கொடுக்கும் பக்குவம் எத்தனை பக்தனுக்கு இருக்கமுடியும்! கோட்ஸேயின் குண்டு காந்தியின் நெஞ்சைத் துளைத்ததை விட அந்த நேரத்திலும் ஹேராம் என்று காந்தி சொன்னது பலரது நெஞ்சையும் துளைத்துவிட்டது.

வாழ்நாள் முழுவதும் இறைநாமம் சொல்வதும் சிந்திப்பதும் முக்திக்கான முன்பதிவுத்திட்டம் என்பதையே 'அப்போதே; இப்போதே சொல்லி வைத்தேன்' என்கிற ஆழ்வார் வரிகள் விளக்குகின்றன.

ஒரு பணக்காரர் உபன்யாஸம் கேட்டுப் போனார். சொற்பொழிவாளர் ''எல்லோரும் கடவுள் நாமத்தை எப்போதும் சொல்வது நல்லது. எப்போதும் சொல்ல முடியாவிட்டால் சாகும் போதாவது சொல்லுங்கள்'' என்றார். இதைக் கேட்ட பணக்காரர், வீடு வந்ததும் மனைவியை அழைத்து ''நான் சாகும்போது முருகா என்று சொல்லவேண்டும். ஒருவேளை நான் மறந்துவிட்டாலும் நீ ஞாபகப்படுத்து என்றார். மனைவி மிகவும் அமைதியாக ''எப்போது சாகப்போகிறீர்கள்?'' என்று கேட்டார். ''யாருக்குத் தெரியும்?'' என்றார் பணக்காரர். ''எதற்கும் பிள்ளைகளிடமும் கணக்குப் பிள்ளையிடமும் சொல்லி வையுங்கள்'' என்று யோசனை சொன்னாள். சாகும் சந்தர்ப்பம் வந்தது. முருகா என்று சொல்லவேண்டும் என்று பணக்காரருக்கு நினைவு வந்தது. ஆனால், நாக்கு இழுத்துக்கொண்டது. ஒரு வார்த்தைகூடப் பேசமுடியவில்லை. மனைவியைப் பரிதாபமாகப் பார்த்து 'முருகா' என்று நீயாவது சொல்லு கேட்போம்' என்று ஜாடை காட்டினார். அந்த அம்மாள் உறுதியாக மறந்துவிட்டார். கணக்குப்பிள்ளையைக் காட்டினார். அவரோ ''முடியவே முடியாது'' என்று மறுத்தார். என்ன காரணம்? எல்லோருக்கும் ஒருவித பயம். ''முருகா'' என்று நாம் சொல்ல அடையாளம் தெரியாமல் எமன் நம்மைக் கொண்டுபோய்விட்டால் என்ன செய்வது என்று. கடைசியில் பணக்காரரும் சொல்லவில்லை. வாயிருந்தபோதே... வாய்ப் பிருந்தபோதே... ''முருகா முருகா'' என்று சொல்லி முன்பதிவுத் திட்டத்தில் இணைந்திருக்கலாமே...! அதை விட்டுவிட்டு கடைசி நிமிடத்தில் அதை நினைத்து என்ன பயன்?

இறை நாமத்தை எப்போதும் சொல்லவேண்டும். அதுவே முக்திக்கான முன்பதிவு. முயற்சி செய்யலாமே!

**சுகி.சிவம்**

## இளவல்கள் வட்டம் வாக்குச் சீட்டு

**இளம் சமுதாயத்தின் தற்கொலை அதிகரிப்புக்குக் காரணம்**

| தவறான வழிகாட்டலா? | ☐ | தன்னிச்சையான தீர்மானங்களா? | ☐ |
|---|---|---|---|

பெயர்: ..................................................

முகவரி: ..................................................

..................................................

அடையாள அட்டை இல. ..................................................

உங்கள் தீர்ப்புக்களை 26.05.2011 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இந்த வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

# இளவல்கள் வட்டம்

## சிந்தனைக்கு விருந்து

- நீ முதல்வனாயிருக்க விரும்பினால் அனைவர்க்கும் பணியாளாக இரு.
- மணிக்கணக்கில் உபதேசம் செய்வதை விட, கணப்பொழுதாயினும் உதவி செய்வது மேல்.
- பணத்திடம் நம்பிக்கை வைக்காதே, நம்பிக்கையிடம் பணத்தை வை.
- எப்படியும் வாழலாம் என்றிராதே! இப்படித்தான் வாழவேண்டும் என்றிரு.
- எல்லோரும் சொல்வதையும் கேட்டுக்கொள், ஆனால் ஒரு சிலரிடமே பேச்சுக் கொடு.
- எல்லா மனிதர்களையும் நம்பி விடுவது ஆபத்து, ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து.
- நீ இறக்கும்போது உனக்காக அழக் கூடியவர்களை நீ உயிருள்ள போதே தேடி வைத்துக்கொள்.
- ஒருவன் அரசனாக வாழலாம் - ஆனால் அவன் மனிதனாகத்தான் இறக்க வேண்டும்.
- இன்பங்கள் சேர்ந்து வருவதில்லை துன்பங்கள் தனியே வருவதில்லை.
- முதலில் கீழ்ப்படிவதற்குக் கற்றுக்கொள். பிறகு கட்டளையிடும் பதவி உனக்குத் தானாகவே வந்துசேரும்.

**விதுஷாயினி மனோகரன்,** 11'ஏ',
யா/ மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி.

## உறுதி



உறுதியற்ற மனதில் தோன்றும்
உண்மை பொய்மை ஆகும்- அது
உயரச் சென்ற கல்லைப் போன்று
என்றும் நிலத்தை நாடும்

பெறுதிமயற்ற கதைகள் பேசிப்
பயனைக் காண்பார் யாரோ? - வாழ்வில்
பாதித்தூரம் போன பின்னே - ஞானம்
வருவதேனோ?

அஞ்சி அஞ்சிச் சாவத்திற்கு
நீ பிறக்கவில்லை- கொள்ளு
அன்பில் உறுதி! உழைப்பில் உறுதி
எது தடுப்பதுன்னை?

செயலில் உறுதி நினைவில் உறுதி
சொல்லும் சொல்லில் உறுதி- நீ
சேவைசெய்ய உறுதி கொள்
தேசம் வாழ்வதுறுதி

**சு.விதுர்ஷன்,**
தங்கோடை,
காரைநகர்.

## மௌனம்

பூக்களை மிஞ்சிய
உன் - புன்னகை
நிலாவை ஒத்த
உன் - தரிசனம்
சாந்தம் குடி கொண்ட
உன் - சுபாவம்
நீ அழுது பிரசவிக்கும்
உன் - கவிதை
எல்லாம் பிடித்திருக்கு
எனக்கு,
ஆனால்
உன் உறக்கம்
கலையாத
மௌனத்தைத் தவிர !

**சீ.சிவா,**
ஐங்கரன் வீதி, சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

# இளையோரின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பது




### குணம்

இன்றைய நாகரீக உலகில் இளையோரின் எதிர்கால வாழ்வு சிறக்க, நாடு சிறக்க, நாளைய தலைவர்களை உருவாக்க பூர்வஜென்ம புண்ணியத்தால் பகுத்தறிவு ஜீவன்களாகப் பிறவியெடுத்த நாம் நல்லபழக்க வழக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும்.

உண்மை, நேர்மை, புலாலுண்ணாமை, பிறர்மனை விரும்பாமை ஆகிய நற்குணங்களின் வழியில் வாழ்ந்து இளம் சந்ததியினரையும் அந்த வழியில் வாழ வழிகாட்டிச் செல்வோமானால் இன்றைய இளையோர் நாளை சிறந்த கல்விமான்களாகவும் புத்திஜீவிகளாகவும் உடல் உழைப்பாளிகளாகவும் தன்னம்பிக்கையாளர்களாகவும் வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

இவர்கள் ஒருபோதும் ஊதாரிகளாகவோ, அல்லது தம் வாழ்வை மேம்படுத்த முடியாத கோழைகளாகவோ வாழ வாய்ப்பில்லை.

நேர்முகத்தேர்வின்போது நேர்முகத்தேர்வாளர்கள் நற்சான்றும், கல்விச் சான்றுமே கேட்கின்றார்கள்.

ஒருபோதும் வங்கிக் கணக்கோ அல்லது பணப்பெறுமானமோ கேட்கப்படுவதில்லை. ஆகையால் நற்குணத்தால் எதையும் சாதிக்க முடியும் என்பது எனது வாதமாகும்.

**ஏ. இந்திரா,**
ஆச்சிரமம் வதிரி,
கரவெட்டி.

### பணம்

இளையோரது வாழ்க்கை பெரும்பாலும் தங்கியிருப்பது பணத்திலேயே. இன்றைய கால கட்டத்தில் பணம் இன்றி எதுவும் செய்ய முடியாது. பண்டைக்காலம் தொட்டுப் பணத்தின் பெறுமதியை உணர்ந்ததால்தான் 'பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்' என்கிறார்கள். பழைய காலத்திலேயே அப்படி என்றால் இன்றைய இளையோரின் நிலைமையை நினைத்துப் பாருங்கள். நிச்சயமாகக் கூறமுடியும் இளையோரின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பது பணம்தான்.

இளையோர் எனப்படும் இளைஞர், யுவதிகளின் எதிர்கால வாழ்வுக்கு மூலமே பணம் தான். வாழ்வில் பல வழிகளில் சிறக்கவேண்டும் எனில் குணம் மட்டும் இருந்தால் போதாது. பணம் இருந்தால்தான் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றமுடியும். இவ்வாறு நிறைவேறும் போதுதான் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமையமுடியும்.

இளையோர் சமூகத்தின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதுடன் கல்வி கற்பதற்கும் கல்வியின் மூலம் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கும், தமது வாழ்வைத் திறம்பட அமைப்பதற்கும் பணமே இன்றியமையாததாக விளங்குகின்றது.

மனநிறைவான வாழ்க்கைக்கு பணநிறைவு இருக்க வேண்டும். குடும்ப வாழ்வைச் சிறப்பாக அமைப்பதற்கும் வாழ்க்கைத் துணையுடன் சந்தோசமாக வாழ்வதற்கும் பணநிறைவு அவசியம்.

''பணம் பந்தியிலே குணம் குப்பையிலே,'' ''பணம் பத்தும் செய்யும்'' எனும் பழமொழிகளும் பணத்தினது முக்கியத்துவத்தை மட்டுமே உணர்த்துவனவாக அமைகின்றன. இந்த வகையில் இளையோரது எந்த வாழ்க்கைப் படிநிலைகளிலும் பணம் இருந்தால்தான் அவர்களது எதிர்கால வாழ்வும் சிறப்பானதாக அமையும். எதிர்கால வாழ்வைத் தீர்மானிப்பது பணம்,பணம், பணம் மட்டுமே.

**சீ. அனோஜனா,**
103/1 (211/30) கோயில் வீதி, நல்லூர்.

## விவாதமேடை

இளைய சமூகத்தின் விவாதத்திறனுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே

**இளம் சமுதாயத்தின் தற்கொலை அதிகரிப்புக்குக் காரணம்**

**தவறான வழிகாட்டலா? அல்லது தன்னிச்சையான தீர்மானங்களா?**

என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

**இளைஞர், யுவதிகளே!**

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

**'இளவல்கள் வட்டம்',**
*'உதயன்',*
*361, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் :- ..................................................

முகவரி :- ..................................................

..................................................

.................... ....................
திகதி கையொப்பம்

# அத்தியார் அருணாசலத்தின் கல்விப் பணியில் உயர்ந்து நிற்கும் நீர்வேலி அத்தியார் இந்து

யாழ்.குடாநாட்டின் கல்வி வளர்ச்சியில் தனிமனித நிறுவனங்களாக இருந்து தமது உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்த உத்தமர்கள் வரிசையில் நீர்வேலி அத்தியார் அருணாசலம் என்பவருக்குத் தனியிடம் உண்டு. அவரின் அர்ப்பணிப்போடு கூடிய கல்விப் பணி முன்னெடுப்பின் வெளிப் பாடாக உயர்ந்து நிற்கின்றது நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.

அத்தியார் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்-பருத்தித்துறை நெடுஞ்சாலையில் நீர்வேலிக் கந்தசாமி கோயிலுக்கும் நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோயிலுக்கும் இடையே வீதிக்குக் கிழக்குப் புறத்தில் 8 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட வளாகத்தில் அமைந்துள்ளது. 4 ஏக்கர் விஸ்தீரணத்தில் 400 மீற்றர் தூரம் கொண்ட எட்டு ஓடு பாதைகளை உள்ளடக்கிய விசாலமான விளையாட்டு மைதானம் இந்தப் பாடசாலையில் அமைந்துள்ளது. இந்த விளையாட்டு மைதானம் வலி.கிழக்கில் மட்டுமல்ல யாழ்.கல்வி வலயத்திலேயே மிக அதிக விஸ்தீரணம் கொண்ட தனித்துவமானது.

நீர்வேலி ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதரும் ஸ்ரீ சிவப்பிரகாச பண்டிதரும் ஆரம்பித்து நிர்வகித்து தமிழ் இலக்கணம், புராண இதிகாசம் மற்றும் ஆங்கிலம், சமஸ்கிருத வகுப்புக்களை நடத்தி வந்த குருகுல திண்ணைப் பள்ளி ''பண்டிதர் பள்ளி'' என்றும் ''நீர்வேலி சைவப்பிரகாச வித்தியாலயம்'' என்றும் அழைக்கப்பட்டு வந்தது. ஸ்ரீ சிவப்பிரகாச பண்டிதர் மற்றும் ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதரும் இறைபதம் அடைந்த பின்னர் குருகுல திண்ணைப் பள்ளியையும் அதனோடு இணைந்த நிலத்தையும் பெரியார் அத்தியார் அருணாசலம் விலைக்கு வாங்கி பண்டிதர் பாடசாலையை விஸ்தரித்து இலவசமாக எல்லோரும் கல்வியைப் பெறுவதற்கான பெரும் பணியை ஆரம்பித்து வைத்தார்.

குறித்த காலப்பகுதியில் குடாநாட்டில் பாடசாலைகளை அமைத்துக் கல்விப் பணியை மேற்கொண்ட ஏனையவர்கள் போல் பெரும் நிலச் சொந்தக்காரராகவோ அல்லது பொருளாதார வளம் படைத்தவராகவோ அத்தியார் அருணாசலம் இல்லாத போதிலும் சமூகத்தின் எதிர்கால வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு தன்னால் இயற்றவரை கல்விப் பணியை ஆற்ற வேண்டும் என்ற தீர்க்க தரிசனம் மிக்க உயர் நோக்குடன் அவர் செய்த பெரும் பணி இன்றும் பசுமையுடன் சமூகத்தினால் நினைவு கூரப்படுகின்றது. பெரியார் அத்தியார் அருணாசலத்தின் உருவச் சிலை பாடசாலை முன்றிலில் நிறுவப்பட்டுள்ளது. அத்துடன் அவரும் அவரது சந்ததியினரும் கல்லூரி வளர்ச்சியுடன் இணைந்த நிலையில் பெருமையுடன் போற்றி மதிக்கப்படுகின்றனர்.

அத்தியார் அருணாசலத்தின் பணியைப் பாராட்டி பிரிட்டன் அரசு 'முதலியார்' பட்டம் வழங்கிக் கௌரவித்திருப்பதோடு, பதக்கமும் பாராட்டுப் பத்திரமும் வழங்கிப் பெருமைப்படுத்தியுள்ளது. பெரியார் அத்தியார் அருணாசலத்தின் அரும்பணியால் 1929 ஆம் ஆண்டு நீர்வேலி இந்து ஆங்கிலப் பாடசாலை என்ற பெயருடன் ஸ்தாபிதம் செய்யப்பட்ட இந்தக் கல்லூரி அத்தியார் அருணாசலத்தின் மறைவுக்குப் பின்னர் அவரது பணி துலங்க நீர்வேலி



அத்தியார் இந்துக் கல்லூரி என்ற பெயருடன் இன்றுவரை யாழ். மாவட்டத்திலும் வலி. கிழக்கிலும் முன்னணிப் பாடசாலையாக விளங்குகின்றது.

கொத்தணிப் பாடசாலை அமை ப்பு முறை நடைமுறையில் இருந்த காலப் பகுதியில் நீர்வேலிக் கொத்தணிப் பாடசாலையாக விளங்கிய இந்தக் கல்லூரி நீர்வேலி குடும்பப் பாடசாலை அமைப்பில் உள்ளடங்கும் ஒன்பது பாடசாலைகளின் தலைமைப் பாடசாலையாகவும் விளங்கி வருகின்றது. தரம் 1 முதல் தரம் 13 வரையான வகுப்புக்க ளைக் கொண்ட இந்தக் கல்லூரியில் தற்போது 958 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

''சமூகத்துக்குப் பொருத்தமான மனித வளத்தையும் உத்தம குடிகளையும் உருவாக்குதல்'' என்பதை நோக்கு வாசகமாகக் கொண்டு உயர்ந்து நிற்கும் அத்தியார் இந்துக் கல்லூரி '2004 ஆம் ஆண்டை பவளவிழா ஆண்டாகப் பிரகடனம் செய்து 2004 ஆம் ஆண்டு ஜனவரியில் பவள விழாவைப் பெருவிழாவாகக் கொண்டாடியது. கல்லூரியின் தற்போதைய அதிபராக இ.குணநாதன் கடமையாற்றி வருகின்றார்.


(தொடரும்)

தொகுப்பு- ஞானஆதவன்

# நவீன மாற்றங்களுக்கு ஏற்ப வசதிகளை வேண்டி நிற்கும் புத்தூர் பரி லூக்கா மெதடிஸ்த திருச்சபை

(சென்றவாரத் தொடர்ச்சி)

170ஆவது ஆண்டுச் சேவையில் காலடி பதிக்க இருக்கும் புத்தூர் பரி லூக்கா மெதடிஸ்த திருச்சபையின் பணிகள் வயது, பால், வர்க்க வேறுபாடு இன்றி சமூகத்தின் சகல தரப்பினருக்கும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 1842 ஆண்டில் இருந்து இடையறாது மேற்கொள்ளப்படும் பணிகள் சகலதரப்பினராலும் வரவேற்கப்படுவதோடு மக்கள் எந்த விதமான வேறுபாடுகளும் இன்றி சேவையைப் பெற்று வருகின்றனர்.



**முதியோர் இல்லம்**

புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபையின் முதியோர் இல்லம் 1994 ஆம் ஆண்டு செயற்படத் தொடங்கியது. கடந்த முப்பது ஆண்டுக் காலப் பகுதியில் நாட்டில் நிலவிய அசாதாரண நிலை யாழ்.மாவட்டத்தின் வாழ் வாதார நிலையில் சகல மட்டத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியதைப் போன்று முதியோரின் வாழ்வியலிலும் எதிர்பாராத பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது. புலம் பெயர்ந்தமை, யுத்த சூழ்நிலையில் உறவுகளை இழந்தமை, உள்ளூர் இடப்பெயர்வு போன்ற பல்வேறு காரணிகள் முதியோரை பெருமளவில் பாதிப்படையச் செய்துள்ளன. 60 வயதைக் கடந்தால் முதியோர் என்ற பிரிவில் உள்ளடக்கப்படும் வயது முதிர்ந்த பிரிவினர் மீண்டும் குழந்தைகளுக்கான மன உணர்வைப் பெற்றுக் கொள்கின்றனர் என்பது உளவியல் ரீதியிலான உண்மையாகும்.

முதியோர்கள் எதிர்கொள்ளும் அசாதாரண வாழ்க்கை நிலையைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்ட முதியோர் இல்லத்தில் தற்பொழுது 24 பேர் (ஆண், பெண் உள்ளடங்கலாக) தங்கியுள்ளனர். இவர்களின் பராமரிப்புக்கு நியாயமான மாதாந்தக் கட்டணம் அறவிடப்படுகின்றது. பரிலூக்கா தேவாயத்துக்கும் பரிலூக்கா மருத்துவமனைக்கும் இடையில் உள்ள விசாலமான இல்லம் ஒன்றில் முதியோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முதியோர் இல்லத்தை நேரில் பார்வையிட்டு அவர்களுடன் கலந்துரையாடுவதற்கு விருப்புபவர்களுக்கு அனுமதிகள் மறுக்கப்படுவதில்லை. அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள், வர்த்தகர்கள் உட்படப் பல்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபட்டவர்கள், இளமைப் பருவத்தில் தமக்கே உரிய தனித்துவத்தோடு வாழ்ந்தவர்கள் அங்கு தங்கியிருப்பதை அவதானிக்க முடிந்தது.இவர்கள் தங்களுக்குரிய உணவு, உறைவிடம், ஏனைய வசதிகள் என்பன உரிய முறையில் வழங்கப்படுவதாகக் கூறியபோதிலும் அவர்களிடம் ஒரு விதமான தவிப்பையும், ஏமாற்றத்தையும், உரையாடுவதற்கு தயங்கும் வைராக்கிய உணர்வையும் அவதானிக்க முடிந்தது. இது யாழ். மாவட்டத்தில் உறவுகளைப் பிரிந்து தனிமையில் வாழும் முதியோரின் உள்ளுணர்வின் வெட்டுமுகத்தோற்றத்தை வெளிப்படுத்துகிறது. அவர்கள் தமது பயன்பாட்டுக்குப் பொருத்தமான நூலகம் தேவை என வலியுறுத்தி வருகின்றனர்.

முதியோரைப் பராமரிக்கும் பணியில் உள்ள முதியோர் இல்லப் பெண் அதிகாரி தாய்மை உணர்வோடு முதியோரின் செயற்பாடுகளை செய்து வருகின்றார். மது அருந்தல், புகைத்தல் போன்ற தீய பழக்கங்களைப் பின்பற்றக் கூடாது என்ற உறுதியுரையுடன் முதியோர்கள் இந்த இல்லத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். முதியோரின் வாரிசுகள் மற்றும் உறவினர்கள் தமது வசதிக்கு ஏற்ப சந்தர்ப்பம் ஏற்படும்போது இடையிடையே வந்து இவர்களைச் சந்தித்துச் செல்கின்றனர்.

புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபையின் பணி முன்னெடுப்புக்கள் சமயம், கல்வி, சமூகம் என்ற மேம்பாட்டைக் கொண்டது. தற்பொழுது இந்தத் திருச்சபையில் 50 பேர் வரையில் உறுப்பினராக உள்ளனர். சபைக்கு பொறுப்பான குருவாக கிறீஸ்ரிகுமார் தங்கராசா பணியாற்றி வருகின்றார்.

புத்தூர் பரிலூக்கா மெதடிஸ்த திருச்சபையின் பணி முன்னெடுப்புக்கள் நவீன யுகத்துக்கு ஏற்புடையதாக மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ற பெரு விருப்புடன் மக்கள் அதன் சேவைகளைப் பெற்று வருகின்றனர்.

(முற்றும்)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01.07.1924

மறைவு
24.04.2006

## அமரர் நல்லதம்பி வீரசிங்கம்

திதி: ஏகாதசி

உங்கள் நினைவு என்றும் எங்கள் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும்,உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சி.சிவலிங்கம்
345/3, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை.

(49,25,26)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை.

# விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகள்

பருத்தித்துறை ,ஏப்.28

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் விவசாயத்திணைக்களம் மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு கிருமி நாசினி தெளிகருவி, சைக்கிள்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளது.

அல்வாய் வடமத்தியைச் சேர்ந்த 4 விவசாயிகளுக்கு 50 வீத மானியத்தில் கிருமிநாசினி தெளிகருவி வழங்கப்பட்டுள்ளன.

மேலும் சந்தைப்படுத்தலை மேம்படுத்துவதற்காக புலோலி தெற்கைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மானியத்தில் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

(எ-190)

**கோண்டாவில் கிழக்கில் வீடு விற்பனைக்கு**

பலாலி வீதிக்கு அண்மையில் கோண்டாவில் கிழக்கில் இராசவீதியையும் பலாலி வீதியையும் இணைக்கும் கோட்டைக்காடு வீதியில் பரப்பு 1½ நிலத்தில் அமைந்துள்ள வீடு, சுற்று மதிலுடன் உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: 0779633993.

# வீதிகள் சேதம்

பருத்தித்துறை, ஏப்.28

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள வீதிகள் குண்டும் குழியுமாக சேதமான நிலையில் காணப்படுகின்றன.

இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பருத்தித்துறை - தும்பளை வீதி, இரண்டாம் குறுக்குத்தெரு, மூன்றாம் குறுக்குத்தொரு, நான்காம் குறுக்குத்தொரு, விநாயக முதலியார் வீதி, கல்லூரி வீதி, மணல் வீதி, வல்லிபுரம் பரியாரியார் வீதி, தம்பசிட்டி வீதி உட்படப் பல சிறுவீதிகள் பழுதடைந்து மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன. (ம-190)

**LAUGFS LANKA GAS PLC**
**லா.'ப்ஸ் லங்கா காஸ்**

நிறுவனம் வழங்கும் புத்தாண்டு சலுகை



இச்சலுகை 07.05.2011 வரை

இன்றுமுதல் புதிதாகக் கொள்வனவு செய்யும் **5kg** அல்லது **12.5kg** காஸ் சிலிண்டர் வாங்கினால்

**காஸ்குக்கர் இலவசம்**

குறிப்பு:- எந்தவொரு லாப் காஸ் முகவரிடமும் பெற்றுக்கொள்ளமுடியும்.

பிரதம விநியோகத்தர்:
பிள்ளையார் டிஸ்றிபியூட்டர்
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0772640715.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில்: 02.02.1932
ஆண்டவன் அடியில்: 30.03.2011



எம்மை அன்பாகவும்
பண்பாகவும் பாசமுடனும்
வாழ வைத்த
எங்கள் பாசமிகு அம்மாவே!
நீங்கள் இல்லை என்பதை எங்கள்
மனம் ஏற்கவில்லை
மெழுகுவர்த்தியாக நீங்கள் உருகி
எமைக் காத்து மேன்மையடைய
வைத்த தெய்வமே!
இங்கு எங்களைப் பெற்றகடன்
முடிவதற்குள்
எங்கு தான் சென்றீர்கள் தாயே?

## திருமதி இராமலிங்கம் மகேஸ்வரி

கடந்த 30.03.2011 அன்று சிவபதமடைந்த எமது குல தெய்வம் திருமதி இராமலிங்கம் மகேஸ்வரி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.04.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து இடம்பெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் தயவுசெய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மருமகன் -இராசரத்தினம்,
மகள் - விஜயலட்சுமி,
பேரன் - ரஞ்சன்.
மெக்கானிக் சேவிஸ், பண்டத்தரிப்பு.

நவாலி வடக்கு,
மானிப்பாய். (48)

**லங்கா வோல்டைல்ஸ்**

**மகத்தான**

**மலிவு விற்பனை!**

**40%**
**தள்ளுபடி**

ஏராளமான வடிவங்களிலும்
அளவுகளிலும் பெறலாம்

ஏப்பிரல் 25 முதல் 30 வரை

- நாராயண செரமிக் பீரிவு, 113, A 9, கிளிநொச்சி.
- நியூ கமல் செரமிக்ஸ், மின்சார நிலைய வீதி (யாழ் போதனா வைத்தியசாலைக்குப் பின்னால்), யாழ்ப்பாணம்.

இந்த அரிய வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்!

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
05.06.1949

உதிர்வு
01.05.2008

## திருமதி கனகசபாபதி திலகவதி

(உசன், மிருசுவில்)

திதி: 28.04.2011 (வியாழக்கிழமை)

எங்கள் வாழ்வுக்கு வடிவமைத்த அன்னையே!
தங்கள் பிரிவுக்கு அடிமைகளாய் அலைகின்றோம்
மங்களமாய் மகிழ்வித்த மாதா நீங்களம்மா!
எங்களால் முடியவில்லை மூவாண்டும் முடிந்தம்மா!

'காவேரி,' உசன்,
மிருசுவில்.

குடும்பத்தினர்.

# தடுப்பிலுள்ளோருக்கு பாரபட்சமற்ற விடுதலை தேவை

எதற்கு இந்த வாழ்வு என்ற ஏக்கங்களும் தாக்கங்களும் தான் புனர்வாழ்வு பெற்று வரும் முன்னாள் போராளிகள் மனதில் தோன்றும் எண்ணங்கள்.

இவ்வாறு தடுப்பில் புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் போராளிகளுக்கு இன்னொரு புறமாகத் தோன்றுகின்ற எண்ணங்கள் அனைத்தும் எப்போது புதுவருடம் வரும்? எப்போது தீபாவளி வரும்? அல்லது எப்போது விசேட தினங்கள் வரும் என்பவைதான்.

ஏனெனில், இவ்வாறு வருகின்ற நன்னாள்களில்தான் அவர்களின் விடுதலை தீர்மானிக்கப்படுகின்றது. தீர்மானிக் கப்படும் என்பது உண்மைச் சம்பவங்களாக நடத்தேறிக் கொண்டிருக்கின்றன.

தற்போது 4 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு பெற்று வருவதாகப் புனர்வாழ்வு அமைச்சால் தகவல் வெளியிடப்பட்டது.

ஆனால், தற்போது இடம் பெற்ற தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு 480 முன்னாள் போராளிகளுக்கு விடுதலை வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டபோதும் விண்ணப்பங்கள் சரியான வகையில் பூர்த்தி செய்யப்படாமையால் இவர்களில் 10 பேரது விடுதலைக்கு தடை ஏற்பட்டது.

'விடுதலை வழங்கப்படும்' எனும் அறிவித்தல் வழங்கப்படும் போது, சீட்டிழுப்பில் பணத்தைப் போட்டு வெற்றிக்காகக் காத்திருந்தவன் போல் எனக்கும் இந்தத் தடவை அதிர்ஷ்டம் கிடைக்காதா? எனது பெயரையும் அறிவிக்கமாட்டார்களா? என்ற ஏக்கங்கள் ஒரு புறம் இவர்களை வாட்டும்.

விடுதலை வழங்கப்படும் போது பல்வேறு நிபந்தனைகளும் தகுதிகளும் பார்த்தே வழங்கப்படுகின்றன என்றும் சில தகவல்கள் கூறுகின்றன.

இதிலும் திருமணமானவர்களுக்கு முன்னுரிமை. திருமணமானவர் என்றாலும் எத்தனை பிள்ளைகள் என்ற எண்ணிக்கை தான் அவர்களுக்கான விடுதலையை இங்கு தீர்மானிக்கின்றது.

இந்த நடைமுறைகள் விடுதலையைத் தீர்மானிப்பதால், அந்தப் படிநிலையை வைத்தே விடுதலை எப்போது கிடைக்கும் என்று நம்பியிருக்கலாம்.

தற்போது விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் அதிகமானோர் மூன்று பிள்ளைகளின் தந்தை எனும் நிலையை உடையவர்கள்.

இதன் அடுத்த கட்டமாகத் தான் இரண்டு பிள்ளைகளின் தந்தை, ஒரு பிள்ளையின் தந்தை, திருமணமானவர், திருமணமாகாதவர்.

மூன்று நேர உணவு, பொழுதுபோக்கு, தொழிற் பயிற்சி என்று ஒரு மன நோயாளியை அமரவைத்து உணவு கொடுப்பது போல் நாளாந்தம் புனர்வாழ்வு நிலையங்களின் அவலக் கதைகள் தொடர்கின்றன.

இத்தனைக்கும் 'உறவுகள் சந்திப்பு நேரம்' மிகவும் கொடூரமானது. ஒரு தடவை பார்க்க வேண்டுமானால் ஆண், பெண் யாராக இருந்தாலும் எட்டுத் தடவை சோதனை. இந்த நிலையால் பார்க்க வரும் உறவுகளிடம் மறுபடியும் இங்கு வராதீர்கள் என்று கூறி அனுப்புகின்றனர் தடுப்பில் உள்ளவர்கள்.

அந்தளவுக்கு சோதனைக் கெடுபிடிகளின் அதிகரிப்பு மறைக்க முடியாத ஒன்றாகத் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

மாதத்தில் ஒரு தடவையாவது ஏதாவது விசேட தினங்கள் வராதா? அப்போதாவது விடுதலை கிடைக்காதா? என்ற ஏக்கத்துடன் காத்திருக்க வேண்டிய நிலைதான் தொடர்கிறது.

**சோபனா**

குடும்பத்துக்கு ஆதரவாக ஆறுதலாக இருக்க வேண்டியவர்கள் இன்று குடும்பத்துக்குச் சுமையாகவும் வேதனையாகவும் உள்ளனர். அதுமட்டுமன்றி தாமும் மனநோயாளியாகவும் மாறிக்கொண்டிருக்கின்றார்கள்.

பாரபட்சமற்ற விடுதலையின் மூலம்தான் மனநோயற்ற சமுதாயத்தில் நாம் வாழமுடியும். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகவும் தேவையாகவும் உள்ளது. ✱

# சர்வதேச ஆட்சிக்குச் சவாலாக விளங்கும் அரசின் யுத்தக் குற்றம்

ஊடகவியலாளர் டி. சிவராமின் 6ஆவது ஆண்டு நினைவுதினம் இன்றாகும். இதனை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை சுவிஸ் சிவராம் ஞாபகார்த்த மன்றத்தின் ஏற்பாட்டில் நினைவுப் பேருரை ஆற்றப்பட்டது. இதில் சிரேஷ்ட ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய ஆற்றிய உரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின் றது.

கடந்த இரண்டு வருடங்களாக யுத்தம் எதுவும் இல்லை. வாக்குறுதியளிக்கப்பட்ட விடுதலையும் சுதந்திரமும் தமிழ், சிங்கள மக்களைச் சென்றடைந்து விட்டனவா? மனித் உரிமைகள் மதிக்கப்படுவதுடன் ஜனநாயக ஆட்சியும் நடைபெறுகின்றதா?

வெளியாள் ஒருவருக்கு நாட்டில் அனைத்தும் சுமுகமாக நடைபெறுவதைப் போன்று தோன்றலாம். தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையின் பிரகாரம் பொருளாதாரச் சுட்டிகள் உயர்ந்து கொண்டிருக்கின்றன. பெருமளவு உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்து கொண்டிருக்கின்றார்கள். அரசியல் எதிர்ப்பு பிளவுபட்டிருக்கின்றது. சிங்களப் பெரும்பான்மையினர் மத்தியில் மஹிந்த ராஜபக்ஷ செல்வாக்குப் பெற்றவர் போன்று தென்படுகின்றார்.

ஆனால், இந்தப் பிரதிமை உண்மையானால் விஞ்ஞானத்துக்கோ சமூக பொருளாதார ஆய்வுக்கோ தேவை இருக்காது என நாம் அனைவரும் அறிவோம். ஒரு நாட்டின் ஊதிப் பெருப்பிக்கப்பட்ட பிரதிமையானது அந்த நாட்டின் சமூக பொருளாதார யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதில்லை என்பதை வட ஆபிரிக்கப் புரட்சிகள் உணர்த்தி நிற்கின்றன.

கடந்த 6 வருடங்களில் ஊடகவியலாளருக்கோ ஊடக நிறுவனத்துக்கோ எதிராக நடைபெற்ற எந்தவொரு சம்பவமும் முறையான விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. இலங்கையில் நிலவும் தண்டனையில் இருந்து பாதுகாப்பு நல்கும் கலாசாரமானது ஓர் இரும்புத் திரையாக கொலையாளிகளுக்கும் சட்டத்தை மீறுவோருக்கும் பாதுகாப்பை வழங்கி வருகின்றது.

ஊடகங்களைப் பொறுத்தவரை சுயதணிக்கை எழுதப்படாத சட்டமாக உள்ளது. குடிமக்களுக்குப் பல்வேறு அபிப்பிராயங்களை வழங்கக்கூடிய எந்தவொரு பகிரங்க கலந்துரையாடலும் நடைபெறுவதில்லை. ஆளுங் கட்சியால் அரசியல் ரீதியாகக் கட்டுப்படுத்தப்படும் பிரமாண்டமான அரசஊடகத்துறை நாட்டின் மிகப்பெரும் பக்கச்சார்பான ஊடகமாக விளங்குகிறது. இந்த நிலையில் சக குடிமக்களின் வாழ்க்கை தொடர்பில் ஆதாரங்களுடன் கூடிய தகவல்களைக் கொண்ட தீர்ப்பை வழங்கமுடியாத நிலைக்கு குடிமக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இங்கேதான் ஜனநாயகத்தின் வங்குரோத்து ஆரம்பமாகிறது.

கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டத்தின் சில பகுதிகள் ஆகியவை இன்னமும் அமுலில் உள்ளன. இந்தப் பிரிவுகளின் கீழ் பொலிஸாருக்கும் ஆயுதப் படையினருக்கும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பொதுவான நீதிக்கு முரணாகவும் சட்ட ஆட்சிக்கு அப்பாற்பட்டனவாகவும் உள்ளன.

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்களாக இராணுவ தளபதிகளே உள்ளனர். யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் குடிமக்கள் நிர்வாகம் இராணுவத்தின் கீழேயே உள்ளது. இந்தப் பிரதேசங்களில் இராணுவப் பிரசன்னம் வெளியே தெரியக்கூடியதாகவும் மேலாண்மை மிக்க தாகவும் உள்ளது.

வன்னியில் வாழும் மக்கள் இராணுவத்துக்குத் தெரியாமல் ஒரு சிறிய குடும்ப நிகழ்வைக் கூட ஏற்பாடு செய்ய முடியாது. அண்மைய அறிக் கைகளின் பிரகாரம் அவர்கள் ஒரு பெட்டிக் கடையைத் திறப்பதற்குக்கூட இராணுவத்திற்கு அறியத் தந்து அனுமதியைப் பெற வேண்டி உள்ளது. வன்னியின் சில பகுதிகளில் மக்கள் கூடுவது பற்றித் தமக்கு அறிவிக்கப்பட வேண்டும் என்று குடிமக்கள் குழுக்களுக்கு உத்தியோகபூர்வமாக இராணுவம் அறிவித்துள்ளது. 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் சிறைகளில் உள்ளனர். 30 ஆயிரத்துக்கும் அதிகமான அகதிகள் முகாம்களில் மோசமான சூழ்நிலைகளில் இன்னமும் வாழ்ந்து வருகின்றனர்.

சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் தென்பகுதியில் பொலிஸாரின் அச்சுறுத்தல், அரச ஆதரவுக் குழுக்களின் தாக்குதல்கள் என்பவற்றுக்கு மத்தியிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், கூட்டங்கள், சுவரொட்டி இயக்கங்கள் என்பவை இடம்பெற்று வருகின்றன. ஆனால், தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் அளவுக்கு மீறிய இராணுவப் பிரசன்னத்தின் விளைவாக நிலவும் அச்சநிலைமை காரணமாக அத்தகைய குடிசார் செயற்பாடுகள் அங்கே நடைபெறுவதில்லை.

சுதந்திரம் அல்லது ஜனநாயகத்துக்கான காட்டிகள் சகல நாடுகளுக்கும் பொதுவானவை. கருத்துச் சுதந்திரம், குழுவாகச் செயற்படும் சுதந்திரம், இடத்துக்கு இடம் செல்லும் சுதந்திரம், சகட்டு மேனிக்குக் கைது செய்யப்படல் தடுத்து வைக்கப்படல் என்பவற்றில் இருந்து விலக்கு, சித்திரவதையில் இருந்து விலக்கு, சுதந்திரமான நீதியான தேர்தல்கள், சுயாதீனமான நீதித்துறை, சட்ட அமுலாக்கம் எனப் பல உண்டு.



சுதந்திரம் என்பது பிறப்புரிமை. அவை சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. சுதந்திரத்தின் காட்டிகள் இந்த உரிமைகளே. ஒரு நாடு இந்த உரிமைகளை எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கின்றதோ அமுல்படுத்துகின்றதோ அவையே மக்கள் சுதந்திரத்தின் காட்டியாகும்.

நாடாளுமன்றத்தில் உள்ள பிரதான தமிழ்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல தடவைகள் வேண்டுகோள் விடுத்தும் அரசு தடுத்து வைத்துள்ள விடுதலைப் புலிச் சந்தேகநபர்களின் பெயர்ப் பட்டியலைப் பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றது. சில மாதங்களுக்கு முன்னர் வன்னி மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் அல் ஜசீரா ஊடகக் குழுவினருடன் உரையாடுவதிலிருந்து இராணுவ அதிகாரிகளால் தடுக்கப்பட்டுள்ளதுடன் இந்தச் சம்பவம் நடைபெற்று ஒரு வாரத்தில் அவரது வாகனம் மீதும் துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் மக்களின் கருத்துச் சுதந்திரமும் ஒன்றுகூடும் சுதந்திரமும் எவ்வாறு மறுக்கப்படுகின்றன என்பதற்கு ஒரு சில உதாரணங்களே இவை. இந்தப் பட்டியல் நீளமானது முடிவற்றது.

இந்த முறைகேடுகளின் சிகரமாகத் தற்போது சட்டவாட்சிக்குச் சவாலாக விளங்கும் விடயம் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களே. ஐ.நா. பொதுச்செயலாளரால் இது தொடர்பில் அமைக்கப்பட்ட நிபுணர்கள் குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இந்த அறிக்கையானது கண்டறியப்பட்டுள்ள ஆதாரங்கள் நிரூபிக்கப்படுமிடத்து இலங்கை அரசாலும் விடுதலைப்புலிகளாலும் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்களாகவும் மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்களாகவும் வகைப்படுத்தப்படக் கூடியவையாக உள்ள நிலையில் அவை தொடர்பில் சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஐ.நா. சபையையும் இலங்கை அரசையும் கோரியுள்ளது. மேற்படி விதப்புரைகளை நடைமுறைப்படுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே கோரியுள்ளது.

நாட்டில் சட்டவாட்சியையும் ஜனநாயக ஆட்சியையும் மீளமைப்பது தொடர்பில் சில குறுகிய கால விதப்புரைகளையும் இந்த அறிக்கை கொண்டுள்ளது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இலங்கை அரசு இந்த அறிக்கையை முற்றாக நிராகரித்துள்ளது. 6 மாதங்களுக்கு முன்னர் இதைப் போலவே இலங்கைக்கான வரிச் சலுகைகளை வழங்குவதற்கு மாற்றீடாக மனித உரிமைகளை மேம்படுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியம் கேட்டிருந்தது.

ஐநா. நிபுணர்கள் குழு அறிக்கையின் பின்னான சம்பவங்களே தொடர்ந்து வரும் வருடங்களில் ஜனநாயகம், சட்ட ஒழுங்கு, நீதி பேணல் என்பவற்றை நோக்கிய பாதைக்கு மாறி இலங்கை பயணிக்கப் போகின்றதா அல்லது அநீதியான சர்வாதிகார வழியிலேயே தொடர்ந்தும் பயணிக்கப் போகின்றதா என்பதைக் காட்டும்.

# பிரி. இளவரசர் வில்லியம் திருமணம்; பல்மதத் தலைவர்களுக்கும் அழைப்பு

லண்டன், ஏப். 28

பிரிட்டன் இளவரசர் வில்லியம் திருமணத்தில் கலந்துகொள்வதற்காக, பிரிட்டிஷ் வாழ் இந்து, ஜைன, சீக்கிய, இஸ்லாமிய மதகுருக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, பிரிட்டிஷ் முன்னாள் பிரதமர்களான டோனி பிளேர், கார்டன் பிரவுன் ஆகியோருக்கு அழைப்பு இல்லை. பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸ் - டயானா தம்பதிகளின் மூத்த மகனான வில்லியமுக்கும், அவரது நீண்டநாள் தோழியும், காதலியுமான கதே மிடில்டனுக்கும் நாளை 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருமணம் நடக்கவிருக்கிறது.

பிரிட்டிஷ் அரச பரம்பரையில், 30 ஆண்டுகளுக்குப் பின்னர் நடக்கும் திருமணம் இது என்பதால், மிகவும் கோலாகலமாக நடக்க உள்ளது.

லண்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் பகுதியிலுள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்தில் இத்திருமணம் நடக்க இருக்கிறது. இத்திருமணத்தில் கலந்து கொள்வதற்கு ஒரு சில பிரபலங்கள், முக்கியப் பிரமுகர்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

லண்டனிலுள்ள இந்து சபை நிறுவுநர் அனில் பனோட், ஜைன அகடமியின் தலைவர் நதுபாய் ஷா, சீக்கிய கூட்டமைப்புகளின் தலைவர்களான இந்திரஜித் சிங், இமாம் முகமது ரஜா, லண்டன் புத்த விகார செயல் தலைவர் துறவி சீலாவிமலா, முகம்மதி அறக்கட்டளையின் மௌலான செய்யது ரஜா ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் பிரதமர்களான மார்கரெட் தட்சர், ஜோன் மேஜர் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர். ஆனால், முன்னாள் பிரதமர்களான டோனி பிளேர், கோர்டன் பிறவுண் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அதேபோல், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, அவரது மனைவி மிச்சேல் ஒபாமா ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

பெரும்பாலும், மணமக்களின் நண்பர்கள், குடும்ப நண்பர்கள் ஆகியோர் அதிகளவில் அழைக்கப்பட்டுள்ளனர். பிரபலங்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் அழைப்புப் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

பஹ்ரைன் இளவரசரும் திருமணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் பஹ்ரைனில், சவூதி அரேபியப் படைகள் மூலம் மக்களின் ஆர்ப்பாட்டங்களை நசுக்கிய அவர், லண்டனுக்கு வரக்கூடாது என்று மனித உரிமை ஆர்வலர்கள் தொடர் போராட்டம் நடத்தினர்.

இதனால், திருமணத்தில் கலந்துகொள்ளவில்லை என்று பஹ்ரைன் இளவரசர், சாள்ஸுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சவூதி மன்னர் அப்துல்லா, பிரிட்டனுக்கான ஜிம்பாப்வே தூதர் காப்ரியேல் மச்சிங்கா, ஸ்வாசிலாந்து அரசர் ஆகியோர் திருமணத்தில் கலந்துகொள்ள இருப்பதால், வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயம் முன்பாக, மனித உரிமை ஆர்வலர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப் போகின்றனர் என அறிவித்துள்ளனர்.

இத்திருமணத்தை நேரில் பதிவு செய்வதற்காக, உலகம் முழுவதிலுமுள்ள பத்திரிகையாளர்கள் லண்டனில் குவிந்து வருகின்றனர். திருமணத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் லண்டனில் முழுவீச்சில் நடந்து வருகின்றன.

**இந்திய தம்பதிகளுக்கு அழைப்பு:**

தனது சொந்தக் கிராமத்தில் கடை நடத்திவரும், இந்தியத் தம்பதிகளான ஹாஷ், சன் சிங்காடியா ஆகிய இருவரையும் தனது திருமணத்திற்கு அழைத்துள்ளார் மணமகள் மிடில்டன்.

மணமக்களை பற்றிக் கூறிய சன் சிங்காடியா (வயது - 42), ''சிறுவயது முதலே மிடில்டனை எனக்குத் தெரியும். இருவரும், தங்களைப் பிரபலங்கள் என்று கருதுவதே கிடையாது. மிடில்டன், எனது கடையின் சிறந்த வாடிக்கையாளர். நான் அவருக்காக ராஜ்கோட் சென்று ஒரு சேலை வாங்கி வந்திருக்கிறேன்'' என்றார்.

பக்லிபெர்ரி கிராமத்தைச் சேர்ந்த தபால்காரர், இறைச்சிக் கடைக்காரர் உள்ளிட்ட அனைத்து சாதாரண மக்களையும் மணமகள் மிடில்டன் திருமணத்திற்கு அழைத்துள்ளார்.

**வைர கிரீடம் அணிவாரா மிடில்டன்? சூதாட்டம் ஆரம்பம்:**

வில்லியம் திருமணத்தின்போது, மணமகள் மிடில்டன், 90 ஆண்டுகள் பழமையான வைர கிரீடம் அணிவாரா, மாட்டாரா என்று பிரிட்டனில் இப்போது சூதாட்டம் களை கட்ட ஆரம்பித்துவிட்டது.

1919இல், 'டியாரா' என்ற வைரம் பதிக்கப்பட்ட கிரீடத்தை அப்போதைய பிரிட்டிஷ் இராணி மேரி அணிந் திருந்தார். அதன் பின்னர், தற்போது மிடில்டன் தான் அதை அணிவார் என்று பலர், 'பந்தயம்' கட்ட ஆரம்பித்துள்ளனர்.


## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)
## 89 ஆவது கூட்டுறவு தின விழா போட்டிகள்

**பின்வரும் போட்டிகள் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் நடைபெறவுள்ளது**

**1.பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள்**

| போட்டி | விவரம் | போட்டி நடைபெறும் திகதி |
|---|---|---|
| கலாசார குழு நடனம் | ✱ ஒரு பாடசாலையில் இருந்து ஒரு குழு மட்டும் பங்குபற்ற முடியும்.<br>✱ எமது கலாசாரத்தை வெளிப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.<br>✱ நேரம்-30 நிமிடம் | 15.05.2011<br>காலை 9.30 |
| நாடகம் | ✱ விடயம் கூட்டுறவு சார்ந்ததாக இருத்தல் வேண்டும்.<br>✱ ஒரு பாடசாலையில் இருந்து ஒரு நாடகம் மட்டும் பங்குபற்ற முடியும்.<br>✱ நேரம் 30 நிமிடம் | 15.05.2011<br>பிற்பகல் 1 மணி |
| பொது அறிவு | ✱ கூட்டுறவு சார்ந்த வினாக்கள்<br>✱ ஒரு பாடசாலையில் இருந்து ஒரு குழு.<br>✱ ஒரு குழுவில் 4 பேர் பங்குபற்ற வேண்டும். | 14.05.2011<br>பிற்பகல் 9 மணி |
| விவாதம் | ✱ விடயம் - கூட்டுறவுச் சட்டம் கூட்டுறவு அபிவிருத்திக்கு உதவி செய்கிறது.<br>✱ ஒரு குழுவில் 4 பேர் மட்டும்.<br>✱ எதிர் குழு குலுக்கலில் தெரிவு செய்யப்படும்.<br>✱ தயார் செய்வதற்கு 15 நிமிடம் வழங்கப்படும். | 14.05.2011<br>பிற்பகல் 1 மணி |
| கவிதை | ✱ ஒரு பாடசாலையில் இருந்து ஒரு மாணவர் மட்டும் பங்கு பற்றலாம்.<br>✱ கூட்டுறவு சம்பந்தமான விடயம்.<br>✱ தலையங்கம் உடன் வழங்கப்படும்.<br>✱ ஆயத்தம் செய்வதற்கு 5 நிமிடம் வழங்கப்படும்.<br>✱ நேரம்- கவிதை சொல்வதற்கு 10 நிமிடம் | 14.05.2011<br>மு.ப. 11 மணி |

**பெறுமதிவாய்ந்த தேசிய மட்ட பரிசில்கள்**

| | முதலாம் இடம் | 2 ஆம் இடம் | 3 ஆம் இடம் |
|---|---|---|---|
| குழு நடனம், நாடகம் | 50,000 | 30,000 | 20,000 |
| பொது அறிவு. விவாதம் | 40,000 | 25,000 | 15,000 |
| கவிதை | 15,000 | 10,000 | 5,000 |

மேலதிகமாக சான்றிதழ்களும் பாடசாலைகளுக்கான வெற்றிக் கேடயங்களும் வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 10.05.2011**

**அனைத்துப் போட்டிகளும் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.**

**போட்டியாளர்களுக்குத் தனித்தனி அழைப்பு அனுப்பப்படமாட்டாது. உரிய அட்டவணைப்படி போட்டிக்கு மாணவர்கள் சமுகமளிக்க வேண்டும்.**

**விண்ணப்பங்கள் அதிபரால் சிபார்சு செய்யப்படல் வேண்டும்.**

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத் தொகுதி இரண்டாம் மாடி, இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**

**2.கூட்டுறவு திணைக்கள உத்தியோகத்தர்கள் , சங்கத் தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள் பங்குபற்றும் போட்டிகள்:**

1.கரப்பந்தாட்டம் (ஆண்)
2.வலைப்பந்தாட்டம் (பெண்)
3.துடுப்பாட்டம்
4.100 M ஓட்டம் (ஆண்/பெண்)
5.200Mஓட்டம் (ஆண்/பெண்)
6.400Mஓட்டம் (ஆண்/பெண்)
7.800Mஓட்டம் (ஆண்/பெண்)
8.1500Mஓட்டம் (ஆண்/பெண்)
9.100M X4 அஞ்சல் (ஆண்/பெண்)
10.200 M X 4 அஞ்சல் (ஆண்/பெண்)
11.400 M X4 அஞ்சல் (ஆண்/பெண்)
12. மரதன் ஓட்டம் 10 Km ஆண், 05 Kmபெண்
13.ஒளித்திருக்கும் நபரைக் கண்டுபிடித்தல்
14.தலையணை சமர்- ஆண்
15.பப்பாசி விதை எண்ணல்
16.கயிறு இழுத்தல்
17. Balloon Dance
18.வேகநடை
19. Balloon உடைத்தல்
20.கூட்டுறவு குமரிகள்
21.சைக்கிள் ஓட்டம் (ஆண்/பெண்)

இந்தப் போட்டிகள் தொடர்பான சகல விவரங்களையும் யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையிலும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.


போட்டி நடைபெறும் திகதி, இடம் பின்னர் அறிவிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி : 10.05.2011

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: செயலாளர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத் தொகுதி , இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

செயலாளர்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.

*(40)(சி/577960)*

துருக்கி வந்திருந்த கிர்கிஸ்தான் பிரதமர் அல்மாஸ்அட்டாம்பைவே (இடது), துருக்கி பிரதமர் தைப்பி ஈர்டோஜனை, தலைநகர் அங்காராவில் சந்தித்துப் பேசுகிறார்.

# பாக். உளவுத்துறை மீது அமெரிக்கா குற்றச்சாட்டு

## விக்கிலீக்ஸ் ஆவணத்தால் பரபரப்பு

லண்டன், ஏப். 28

பாகிஸ்தான் உளவுத்துறையை தீவிரவாத அமைப்பாக அமெரிக்கா சுட்டிக் காட்டியுள்ளது. இதுதொடர்பான ஆவணத்தை 'விக்கிலீக்ஸ்' அண்மையில் வெளியிட்டுள்ளது. அமெரிக்கத் தூதரகங்களின் இரகசிய ஆவணங்களை 'விக்கிலீக்ஸ்' இணையதளம் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

சமீபத்தில் பாகிஸ்தானில் இயங்கும் அமெரிக்கத் தூதரகத்தின் ஆவணங்கள் வெளியிடப்பட்டன. ஒன்றில் பாகிஸ்தானின் உளவுத்துறையான ஐ.எஸ்.ஐ அமைப்பு பற்றி அமெரிக்கா கடுமையான குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது.

பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவுத் துறை ஒரு தீவிரவாத அமைப்பாக உள்ளது. அதன் செயல்பாடுகள் அல்-குவைதா, தலிபான்கள் அமைப்பு ஆகியவற்றின் நடவடிக்கைகளைவிட மிகவும் அச்சுறுத்தலாக உள்ளது. அல்-குவைதா, தலிபான்கள், ஹமாஸ், ஹிஸ்புல்லா ஆகிய தீவிரவாத அமைப்புகளுடன் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. உளவுத்துறைக்குத் தொடர்பு உண்டு என்றும் அதில் குறிப்பிட்டுள்ளது. இந்த அறிக்கை 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தத் தகவலால் பாகிஸ்தான் அரசு அதிருப்தியில் உள்ளது.


## வாடிக்கையாளர்களுக்கு ஓர் அறிவித்தல்

எமது உணவகத்தில் அதிகாலை 5மணி தொடக்கம் இரவு 10 மணிவரையில் உணவுகள் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் விசேட மசாலைத் தோசை, கொத்து றொட்டி நண்பகல் விசேட புரியாணியும் முன்னறிவித்தலில் திருமண விசேட நிகழ்வுக்குரிய உணவுகளும் விசேடமாகப் பெற்றுக் கொள்ள்லாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

முகாமையாளர்,

**ஸ்ரீ சரவணபவான் சைவ உணவகம்**
**195, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொ.பே. இலக்கம் 0214920150, 0779760565

# பிரிட்டனுக்கு வர விரும்பும் டுனிஷிய மக்கள்

லண்டன், ஏப். 28

டுனிஷியாவில் உள்நாட் போரால் பரிதவிக்கும் மக்கள் அங்கிருந்து வெளியேறி பிரிட்டன் வர விரும்புகின்றனர்.

பிரிட்டன்தான் தங்களுக்கு பாதுகாப்பான இடமாக இருக்கும் என அவர்கள் நம்புகின்றனர்.

பல்லாயிரக் கணக்கான டுனிஷிய மக்கள் தங்குவதற்கு தற்காலிக விசாவை இத்தாலி அளித்துள்ளது.

இந்த விசா மூலம் டுனிஷிய மக்கள் ஐரோப்பா நாடுகளை சென்றடைய முடியும். இத்தாலி நடவடிக்கைக்கு பிரான்ஸ் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. பிரான்ஸ்-இத்தாலி குடியேற்றப் பிரச்சினை சர்வதேச வர்த்தகத்தில் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

வடக்கு ஆபிரிக்காவை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பாரிஸ் பகுதிக்கு அருகே உள்ளனர். ஏறக்குறைய ஆயிரம் வடக்கு ஆபிரிக்க மக்களுக்கு காரேட் நோர்டை பகுதிகளில் தற்காலிக இடம் அளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் பிரிட்டனுக்கு விரைவு ரயிலில் செல்ல விரும்புகின்றனர்.

ரயிலில் 2 மணி நேரத்தில் அவர்கள் பிரிட்டன் செல்ல முடியும். பிரான்ஸில் அதிகாரிகள் தங்களை கொடுமைப்படுத்துவதாக இடம் பெயர்ந்த மக்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். வடக்கு ஆபிரிக்க பகுதி மக்கள் 25 ஆயிரம் பேர் கடல் வழியாக இத்தாலிக்கு வந்துள்ளனர்.

அவர்களுக்கு அடைக்கலம் தருவதை பிரான்ஸ் எதிர்க்கிறது. செனகன் ஒப்பந்தத்தை இத்தாலி தவறாக பயன்படுத்துகிறது என்றும் குற்றம் சாட்டப்படுகிறது. செனகன் எல்லைப் பகுதி வழியாக 25 ஐரோப்பிய நாடுகளுக்கு பயண ஆவணங்கள் மூலம் பயணிக்க முடியும்.

பிரான்ஸில் நெருக்கடி ஏற்படுவதால் அங்கு தற்காலிகமாக இருக்கும் புலம் பெயர்ந்த மக்கள் பிரிட்டனுக்கு முறைகேடாக இடம்பெற ஒரு நபருக்கு ஆயிரம் பவுண்ட் அளித்து பயணிக்க முயற்சிக்கின்றனர்.

## உக்ரைனில் நினைவஞ்சலி

1986, ஏப்ரல் 26இல், உக்ரைனில் இடம்பெற்ற விபத்தின் போது, 31 பேர் உயிரிழந்தனர். ஆனால், அணுஉலையிலிருந்து வெளியான கதிர்வீச்சால் லட்சக் கணக்கான மக்கள் புற்றுநோயால் கொஞ்சம் கொஞ்சமாக செத்துக் கொண்டிருக்கின்றனர்.

அப்பகுதி ஆள் நடமாட்டமில்லாமல், சுடுகாடாகக் காட்சியளிக்கின்றது. உக்ரைன் ஜனாதிபதி விக்டர் யனுக்கோவிச், 'கீவ்'வில் நேற்று நடந்த நினைவு அஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்று, மெழுகுவர்த்திகள் ஏற்றி மௌனஅஞ்சலி செலுத்தினார்.

## மனித உரிமை மீறல்கள்: அமெரிக்கா - சீனா பேச்சு

சீனாவில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவது குறித்து, அமெரிக்காவும், சீனாவும் அடுத்த வாரம் பேச்சுகள் நடத்தத் திட்டமிட்டுள்ளன. சீனாவில், ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக யார் போர்க்கொடி தூக்கினாலும் அவர்களின் கதி அதோ கதி தான். அரசுக்கு எதிராகப் போராடியவர்கள் பலர் காணாமற் போய்விட்டனர்; பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்; பலர் தண்டனை பெற்றுள்ளனர்.

இதுகுறித்து, சர்வதேச நாடுகள் பல தடவைகள் கண்டனம் தெரிவித்துள்ளன. எனினும், சீனா அதை கண்டுகொள்ளாமல், தனது மனித உரிமை மீறல்களை நடத்தி வருகிறது எனக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

சீனாவின் பிரபல ஓவியக் கலைஞரான அய்(வயது - 53) தற்போது சிறையில் உள்ளார். இதனால், சீனாவில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருகின்றனர் குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளது. இதுகுறித்து, இம்மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் பேச்சுகள் நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதற்கு சீனாவும் ஒப்புதல் தெரிவித்துள்ளது.



செர்னோபிள் அணுஉலை விபத்தின் 25ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு அணுமின் நிலையத்தின் முன்பு மலர் அஞ்சலி செலுத்த வந்த ரஷ்ய பிரதமர் டிமிட்ரி மெத்வடேவை (இடது) உக்ரைன் பிரதமர் விக்டர் யனுக்கோவிச் கிவிவ் நகரில் வரவேற்கிறார்.

# லிபியாவில் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாகும் நிலை

திரிபோலி, ஏப். 28

லிபியாவில் இராணுவச் சிப்பாய்கள் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுகின்றனர் என்று முறைப்பாடு எழுந்துள்ளது.

லிபியாவில் ஜனாதிபதி கடாபிக்கு எதிராகப் போராட்டம் நடத்திவரும் மக்களை அடக்கும் நடவடிக்கையில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது.

போராட்டம் நடத்திவரும் கிளர்ச்சியாளர்கள் பிடியில் மிஸ்ரடா, அஷ்தாபியா, ரூஸ்-லனாப் உள்ளிட்ட நகரங்கள் இருந்தன. தற்போது அவை மீண்டும் இராணுவத்தின் பிடியிலுள்ளன. இருந்தும் அவற்றை மீட்கும் நடவடிக்கையில் கிளர்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

எனவே, அங்கு தொடர்ந்து சண்டை நடந்து வருகிறது. இதனால் அங்கு இராணுவம் முகாமிட்டுள்ளது. அங்கு முகாமிட்டுள்ள இராணுவச் சிப்பாய்கள் பல்வேறு பாலியல் குற்றங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பெண்களை கடத்திச் சென்று தங்கள் முகாம்களில் அடைத்து வைத்து வல்லுறவு புரிகின்றனர். போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் மனைவிமார்களையும் வல்லுறவுக்கு உட்படுத்துகின்றனர். குழந்தைகளையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை.

பாலியல் உணர்ச்சியை தூண்ட வயாகரா மாத்திரையை அவர்கள் பயன்படுத்தி வருகின்றனர் எனத் தெரிகிறது. இது போன்ற பாலியல் நடவடிக்கையில் ஈடுபட்டால்தான் கிளர்ச்சியாளர்கள் பயந்து அடங்குவார்கள். அவர்களின் போராட்டம் கட்டுக்குள் வரும் என நினைக்கின்றனர். அதற்காக தான் இதுபோன்ற காம வெறியாட் டத்தில் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

## ஜப்பானில் மீட்டுருவாக்க சபை

ஜப்பானில் பூகம்பம், ஆழிப்பேரலை ஆகியவற்றால் பல நகரங்களும், சிறு நகரங்களும் முற்றிலும் அழிந்து விட்டன.

இந்த நகரங்களை மீட்டுருவாக்கம் செய்வது குறித்து அரசுக்கு ஆலோசனை அளிக்க, 'மீட்டுருவாக்க வடிவமைப்புச் சபை' அமைக்கப்பட்டது. புனரமைப்புப் பணிகள் குறித்து அந்தச் சபையைச் சேர்ந்த ஜூன் லியோ கூறியவை வருமாறு:-

தற்காலிக வீடுகள், சாலை வசதிகள் இவற்றுக்கே முதல் மூன்றாண்டுகள் போய்விடும். நகரங்களையும் சிறு நகரங்களையும் மீட்டுருவாக்கம் செய்வதற்கு மேலும் நான்காண்டுகள் தேவைப்படும். அதற்கு மேலும் கூட அவகாசம் தேவைப்படக் கூடும். இவ்வாறு லியோ தெரிவித்தார்.

# சிரியாவில் ஆர்ப்பாட்டக்காரரை ஒடுக்க அரசு வன்முறை

டமாஸ்கஸ், ஏப். 28

சிரியாவில் ஜனாதிபதிக்கு எதிரான மக்களின் ஆர்ப்பாட்டங்களை ஒடுக்குவதற்கு, அரசு வன்முறையில் இறங்கியுள்ளது. சிரியாவின் இப்போக்கிற்கு, உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

அங்குள்ள அமெரிக்கர்கள், உடனடியாக நாட்டை விட்டு வெளியேறும்படி அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

சிரியாவின் டரா நகரில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டங்கள் எதுவும் நடக்கவில்லை. எனினும், பீரங்கிகளுடன் இராணுவம் ரோந்து வந்தது.

வீடுகளின் கூரைகளில் ஏறி நின்றபடி, இராணுவச் சிப்பாய்கள் கண்மூடித்தனமாக துப்பாக்கிகளால் சுட்டனர். திங்கட்கிழமை டரா நகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 20 பேர் பலியாயினர்.

செவ்வாய்க்கிழமை நாடு முழுவதும் 500 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். டவுமா நகரிலும் பீரங்கிகளுடன் இராணுவம் ரோந்து சுற்றியது. அந்நகரில் நடந்த துப்பாக்கிச் சூட்டில், இரண்டு பேர் பலியானார்கள்.

ஜனநாயக முறையில் போராடிவரும் மக்கள் மீது, கட்டற்ற வன்முறையை அவிழ்த்துவிடும் சிரிய அரசுக்கு, ஐ.நா. கடும் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்று பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன், போர்த்துக்கல் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதேநேரம், சிரியாவின் மீது பொருளாதாரத் தடைகள் விதிப்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஆலோசித்து வருகிறார்.

சிரியாவுக்கான அமெரிக்க தூதரக அதிகாரிகளும், அவர்களது குடும்பத்தினரும், பிற அதிகாரிகளும், அவர்களது குடும்பத்தினரும் உடனடியாக நாட்டை விட்டு வெளியேறும்படி, அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷார்-அல்-ஆசாதுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். இதனால் போராட்டம் வலுவடைந்து வருகிறது.

போராட்டத்தை அடக்க பொதுமக்கள் மீது இராணுவம் ஏவி விடப்பட்டுள்ளது. அவர்கள் போராட்டத்தில் ஈடுபடும் பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி வருகின்றனர். இருந்தும் போராட்டம் குறைந்தபாடில்லை.

டாரா, டமாஸ்கஸ், தவுமா உள்ளிட்ட அனைத்து நகரங்களுக்கும் போராட்டம் பரவியுள்ளது. இப்போராட்டத்தில் இதுவரை 400 பேர் பலியாகி உள்ளனர். கடந்த வாரத்தில் மட்டும் 120 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை சிரியா மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

சிரியாவில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. ஈவு இரக்கமின்றி மக்கள் கொல்லப்படுகின்றனர். ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபை அவசரமாக கூடி இதுகுறித்து விவாதிக்க வேண்டும். போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன.

சிரியாவிலுள்ள பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, போர்த்துக்கல் ஆகிய நாடுகளின் தூதர்களும் இங்கு நடைபெறும் படுகொலைகளுக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை கண்டனம் தெரிவிக்கவேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

# 21 குண்டுகள் முழங்க, மக்கள் கண்ணீருடன் கதறியழ பாபாவின் உடல் பிரசாந்தி நிலையத்தில் நேற்று அடக்கம்

புட்டபர்த்தி, ஏப்.28

கடந்த ஞாயிற்றுக்கிழமை மகா சமாதியடைந்த சத்திய சாயிபாபாவின் உடல் பிரசாந்தி நிலையத்தில் அவர் பக்தர்களை சந்திக்கப்பயன்படுத்திய இடத்துக்கு மிக அருகில் நேற்றுக்காலை 9.30 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது.

அவரது உடலுக்கு, தேசியக் கொடி போர்த்தப்பட்டு, 21 துப்பாக்கி குண்டுகள் முழங்க ஆந்திர அரசால் மரியாதை அளிக்கப்பட்டது. தொடர்ந்து வேதிக சம்பிரதாயப்படி சாய் மந்திரங்கள் முழங்க சாயிபாபாவின் சகோதரர் மகன் ஆர்.ஜே.ரத்னாகர் இறுதிச் சடங்குகளைச் செய்தார். அதன் பின்னர் அவரது உடல் பிரசாந்தி நிலையத்தில் உள்ள குல்வந்த் மண்டபத்தில் அவர் போதனை செய்யும் இடத்தில் அடக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

இதன்படி 4 அடி அகலம் 7 அடி நீள அளவில் 9 அடி ஆழத்தில் குழி தோண்டப்பட்டது. அந்தக் குழிக்குள் பஸ்பம் என்ற விபூதி, சுகந்த திரவியங்கள் போடப்பட்டு சர்வமத குருக்கள் சர்வமத உடல் அடக்கப் பிரார்த்தனை நடத்தினர்.

பின்னர் சாய்பாபாவுக்கு வேத பண்டிதர்கள் தோஷ நிவாரண பூசை நடத்தினார்கள். அதன்பிறகு அவரது உடல் நவரத்தினங்கள் வைக்கப்பட்ட பெட்டியில் வைக்கப்பட்டது. அவரது உடல் மீது கங்கை, நர்மதா, சரஸ்வதி போன்ற புனித நதிகளின் தீர்த்தங்கள் தெளிக்கப்பட்டன. தெற்குத் திசையில் சாயிபாபா தலையை வைத்தபடி உடல் குழிக்குள் இறக்கப்பட்டது.

பின்னர் குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் சாயிபாபாவின் உடல் காலை 9.30 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது. புனித மண்ணினால் குழி மூடப்பட்டது. அந்தவேளையில் புட்டபர்த்தி நகரம் முழுவதிலும் திரண்டிருந்த லட்சக்கணக்கான பக்தர்கள் சாயிபாபாவுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தியதுடன் பல பக்தர்கள் கதறி அழுதனர்.

இந்த உடல் அடக்க நிகழ்ச்சியில் பா.ஜனதா தலைவர் அத்வானி, ஆந்திர கவர்னர் நரசிம்மன், கிரண்குமார் ரெட்டி, தெலுங்குதேசம் கட்சி தலைவர் சந்திர பாபு நாயுடு உள்ளிட்ட தலைவர்களும் சாயிபாபாவின் நெருங்கிய உறவினர்கள் 300 பேரும் கலந்து கொண்டனர்.

அடக்கம் நடந்த மண்டபத்தில் நேற்று 1500 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். இந்தநிகழ்ச்சி முழுவதும் புட்டபர்த்தி நகரில் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்த மிகப்பெரிய அளவிலான டிஜிட்டல் ரி.வி.யில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. லட்சக்கணக்கான பக்தர்கள் அடக்க நிகழ்ச்சியை கண்கலங்கியபடி பார்த்து அவருக்காகப் பிரார்த்தனை செய்தனர். (வ)

## விடைபெறுகிறார்...



மகா சமாதியடைந்த சத்திய சாயிபாபாவின் உடல் வேத பண்டிதர்களின் கிரியைகளைத் தொடர்ந்து அவரது பூதவுடலை அடக்கம் செய்வதற்காக பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ எடுத்துச் செல்லப்படுகிறது.

## சத்திய சாயி பாபாவின் மரணச்செய்தியால் மேலும் இருவர் மரணம்

புட்டபர்த்தி,ஏப்.28

கடந்த ஞாயிற்றுக்கிழமை மகாசமாதியடைந்த சாயிபாபாவின் செய்தியை அடுத்து மேலும் இரண்டு பக்தர்கள் மரணமடைந்துள்ளனர்.

இதேவேளை பாபா மாகாசமாதியான செய்தியைக் கேட்டு இருவர் முன்னர் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

மகா சமாதியடைந்த சத்திய சாயி பாபா தொடர்பான செய்தியை ஆந்திரா மாநில தொலைக்காட்சிகள் மற்றும் வானொலிகள் ஒலிபரப்புச் செய்தன.

இதனை பாபா பக்தர்கள் பார்வையிட்டும் கேட்டுக்கொண்டும் இருந்தனர்.

இதன் போது நான்கு பேர் அதிர்ச்சியில் மரணமடைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)


## அகவை அறுபதில் 5ஆம் மாத நினைவு

### அமரர் சவரிமுத்து அன்ரன் பிரான்சிஸ்



"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை
கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
(யோவான் 11:25)

மண்ணில்
28 ★ 04 ★ 1951

விண்ணில்
10 ★ 12 ★ 2010

அகவை அறுபதடா இன்றுனக்கு
ஆசையுடன் காத்திருந்தேனடா
இறைவன் அழைத்துவிட்டான்
ஈண்டு நீ வாழ்ந்தது போதுமென்று
உனக்கென எதுவும் செய்யவில்லை
ஊரறியச் செய்ய நினைத்திருந்தேன்
என்ன குறை கண்டாய்
ஏன் விரைந்தாய் விண்ணுக்கு
ஒரு குறையும் தெரியவில்லை
ஓயாமல் அழைப்பேனே 'அன்ரோ' என்று
உன் குரல் கேட்டால் துடித்து வருவேனே
வழியனுப்பி வைப்பாயே-வரும்வரை
வாயிலில் நிற்பாயே
பிரியப் போகிறேன் என்றா பார்த்தாய்
என்னை- ஒரு பார்வை
அதைத் தாங்க முடியவில்லைத் தவிக்கிறேன்
அர்த்தம் புரியவில்லை
வாய்விட்டுச் சொல்ல எவருமில்லை
வருந்துகிறேன் தனிமையில் உனை நினைத்து
வீடு வெறிச் சோடிப் போச்சடா
நீ நடந்த முற்றம் தேடுதடா- உன்னை
விண்ணில் வாழும் உனக்காக
மண்ணில் நவில்கிறேன் நன்றி- இறைவனுக்கு

Ranee Joseph
201/1, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (3570)(21-26-43)

பிரிவால் வருந்தும்:
அக்கா


## நித்யானந்தா பாபாவுக்கு அஞ்சலி பக்தர்கள் பரபரப்பு

நகரி, ஏப்.28

பெங்களூர் புறநகரில் ஆசிரமம் நடத்தி வரும் சாமியார் நித்யானந்தா நேற்று முன்தினம் பாதுகாவலர்கள் புடைசூழ சாயிபாபாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தச் சென்றார். அந்தவேளை ஆசிரம ஊழியர்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும் இதனால் பரபரப்பு ஏற்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாபாவின் உடலுக்கு பிரமுகர்கள், பக்தர்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்திச் சென்றனர். இந்த வகையில் நித்யானந்தாவும் அஞ்சலி செலுத்தச் சென்றுள்ளார். அவருடன் 4 பாதுகாவலர்களும் சென்றனர். அந்த வேளையில் ஆசிரம ஊழியர்கள் தடுத்து நிறுத்தினார்கள். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. சிறிது நேரம் சாயி பாபா உடல் அருகே அஞ்சலி செலுத்திய நித்யானந்தா, வேகமாக ஆசிரமத்தை விட்டு வெளியேறினார். சாயிபாபாவின் பக்தர் ஒருவர் கூறும் போது,

சாயிபாபாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்த மிகப் பெரிய தலைவர்கள் வந்தனர். அவர்கள் யாரும் தம்முடன் பாதுகாவலர்களை பாபாவின் உடல் வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்லவில்லை. ஆனால் நித்யானந்தா மட்டும் பாதுகாவலர்களுடன் உள்ளே சென்றது சரியானதல்ல. அவர் தன்னை மிகவும் பெரிய மனிதராக நினைத்துக் கொள்கிறார். எனவே இது நல்ல தல்ல என்றார்.

சாமியார் நித்யானந்தா சமீபகாலமாக எங்குசென்றாலும்பரபரப்பை மட்டும் அல்ல, பொதுமக்களிடம் சலசலப்பையும் ஏற்படுத்தி வருகிறார் என்று அவர் கூறினார். (வ)


THE ROYAL COLLEGE OF JAFFNA

சரளமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயிலும் வரையான கட்டணம் 5000/-By:ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி , 426(302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.தொடர்பு: 0776751649



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில்
11 ★ 08 ★ 1967

ஆண்டவன் அடியில்
29 ★ 03 ★ 2011

### அமரர் பாலசுப்பிரமணியம் பாலகுமார் (குமார்)

கடந்த 29.03.2011 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (28.04.2011) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

305/1, 53, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:077 4197100

தகவல்:
குடும்பத்தினர்

(3569)-50-24-43

# இலங்கையின் போர்க்குற்ற ஐ.நா. அறிக்கை; நாடாளுமன்றில் விவாதிக்கப்பட வேண்டும்



## திருமாவளவன் வலியுறுத்து

சென்னை, ஏப்.28

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான ஐ.நா. அறிக்கை குறித்து விவாதிக்க இந்திய நாடாளுமன்றத்தை உடனே கூட்ட வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இலங்கைப் போரின் இறுதிக்கட்டத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதை ஐ.நா. அறிக்கை உறுதிப்படுத்துகிறது.

போர் முடிந்த பின்பும் தமிழர்களைக் கொல்வதையும், தமிழ்ப் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி வருவதையும் ஐ.நா. அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

ஐ.நா.வின் அறிக்கை ஈழத் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, தமிழ் இனம் முழுவதுக்கும் ஒரு முக்கியமான அறிக்கையாகும்.

தெற்கு ஆசியாவில் முக்கியத்துவம் உடைய இந்தியாவுக்கும் அந்த அறிக்கை முக்கியமானதாகும். எனவே, ஐ.நா. அறிக்கை குறித்து விவாதிக்க நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தை கூட்ட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்துகிறோம். இவ்வாறு அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார். (வ)

# வாக்கு எண்ணும் நேரம் மாற்றம்

சென்னை, ஏப். 28

நடந்து முடிந்த தமிழக சட்டசபைத் தேர்தலின் வாக்குகள் எண்ணும் பணிகள் முன்பு அறிவிக்கப்பட்ட நேரத்தில் இருந்து அரை மணித்தியாலம் முன்பதாக காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கப் படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

வாக்கு எண்ணிக்கை காலை 8 மணிக்கு ஆரம் பிக்கும் என்று முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அரை மணி நேரம் முன்னதாக காலை 7.30 மணிக்கே வாக்கு எண்ணிக்கை ஆரம்பமாகிறது. முதலில் காலை 7.30 மணி முதல் 8 மணிவரை தபால் வாக்குகள் எண்ணப்படும். 8 மணிக்குள் தபால் வாக்குகள் எண்ணி முடிக்கப்படவில்லை என்றால் இந்தப்பணியை உதவித் தேர்தல் அதிகாரியிடம் வழங்க வேண்டும். இயந்திரங்களில் பதிவான வாக்குகளை காலை 8 மணிக்கு எண்ணத்தொடங்க வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக அதிகாரி ஒருவர் கூறுகையில்: வழக்கமாக காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை ஆரம்பமாகி முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டன. தற்போது காலை 7.30 மணிக்கே வாக்கு எண்ணிக்கையை ஆரம்பிக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தபால் வாக்குகள் முதலில் எண்ணப்படுகின்றன என்றார். (வ)

## பிரமுகர் சந்திப்பு....



இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை, ஐஸ்லாந்து தீவின் வெளியுறவுதுறை அமைச்சர் ஆசர் கார்பிடிசன் டில்லியில் சந்தித்து கைலாகு கொடுக்கிறார்.

# ஸ்பெக்ட்ரம் வழக்கைத் தி.மு.க. சட்டரீதியாகச் சந்திக்கத் தயார்

## உயர்நிலைக் கூட்டத்தில் தீர்மானம்

சென்னை, ஏப்.28

மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி மற்றும் முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா உள்ளிட்டோர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ள 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் வழக்கை சட்டரீதியாக சந்திக்க தி.மு.க. முடிவுசெய்துள்ளது.

2-ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு தொடர்பான முறைகேட்டில் சதிக்கு உடந்தையாக இருந்ததாக மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியின் பெயர், சி.பி.ஐ. கடந்த திங்கட்கிழமை தாக்கல் செய்த துணைக் குற்றப் பத்திரிகையில் சேர்க்கப்பட்டுள்ளது. ஊழல் தடுப்புச் சட்டப் பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ளதால் அவர் கைது செய்யப்படக் கூடும் என பரவலாகச் செய்திகள் வெளியானது.

இந்த நிலையில் தி.மு.க. உயர் நிலை செயல் திட்டக் குழுக் கூட்டம் சென்னையில் நேற்றுக் காலை நடைபெற்றது. கூட்டத்துக்குப் பின்னர் தி.மு.க. வெளியிட்ட அறிக்கையில், குற்றம் நிரூபிக்கப்படாதவரை யாரும் குற்றவாளி இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் விரிசலை உண்டாக்கி அதை உடைக்க எதிர்க்கட்சியினர் முயற்சித்து வருவதாக அந்த அறிக்கையில் தி.மு.க. குற்றம்சாட்டியுள்ளது. 2ஜி வழக்கை தி.மு.க. சட்ட ரீதியாக சந்திக்கும்.

குற்றம் நிரூபிக்கப்படும்வரை யாரும் குற்றவாளி இல்லை. தவறான பிரசாரத்தின்மூலம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் விரிசலை ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன என தி.மு.க. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# தமிழக மீனவர் தாக்கப்படுவதைக் கண்டித்து கடல் முற்றுகைப்போர்

## தமிழக பா.ஜ.க.அறிவிப்பு

சென்னை, ஏப். 28

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்து பாரதீய ஜனதா கட்சி சார்பில் மே மாதம் கடல் முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்று மாநிலத் தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மதுரையில் பாரதீய ஜனதா கட்சியின் நிர்வாகிகள் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் தமிழர்களைக் கொன்று குவித்த மஹிந்த ராஜபக்ஷவை ஐ.நா.சபை போர்க் குற்றவாளி என அதிகாரபூர்வமாக அறிவிக்க உள்ளது எனச் செய்திகள் வந்துள்ளன. இதில் இருந்து அவரைக் காக்க மத்திய அரசு, காங்கிரஸ் கட்சி, பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் துணையாக இருக்கின்றனர் எனவும் செய்திகள் வந்துள்ளன. இது துரதிர்ஷ்டவசமானது.

இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்தி, அவர்களுக்கு உதவி செய்ய பாரதீய ஜனதா கட்சி தயாராக உள்ளது. இந்திய தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லும்போது இலங்கைக் கடற்படைகள் துன்புறுத்துவதைத் தடுக்க வேண்டும். இதை மத்திய, மாநில அரசுகள் கண்டு கொள்ளாமல் உள்ளன. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் என்பதை காங்கிரஸ் தி.மு.க கட்சிகள்மனதில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனைக் கண்டித்து மே மாதம் பாரதீய ஜனதா கட்சி சார்பில் கடல் முற்றுகை போராட்டம் நடத்தப்படும் - என்றார். (வ)

# ராஜபக்ஷ, சோனியா, மன்மோகன் மூவரையும் போர்க்குற்றவாளிகளாக்கி தண்டனை வழங்குக

## இளைஞர் முன்னணி அமைப்பு கண்டன ஆர்ப்பாட்டம்

சென்னை, ஏப்.28

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ, சோனியா காந்தி, மன்மோகன் சிங் ஆகியோரை போர் குற்றவாளியாக அறிவித்து ஐ.நா. சபை மூலம் தண்டனை வழங்கக் கோரி புரட்சிகர இளைஞர் முன்னணி அமைப்பினரால் நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிக்கு சென்னை நினைவரங்கம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தோழர்,தென்கனல் தலைமை வகித்தார், தோழர்,மார்க்ஸ் சிறப்புரையாற்றினார்,

ஐ.நா.சபையே! உலகநாடுகளே!, இலங்கை அரசுடன் கூட்டுச் சேர்ந்து ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்த



இந்திய அரசின் போர் குற்றத்தை மூடி மறைக்காதே!, இலங்கையும் இந்தியாவும் போர்குற்றம் புரிந்த நாடுகள் என அறிவிப்பு செய்!

தேசிய விடுதலை இயக்கத்தையும் இனப்படுகொ்லை இலங்கை அரசையும் சமப்படுத்தி நாடகமாடாதே!,ஈழத் தமிழின அழிப்பு போரை நடத்திய ராஜபக்ஷ சோனியா மன்மோகன் சிங் கும்பலை போர்க்குற்றவாளிகள் என அறிவித்துத் தண்டனை வழங்கு!

என்ற கோசங்களை முன் வைத்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.


ஆர்ப்பாட்டத்தில் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை பற்றி ஆய்வு நடத்த ஐ.நா சபையில் வந்த கோரிக்கையை முறியடித்து இந்திய அரசு, தமிழக மீனவர்கள் 500 இற்கும் மேற்பட்டோர் இதுவரை கொல்லப்பட்டும் தற்போது 4 மீனவர்கள் கழுத்தறுத்து கொல்லப்பட்டும் கள்ள மௌனம் சாதிக்கிறது இந்திய அரசு.

இந்த மௌனத்துக்குக் காரணம் இந்திய அரசின் விரிவாதிக்க நலனும், தமிழின அழிப்புக் கொள்கையுமே ஆகும்.

டெல்லியின் எடுபிடி கருணாநிதியோ தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதாக நாடகமாடுகிறார், இதேவேளை பாசிசவாதக் கொள்கைவாதியான ஜெயலலிதாவோ நீலிக் கண்ணீர் வடிக்கிறார் என அம்பலப் படுத்திப் பேசினார்கள். (வ)

உதயன்
28 ஏப்ரல் 2011 வியாழக்கிழமை

# செலிங்கோ லைஃப் வாடிக்கையாளர்களுக்கு 8 ஆவது ஆண்டாக போனஸ் பண வெகுமதிகள்




இவ்வாண்டு 9,500 இற்கும் அதிகமான காப்புறுதிதாரர்கள் பண வெகுமதிகளை வென்றுள்ளனர். கம்பனி எட்டாவது வருடமாக இந்த வெகுமதியை வழங்கியுள்ளது. உடனடியாக மாற்றக்கூடிய காசோலை வடிவிலான இந்தப் பண வெகுமதிகள், செலிங்கோ லைஃப்பின் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட விற்பனைப் படையால், ஏப்ரல் ஒன்பதாம் பத்தாம் திகதிகளில் வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கே சென்று விநியோகிக்கப்பட்டன.

செயற்பாட்டு நிலையிலுள்ள காப்புறுதிக் கொள்கைகளைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு 1.59 பில்லியன் ரூபா வருடாந்த போனஸாகப் பிரகடனம் செய்யப்பட்ட தொகைக்கு மேலதிகமாக, கம்பனியின் பிரத்தியேகமான நன்மைகளை வழங்கும் 'லைப் ரிவோர்ட்' திட்டத்தின் ஒரு அங்கமாக இது வழங்கப்பட்டுள்ளது.

20 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள ஒரு வாடிக்கையாளர் கேஷ் போனஸ் வெகுமதியைப் பெறத் தகுதி உடையவர். காப்புறுதி செய்யப்பட்ட ஆயிரம் ரூபாவுக்கு 75 ரூபா என்ற விகித அடிப்படையில் இந்தத் தொகை கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. 15 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளவர்களுக்கு ஆயிரம் ரூபாவுக்கு 50 ரூபா என்ற அடிப்படையிலும் 10ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளவர் களுக்கு ஆயிரம் ரூபா வுக்கு 25 ரூபா என்ற அடிப்படையிலும் இந்த கணிப்பீடு அமைந்துள்ளது.

இதன் அடிப்படையில் ஒரு மில்லியன் ரூபாவை காப்புறுதித் தொகையாகக் கொண்டுள்ள ஒருவருக்கு 10 ஆண்டுகள் பூர்த்தியில் 25,000 ரூபாவை கேஷ் போனஸாகப் பெறமுடியும்.

இதே தொகைக்கு 15 ஆண்டுகள் பூர்த்தியில் 50,000 ரூபாவும், 20 ஆண்டுகள் பூர்த்தியில் 75,000 ரூபாவும் பண வெகுமதியாகக் கிடைக்கும்.

"எமது வாடிக்கையாளர்களின் விசுவாசமும், கீர்த்தியும், அவர்களுக்கு இந்த வெகுமதியைப் பெற்றுக் கொடுத்துள்ளன" என்று செலிங்கோ லைஃப் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர்.ரெங்கநாதன் கூறினார்.



ஹற்றன் நஷனல் வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் 'பத்தும்விமன' பிரிவுத் திட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் மோட்டார் சைக்கிளைப் பரிசிலாக வென்ற பயனாளிக்கு மோட்டார் சைக்கிள் திறப்பை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன் கையளிக்கிறார். (207)



மக்கள் வங்கியின் பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் மு.சிவநேசன் புதுவருடத் தினத்தன்று வாடிக்கையாளர் ஒருவருக்கு மரக்கன்றை வழங்குகிறார்.

# பின் தங்கிய வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யும் பணியில் யுனிலீவர்

நாடு முழுவதிலும் உள்ள அரச வைத்தியசாலைகளில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் மகப்பேற்று பிரிவு, குழந்தைகள் காப்புப் பிரிவு மற்றும் சிகிச்சைப் பிரிவு போன்றவற்றின் தரத்தை முன்னேற்றும் நடவடிக்கைகளை யுனிலீவர் நிறுவனம் 'பாதுகாப்பான கரங்கள்' என்ற திட்டத்தின் கீழ் முன்னெடுத்து வருகின்றது.

குழந்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தயாரிப்புகளை தயாரிக்கும் பெயார்ஸ் 2002ஆம் ஆண்டு ஒக்டோபர் 01 ஆம் திகதி முதல் இந்தத் திட்டத்தை செயற்படுத்தி வருகிறது.

விற்பனையாகும் ஒவ்வொரு பெயார்ஸ் தயா ரிப்பிலிருந்தும் 25 சதத்தை இந்த செயற்றிட்டத்திற்காக ஒதுக்கீடு செய்கிறது.

இந்தச் செயற்றிட்டம் குறித்து யுனிலீவர் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் பணிப்பாளர் ரமணி சோமசுந்தர கருத்துத் தெரிவிக்கையில், "நாம் ஒரு சமூகப் பொறுப்புணர்வு திட்டத்தை முன்னெடுக்கும் முன், அந்தத் திட்டம் சமூகத்துக்கு எந்தளவுக்கு பயனுள்ளதாக அமையும் என்பது குறித்து ஆராய்ந்து அதன் பின்னரே திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம்'' என்றார்.

பொது வைத்தியசாலைகளில் எந்த விதமான திட்டங்களை முன்னெடுக்கும் முன்பும் யுனிலீவர், இலங்கை குழந்தை மருத்துவர் கல்வியகத்துடன் கலந்தாலோசனைகளை மேற்கொள்ளும்.

இந்த வகையிலேயே மிகவும் அதிகம் தேவை நிலவும் மருத்துவமனைகள் இனங்காணப்படுகின்றன.

முதலாவது ''பாதுகாப்பான கரங்கள்'' திட்டம் 2002 ஆம் ஆண்டு கொழும்பு லேடி றிட்ஜ்வே மருத்துவமனையில் அபிவிருத்திப் பணிகளுடன் ஆரம்பமானது. கடந்த பத்து ஆண்டுகளில் 16 திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் அண்மையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சிகிச்சைப் பிரிவும், டயரியா பிரிவும் சிறுவர்கள் விளையாடும் பகுதியும் சுமார் 7 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டன.

# அகவை ஒன்றில் பங்குப்பரிவர்த்தனையின் யாழ். கிளை

அகவை ஒன்றின் நிறைவில் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையின் யாழ்ப்பாணக் கிளையானது தனது வளர்ச்சியில் பங்கு பற்றிய பயனாளிகளுடன் மகிழ்ச்சியைப் பரிமாறிக்கொள்வதில் பெருமையடைகின்றது.

இந்த வகையில் பங்குச் சந்தை செயற்பாடுகளை முறைப்படுத்தி, சொத்து மற்றும் பெறுமதி உருவாக்கத்துக்கான விருப்பத் தெரிவுகளில் முதன்மையான தெரிவாகப் பங்குப்பரிவர்த்தனையில் ஈடுபடுவதற்கு வழிகாட்டல் எனும் முதன்மை நோக்கைக் கொண்டு பங்குப்பரிவர்த்தனை செயலாற்றுகின்றது.

பங்குப்பரிவர்த்தனையின் அண்மைக்காலச் செல்நெறியை நோக்குமிடத்து, கொழும்பு பங்குப்பரிவர்த்தனையானது ஆசியப் பிராந்தியத்தில் முதன்மையான நிறுவனமாகவும், சர்வதேச ரீதியில் இரண்டாம் இடம் என்னும் உயர்ந்த சாதனை மட்டத்தையும் கொண்டு திகழ்கின்றது.

இத்தகைய சாதனைகளின் வழித்தடத்தில் சமாதானம் பூத்திட்ட வேளையில் சமாதானத்தின் பிரசவமாக 5 ஆவது கிளையாக யாழ். மக்களுக்கு ''புதிய முதலீட்டு வாய்ப்பு- புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கைகள்'' எனும் மகுடவாசகத்துடன் சேவையாற்றத் திறக்கப்பட்ட யாழ்ப்பாணக் கிளை இன்று தனது முதலாவது ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்துள்ளது.

பங்குப்பரிவர்த்தனை செயலாற்றுகை தொடர்பில் யாழ்ப்பாணக் கிளையின் பெறுபேற்றை நோக்குமிடத்து, அதன் நாளாந்த வியாபாரப் புரள்வானது 4.5 மில்லியன் என்னும் உயர்பெறுமதியை வெளிப்படுத்துகிறது. அத்துடன், யாழ். கிளையில் உள்ள 6 பங்குத்தரகர் நிறுவனங்களினாலும் ஆயிரத்து 460 இற்கும் மேற்பட்ட பிணைகள் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் முதலீட்டாளர்கள் போட்டி அடிப்படையில் பின்வரும் முதலீட்டுச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

பங்குச்சந்தையுடன் தொடர்புடைய தகவல்களை உரியகாலத்தில் கையாளமுடிதல், நடப்பு நேர வியாபாரத் தகவல்களை மற்றும் கட்டளைகளின் நிறைவேற்றங்களை உடனுக்குடன் அறிதல், வேறுபட்ட பங்குத்தரகர் நிறுவனங்களின் ஆய்வறிக்கைகள், வரலாற்று ரீதியான வியாபாரத் தகவல்கள், பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளின் ஆண்டறிக்கைகளை மீளாய்வு செய்து கொள்ளல் போன்ற சேவைகளைத் திறந்த மனப்பாங்குடனும் ஒன்றுக்கு மேற்பட்ட பங்குத்தரகர்களின் பிரசன்னத்துடனும் பெறுவதற்கு வாய்ப்புக்களை வழங்கி கொழும்பு பங்குப்பரிவர்தனையின் யாழ். கிளை யாழ்ப்பாண மக்களது வாழ்வியலுடன் தன்னை இணைத்து சேவையாற்றுவதில் பெருமிதம் கொள்கின்றது.



இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட மோட்டார் பிளஸ் முழுக்காப்புறுதி அஸ்திரத்தில் வெற்றியீட்டிய மயில்வாகனம் என்பவருக்குரிய டியிற்றல் கமெராவை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ்.கிளையின் நிர்வாக உத்தியோகத்தர் ரி.ஏ.அஜித்குமார் வழங்குகிறார். அந்த வாகனத்துக்கு குத்தகை வசதி வழங்கிய பார்லிஸ் பினான்ஸ் அதிகாரி சிவகீர்த்தன் மற்றும் காப்புறுதிக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களும் நிற்கின்றனர்.

# பிரதேச செயலக கூடைப்பந்தாட்டம்; நல்லூர் அணி சம்பியன் வென்றது

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியும் நல்லூர் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் மிகவும் கடுமையாக மோதிக் கொண்டதுடன் சம பலமுள்ள அணிகள் என்பதையும் நிரூபித்துக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் நல்லூர் பிரதேச அணி 22 : 21 புள்ளிகள் என்ற நிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் வெற்றியை தமதாக்க வேண்டும் என்ற துடிப்புடன் களமிறங்கி மோதிக் கொண்டன. ஆனாலும் நல்லூர் பிரதேச செயலக அணி விளையாட்டை வேகப்படுத்தி இறுதி நேரத்தில் புள்ளிகளைப் பெறத் தொடங்கியது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் நல்லூர் பிரதேச செயலக அணி 27:15 புள்ளிகள் என முன்னிலையில் நின்ற வேளையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

ஆட்டமுடிவில் நல்லூர் பிரதேச செயலக அணி 49:36 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியை வெற்றி பெற்று யாழ். மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ஐ-86)



நெடுந்தீவு கடற்படையினரால் நடத்தப்பட்ட புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான கிடுகு பின்னுதல் போட்டியில் பங்குபற்றிய பெண்கள். (7)

## தேசிய போட்டிக்கான பணிப்பாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.28

37ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான பணிப்பாளர்களுக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பு விளையாட்டு அபிவிருத்தித் திணைக்கள மண்டபத்தில் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் திருமதி எம்.பிறஞ்சினி ஜெயகொடி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் சி.அண்ணாத்துரையும் பங்குகொள்வார். (ஐ-23)

## கிளிநொச்சி லீக் நடத்தும் உதைப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.28

கிளிநொச்சி மாவட்ட உதைப்பந்தாட்ட லீக் நடத்தும் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மீள்குடியேற்றத்தின் பின்னர் கிளிநொச்சி உதைப்பந்தாட்ட லீக் நடத்தும் இந்தப் போட்டியில் 13 உதைப்பந்தாட்ட அணிகள் பங்குபற்றவுள்ளதாக கிளிநொச்சி உதைப்பந்தாட்ட லீக்கின் தலைவர் வ.ஜோய் பியசீலன் தெரிவித்துள்ளார். (த-323)

## வடமராட்சி வலய மாணவர்களுக்கு அரை மரதன் ஓட்டப் போட்டிகள்

வடமராட்சி, ஏப்.28

வடமராட்சி வலய மட்ட அரை மரதன் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அரை மரதன் ஓட்டப் போட்டி 21 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்டதாயிருக்கும்.

இந்தப் போட்டி ஆண், பெண் இரு பாலாருக்கும் நடத்தப்படவுள்ளது. ஒவ்வொரு பாடசாலையிலிருந்து 5 ஆண் போட்டியாளர்களும் 5 பெண் போட்டியாளர்களும் இப்போட்டியில் பங்குபற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

15 வயதுக்கு மேற்பட்ட 19 வயதுக்கு கீழ்ப்பட்ட மாணவ, மாணவிகள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளமுடியும்.

போட்டியில் பங்குபற்றவுள்ள மாணவர்கள் பெற்றோரின் சம்மதக் கடிதம் அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு இன்று வியாழக்கிழமை சமர்ப்பிக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணக் கல்லூரிக்கு மூன்றாம் இடம்

வலி.வடக்கு, ஏப்.28

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தட்டிக் கொண்டது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை மைதானத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியின் கையே மேலோங்கி இருந்தது. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி தன்னாலான எதிர்ப்புகளைக் காட்டிய போதிலும் அவைகள் வெற்றியளிக்கவில்லை.

முதல் பாதி ஆட்டம் யாழ்ப்பாணக் கல்லூரி 17:08 என்ற புள்ளி அடிப்படையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் வெற்றி பெறுவதற்கான புள்ளிகளைப் பெறும் பெரும் எதிர்பார்ப்புடன் களமிறங்கிய போதிலும் புள்ளிகளைப் பெறுவதில் இரு அணிகளும் சிரமங்களுக்கு உள்ளாகின.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் யாழ்ப்பாணக் கல்லூரி 13:05 புள்ளிகள் என்ற நிலையில் முன்னிலையில் காணப்பட்ட நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 31:13 புள்ளிகள் என்ற அடிப்படையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியை வெற்றிபெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதுடன் யாழ். மாவட்ட மட்டத்திலான போட்டிகளில் விளையாடவும் தகுதி பெற்றுள்ளது. (த-86)

## மென்பந்தாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் இவ்வாண்டுக்கான விஞ்ஞான வார நிகழ்வு ஆரம்பமாகிறது.

இந்த நிகழ்வின் ஆரம்ப நாள் நிகழ்வாக இன்று பிற்பகல் 3.30 மணியளவில் விஞ்ஞான பீட ஆசிரியர் அணிக்கும், மாணவர் அணிக்கும் இடையிலான மென்பந்து துடுப்பாட்ட காட்சி போட்டி இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் கே.கந்தசாமி கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வுக்கு விஞ்ஞான பீட மாணவர்களைக் குறித்த நேரத்தில் சமுகம் தரும்படி விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ஐ)

## மன்னார் லூசியஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஏப்.28

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனம் நடத்தும் கொல்சிம் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வாரம் மன்னார் தாழ்வுப்பாடு உதைபந்தாட்டப் பயிற்சி, நிலைய மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் மன்னார் சென்.லூசியஸ் அணி வெற்றி பெற்றது.

மன்னார் சென். லூசியஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் மன்னார் சென். லூசியஸ் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய பருத்தித்துறை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## ருவென்ரி - 20 கிரிக்கெட் சனியன்று

வடமராட்சி விளையாட்டுக் கழங்கங்களுக்கிடையிலான ருவென்ரி - 20 கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை ஆரம்பமாகவுள்ளன.


மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான இப் போட்டியில் 40 அணிகள் பங்குபற்றுகின்றன. (த-236)

## சைக்கிள் ஓட்டப் போட்டி முடிவு

வலி.வடக்கு, ஏப்.28

தெல்லிப்பழை பொலிஸாரும் வலி.வடக்கு செயலகமும் இணைந்து நடத்திய தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டிய விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் இடம்பெற்றது.

போட்டியில் முதலாம் இடத்தை அனுசா (பண்டத்தரிப்பு), இரண்டாம் இடத்தை பருவநிலா (தெல்லிப்பழை), மூன்றாம் இடத்தை பத்மசாந்தியா (அளவெட்டி) பெற்றுக்கொண்டார். (ஐ-86)



மானிப்பாய் சத்திய சாய் பாபா பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் விருந்தினராக கலந்து கொண்ட வட மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி இரா.வசந்தசேனன் உள்ளார். (த-26)

## 523ஆவது படையணி ஏற்பாட்டில் சாவகச்சேரியில் விளையாட்டுவிழா

தென்மராட்சி, ஏப்.28

523ஆவது படைப் பிரிவின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேச மக்களுக்கான தமிழ், சிங்கள புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம், பீனிக்ஸ் பிளாஸ்ரிக் உற்பத்தி நிறுவனம், எயர்டெல் நிறுவனம் ஆகிய வற்றின் அனுசரணையுடன் நிகழ்வுகள் நடைபெற்றன.

523ஆவது படையணி கட்டளைத் தளபதி பிரிகேடியர் ரி.எஸ் தெமட்டம்பிட்டிய தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக 52ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் டபிள்யு ஏ.வி.அனுர சுதசிங்கவும், சிறப்பு விருந்தினராக 522 ஆவது படையணி தளபதி பிரிகேடியர் எஸ்.சில்வா, சாவகச்சேரி நகரசபை செயலாளர் கொன்ஸ்ரன்ரைன் ஐக்சீல், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நடைபெற்ற இருபாலாருக்குமான சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம், உட்பட 60 இற்கும் மேற்பட்ட போட்டிகளில் பெரும் எண்ணிக்கையான தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் கலந்துகொண்டனர்.

இந்த வருடம் வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் படையினரும் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படாமை குறிப்பிடத்தக்கது. (த-207)

அளவெட்டி அறிவகம்
விளையாட்டுக் கழகம் நடத்தும்
மாபெரும் மாட்டு வண்டிச் சவாரி

இடம்: பண்டத்தரிப்பு விளான் சவாரித்திடல்
காலம்: 08.05.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணி
மாவட்ட ரீதியாக நடைபெறவுள்ள
இப்போட்டியில் அனைத்துக் காளைச் சொந்தக்
காரர்களையும் கலந்துகொள்ளுமாறு
அழைக்கின்றோம்.

ஊடக அனுசரணை:
உதயன்
அளவெட்டி அறிவகம்
விளையாட்டுக்கழகம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லம்மா சின்னத்துரை



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா சின்னத்துரை 26.04.2011 செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சு.சின்னத்துரையின் அன்பு மனைவியும் முருகையா (யாழ்.பல்கலைக் கழகம் பராமரிப்புப் பகுதி), கமலாதேவி, கணேசலிங்கம் (தயா - தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயும் அனுசூயா, உதயகுமார், ஞானேஸ்பதி (ஆசிரியை,யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்) ஆகியோரின் மாமியும் அனுபரன், ஆரபி, ஆத்மிகா, தர்ஷிகா, றஜீபன் (சிங்கள ஆசிரியர், ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை), தாட்சாயிணி (ஆசிரியை, யா/மல்லாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை), இலக்கியா, ஜனோஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.04.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தனக்கிரியைக்காக பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டாக்டர் சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை, சுன்னாகம். (3588)

தகவல்: குடும்பத்தினர்.

## குமாரசாமி சாந்தலிங்கம்

(ஓய்வுபெற்ற அதிபர், செயலாளர், அமுதசுரபி அன்னதான சபை, நயினாதீவு)



நயினாதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சாந்தலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்) நேற்று (27.04.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - செல்லம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வடிவாம்பிகை தம்பதியரின் மருமகனும் பூம்பாவையின் அன்புக் கணவரும் சதானந்தன் (ஜேர்மனி), கணேசானந்தன் (லண்டன்), முருகானந்தன், விபுலானந்தன், திருமகள் (ஆசிரியை), கலைமகள் (கலாசார உத்தியோகத்தர்), மலைமகள், குலமகள், தமிழரசி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சண்முகதாஸ், மணிவண்ணன், குணவண்ணன், லோஜி (ஜேர்மனி), இந்திராதேவி (லண்டன்), கேதீஸ்வரன் (கனடா), மலைமகள் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், இராமச்சந்திரன், சொர்ணம்மா, தனலெட்சுமி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் தம்பிமுத்து, வன்னியசிங்கம், மகேஸ்வரி, தியாகராசா (தலைவர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு), காலஞ்சென்ற நடராசா மற்றும் நவரெத்தினராசா, விக்கினேஸ்வரன், உமாதேவன், உமாதேவி, காலஞ்சென்ற சாந்தநாயகி மற்றும் அஸ்தநாயகி, சுவாதிநாயகி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் சண்முகரத்தினம், ஸ்ரீபதிநாதன், சுதாகரன் ஆகியோரின் சகலனும் பிரகணன், தனஞ்சயன், வித்தியா, திவ்வியா, ஐங்கரன், கோபிகா, ஜோதிகா, வந்தனா, யுவிதா, சாயினியா, காயித்தியா, நயனி, கிரிஸ், ஜான்சன், ஜான்சி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

6 ஆம் வட்டாரம், நயினாதீவு. நா.குணவண்ணன் (மருமகன்) T.P.No: 021 3207471

## திருமதி கனகேஸ்வரி இராசையா

(ஓய்வு பெற்ற பிரதி அதிபர், இணுவில் மத்திய கல்லூரி) B.A. Dip in Education



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகேஸ்வரி இராசையா (26.04.2011) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அனன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா- ஞானபூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை இராசையா (B.Com) அவர்களின் அன்பு மனைவியும், உமாகாந்தனின் (உயிரியல் மருத்துவத் தொழில் நுட்பவியலாளர், பொது வைத்தியசாலை, மன்னார்) அவர்களின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான கதிரமலை(ஓய்வு பெற்ற அதிபர்), பஞ்சலிங்கம் (Chief pharmacist), அன்னலிங்கம் மற்றும் சண்முகலிங்கம் (பொறியியலாளர்), ஆகியோரின் பாசமிகு சகோதரியும், யோகராணி, தேவி, பரமேஸ்வரி, கோபாலபிள்ளை, கண்மணி, கனகம்மா, அன்னலட்சுமி அகியோரின் அன்பு மைத்துனியும் புருஷோத்தமன், மைதிலி, அபிராமி, கிஷோர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நேற்று (27.04.2011) புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்துமயானத்தில் தகனம் செய்யப் பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
'உமாகிரி' சிவகாமி அம்மன் கோயில் வீதி, இணுவில் கிழக்கு.
இ.உமாகாந்தன்(மகன்)
இ.சண்முகலிங்கம்(சகோதரன்)

## மூன்றாவது நாளாகவும் தொடர்கிறது பட்டினிப் போர்

யாழ்ப்பாணம்,ஏப்.28

நியூமகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளில் ஒருவர் இந்த மாதம் 25ஆம் திகதி ஆரம்பித்த பட்டினிப் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது.

வவுனியா குட்செட் வீதியைச் சேர்ந்த மரியதாஸ் அன்ரனி அஞ்சலோ (வயது-27) என்ற கைதியே பட்டினிப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகள் இவரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். அத்துடன் சிறைச்சாலை உயரதிகாரிகளும் இவருடன் கலந்துரையாடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இன்று வியாழக்கிழமை 4ஆவது நாளாகவும் அவரது போராட்டம் தொடரும் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-15)

### தவறிவிட்டது

அரசரத்தினம்- சுதன் ஆகிய எனது சாரதி அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை[781733903V] இராணுவ அடையாள அட்டை வாகன லீசிங் அட்டை என்பன பேர்ஸ்சுடன் மாவிட்ட புரம் சேந்தான்குளம் இராணுவ முகாமுக்கும் கீரிமலை வாகனத் தரிப்பிடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள முகவரியிலோ அல்லது தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்புகொண்டு தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

உடுவில் கிழக்கு, கற்பகப் பிள்ளையார் கோயிலடி, சுன்னாகம். T.P-0773549635

### தவறிவிட்டது

கடந்த 07.04.2011 வியாழக்கிழமை வவுனியாவில் இருந்து தண்ணீரூற்று முல்லைத்தீவுக்கு 8.15க்கு புறப்பட்டு 12.15 க்கு சென்றடைந்த 4015 இலக்கமுடைய பேருந்தில் கறுப்பு, சிவப்பு நிற இரண்டு Pen Drive அடங்கிய கறுப்பு நிறபேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும், சன்மாணம் வழங்கப்படும்.

தொடர்பு-
0779663749, 0243240041, 0212221109

### ஒவ்செற் விற்பனைக்கு

B4, A4, லீகள் பதிப்புச் செய்யக் கூடிய கமடா ஒவ்செற் விற்பனைக்குண்டு.

தொடர்பு- 0750488417

### விற்பனைக்கு

பாவித்த நல்லநிலையில் உள்ள 3000 ஓடுகள் விற்பனைக்கு உண்டு

தொடர்பு- 0778448725

### விற்பனைக்குண்டு

மீன் பாவனை செய்யக்கூடிய நிலையிலுள்ள கட்டடப் பொருள்கள் விற்பனைக்குண்டு. கடைக்குரிய சுருக்குக் கதவுகள், சீற், பனை மரங்கள் என்பன.
தொடர்பு- 550, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 0773787340

### தவறிவிட்டது

இல.116, அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிட முகவரியாக கொண்ட செ .பாலசிங்கம் என்பவரது கைப்பை கொக்குவில், திருநெல்வேலிப் பகுதியில் தவறிவிடப்பட்டுள்ளது. அதில் அவரது [552673310V] மனைவியினதும் செ.காந்தராணி[565543121V] தேசிய அடையாள அட்டைகள் தவறிவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர் கள் தயவு செய்து கீழ்க் கண்ட தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உதவவும்.

T.P-0770372250

### விற்பனையாளர் தேவை

முன் அனுபவமுள்ள, பழக விரும்புபவர் கள் பெண்கள், மற்றும் ஆண்கள் (45வயதுக்கு மேல்) தேவை. திறமைக்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். உடன் நேரில் வரவும்.

லைடன் புடைவை நிலையம்,
ஆஸ்பத்திரி வீதி, (பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

கோயில் வீதி, பண்டாரகுளம் ஒழுங்கைக்கு அண்மையில் ஒரு பரப்பு, சுற்றுமதிலுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு

தொடர்புக்கு-0776401699

### வாடகைக்கு

நல்லூர் மருதடி வீதியில் முதலாம் ஒழுங்கையில் அமைந்துள்ள 4 அறைகள் , 2வரவேற்பறைகள், வசதியான குளியல் அறை,வசதியுடைய தனிவீடு உடனடியாக வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள், கம்பனிகள் விரும்பத்தக்கது.

தொடர்புக்கு-0750405806, 0779955754

### வாகனம் விற்பனைக்கு

NP-PP-xxxx இலக்கமுடைய டிமோ பட்டா வாகனம் விற்பனைக்குண்டு

T.P-0778996559

வடமராட்சி மண்ணில்.....

31 ஆம் அணி யாழ். மருத்துவ பீட மாணவர்கள் ஏற்பாட்டில்
மாபெரும் மருத்துவ விழிப்புணர்வுக் கண்காட்சி - 2011

அனுமதி இலவசம்

இடம்: யா/ஹாட்லிக் கல்லூரி
காலம்: 2011 ஏப்ரல் 29, 30 ஆம் திகதி, மே முதலாம் திகதி
நேரம்: மு.ப. 9 - பி.ப. 4 மணி வரை
(வெள்ளி மு.ப. 9 மணியிலிருந்து பாடசாலை மாணவர்கள் பார்வையிடலாம், வெள்ளி பி.ப. 2.30 இலிருந்து சனி, ஞாயிறு முழுவதும் பொதுமக்கள் பார்வையிடலாம்)

★ நீரிழிவு ★ புற்றுநோய்
★ மாரடைப்பு, மார்புமுடக்குவலி ★ ஆஸ்துமா
★ உயர்குருதியமுக்கம் ★ வீதி விபத்துக்கள்
★ பார்வை தொடர்பான பிரச்சினைகள் ★ முதலுதவி

ஆகிய தலைப்புக்களில் விழிப்புணர்வுக் கண்காட்சியும் விளக்கமும் இடம்பெறும்.

★ இலவச மருத்துவ பரிசோதனைகள் (நீரிழிவு, குருதியமுக்கம்)
★ இலவச மருத்துவ ஆலோசனைகள்
★ விவரண காட்சிகளும், விளக்கங்களும்
★ கண் பரிசோதனையும், இலவச வாசிப்பு கண்ணாடி வழங்கலும்
★ ஆஸ்துமா பரிசோதனையும் இலவச உறிஞ்சிகள் (inhalers) வழங்கலும்
★ விழிப்புணர்வு துண்டுபிரசுரங்கள்
இன்னும் பல.....,

வருமுன் காப்போம்
நோயற்ற சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்
அனைவரும் அணிதிரண்டு வந்து, கண்காட்சியைக் கண்டு பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.
- கண்காட்சி ஏற்பாட்டுக்குழு -
(பாடசாலை வளாகத்தினுள் தகுந்த சீருடையுடன் வருவது விரும்பத்தக்கது)

அனுசரணை: நீரிழிவு சிகிச்சை நிலையம், இதய நோய் சிகிச்சைப் பிரிவு (யாழ். போதனா வைத்தியசாலை), மார்பு சிகிச்சை நிலையம் - பண்ணை, புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, Vision Care

ஊடக அனுசரணை:
உதயன்

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

★ கந்தசாமி ஜெனனி
(யா/விக்னேஸ்வராக் கல்லூரி)- 3பி, 5சி, எஸ்
★ புவனேஸ்வர ராஜா ராகினி
(யா/ மகாஜனக் கல்லூரி) 3ஏ, 2பி, 3எஸ்
★ தர்மகுலசிங்கம் ஜசிந்திரன்
(யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்)5ஏ, 3சி

மகாத்மா வீதி, ஐயனார் கோயிலடி, நெல்லியடி, கரவெட்டி. T.P0775293156

பாராட்டி வாழ்த்துவோர்:
மகாத்மா விளையாட்டுக் கழகம், நெல்லியடி.

## அந்தியேட்டி அழைப்பு



### திருமதி துரசிங்கம் ஈஸ்வரிஅம்மா

மலர்வு 07.01.1933 உதிர்வு 13.04.2011

வாழ்வாங்கு வாழ்ந்து 13.04.2011 இல் மண்ணுலக வாழ்வை நீத்து அமரத்துவ மெய்திய எமது குடும்பத்தலைவியின் இறுதி நிகழ்வுகளில் கலந்தும் மற்றும் பல வழிகளிலும் துயர் பகிர்ந்தும் ஆறுதல் தந்த நல்லுள்ளம் கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (28.04.2011) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (29.04.2011) வெள்ளிக்கிழமை ந.ப. 12 மணியளவில் இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் இந்த நிகழ்வில் பங்குபற்றி தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

68, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராகக் கடமையாற்றும் இராசகிருஷ்ணர் பிரபாகரன் அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி பாலசிங்கம் தேவாம்பிகை

அவர்கள் 27.04.2011 அன்று இறைபதம் அடைந்தமையினையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர் நலன்புரி சங்கம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

## 35 நிமிடங்களில் சபை ஒத்திவைப்பு

ஊழியர் ஒய்வூதிய நன்மைகள் நிதி யச் சட்டமூலத்துக்கு எதிராக உயர் நீதி மன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட் டுள்ளமையால், அந்தச் சட்டமூலத்தை விவாதத்துக்காக நாடாளுமன்றில் சமர்ப் பிக்க முடியாது என்று ஆளுங்கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

ஊழியர் ஒய்வூதிய நன்மைகள் நிதி யச் சட்டமூலம், கடல் கடந்த ஊழியர் கள் ஒய்வூதிய நிதியம் சட்டமூலம், ஒய் வூதியங்கள் (விளைவாந்தன்மையின வான ஏற்பாடுகள்) சட்ட மூலம் மற்றும் ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் ஆகியன நேற்று சபையில் சமர்ப்பிக்கப்பட இருந்தன.

இந்த நிலையில், ஊழியர் ஒய்வூதிய நன்மைகள் நிதியம் சட்டமூலத்துக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று ஆளுங்கட்சி பிரதம கொறடா தினேஷ் குணவர்தன சுட்டிக் காட்டினார். இதனை அடுத்து நேற்று ஒரு மணிக்குக் கூடிய சபை 35 நிமிடங்களில் ஒத்திவைக்கப்பட்டது.

## நான்கு கைதிகள் தப்பினர்

திருகோணமலை சிறைச்சாலையி லி ருந்து நான்கு சிறைக்கைதிகள் தப்பி ஓடிவிட்டனர் என்று திருகோணமலை துறைமுகப் பொலிஸார் நேற்றுத் தெரி வித்தனர். தர்மகுமார், ஜெஸ்ரின், சுரேஷ் குமார் மற்றும் அலி ஆகிய சிறைக் கைதிகளே கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தப்பி ஓடியுள்ளனர் என்று சிறைச் சாலை அதி காரி ஒருவர் தெரிவித்தார்.

சிறைச்சாலையின் பின்புறமாகவுள்ள ஜன்னலை உடைத்துக்கொண்டு வெளியே ஓடிய கைதிகள், மதிலின்மேல் போர்வையை தொங்கவிட்டு அதன் மூலம் வெளியே குதித்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-சி)

## அடாவடிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புடனோ அல்லது வேறு அரசியல் கட்சி களுடனோ இணைந்து விடவில்லை. நான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சியின் நேரடி பிரதிநிதியாகவே தொடர்ந் தும் செயற்படுவேன். என்னை மேய ரால் கட்டுப்படுத்த முடியாது .

குற்றச் செயல்கள் என்ன நடந்தா லும் அதனை தட்டிக் கேட்க தவறமாட் டேன்- எனக் கூறினார்.

யாழ். நகர முதல்வராக திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா பதவி ஏற்ற காலம் தொடக்கம் அவரால் மேற்கொள் ளப்பட்ட ஊழல் மோசடிகள் அதிகார துஷ்பிரயோகங்கள் தொடர்பாக திரட் டிய சான்றாதாரங்களை யும் ஜனாதி பதிக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நேற்று யாழ்.பாடி விருந் தினர் விடுதியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே நிஷாந்தன் இத னைக் குறிப்பிட்டார்.

## யாழ். மாநகர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சான்றுகளும் ஆவணங்களும் எம்மிடம் இருக்கின்றன. எனவே யாழ். நகரில் புத் திஜீவிகள், மதகுருமார்கள், ஊடக விய லாளர்கள் மற்றும் பொது மக்கள் முன்னி லையில் அவற்றைப் பகிரங்கப் படுத்து வேன்.

இந்தச் சவாலை முதல்வர் ஏற்றுக் கொண்டு பகிரங்க விவாதத்துக்கு வர வேண்டும் எனவும் சவால் விடுத்தார். இந்தச் சவாலை முதல்வர் ஏற்றுக் கொள் வாரா? இந்த ஊழல்களை அரசியல் காழ்ப்புணர்ச்சியாகவோ, கட்சி முரண் பாடுகளினாலோ, தனிப் பட்ட குரோதங் களினாலோ நாம் முன்வைக்கவில்லை. யாழ். நகர் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு எந்த விதமான மாற்றுக் கருத்துக்களும் இல்லை. அதே வேளை சட்டம், ஒழுங்கு, விதி முறைகள், கடைப்பிடிக்கப் படவேண் டும். பொதுமக்களின் வரிப்பணம் ஒரு சத மேனும் துஷ்பிரயோகம் செய்ய இடம ளிக்க மாட்டோம் என்றார் விந்தன்.

## பாதுகாப்புச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

நல்லிணக்கம் மற்றும் பதிலளிக்கும் பொறுப்பு உள்ளிட்ட யுத்தத்தின் பின் னரான அனைத்து சவால்கள் தொடர் பாக ஐ.நா. சபையும் இலங்கை அரசும் இணைந்து செயலாற்றும் என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் இலங்கையின் யுத்த காலத்தின்போது உண்மையான சேத விவரங்களை ஐ.நா. சபை வெளியிடாது மறைத்து வைத்திருந்தது என்று ஐ.நா. நிபுணர்கள் குழு அறிக்கை குற்றஞ் சாட்டியிருப்பதை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் ஒத்துக் கொண்டுள்ளார் என்று 'இன்னர்சிற்றி பிரஸ்'இணையதளம் தெரிவித்துள்ளது.

நிபுணர்கள் குழு அறிக்கை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பிக்கப் பட்ட பின் 'இன்னர்சிற்றி பிரஸ்' பான் கீ - மூனிடம் இரண்டு கேள்விகளை முன் வைத்தது என்றும் அந்தக் கேள்விக ளுக்குப் பதிலளிக்கும்போதே பான் கீ - மூன் மேற்படி குற்றச்சாட்டை ஒத்துக் கொண்டார் என்றும் 'இன்னர்சிற்றி பிரஸ்' தெரிவித்துள்ளது.

## பான் கீ- மூனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுப்பதற்கு பான் கீ - மூனுக்கு உரிமை இல்லை.அத்துடன் இது சட்ட விரோ தமான நடவடிக்கையாகும்.

ஐ. நா. நிபுணர் குழுவென இதனைப் பலர் குறிப்பிடுகின்றனர். இது நிபுணர் குழுவல்ல. செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக் கப்பட்ட ஆலோசனைக்குழு. பான் கீ - மூனால் நியமிக்கப்பட்ட இந்தக் குழு வுக்கு ஆரம்பம் முதலே அரசு தனது எதிர்ப்பைத் தெரிவித்து வந்தது.

இந்த குழுவுடன் நாம் எந்தவொரு நடவடிக்கையையும் ஒருபோதும் மேற் கொள்ளவில்லை. இலங்கை அரசு கற் றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான ஆணைக் குழு வொன்றை நியமித்து அதனூடாக இலங்கையிலுள்ள பலரிடம் சாட்சியங்க ளைப் பதிவு செய்துகொண்டது.

இந்த ஆணைக்குழு வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களில் தனது சாட்சியங்களைப் பதிவு செய்துகொண் டது. இலங்கையின் இறைமைக்குட் பட்ட விதத்தில் சுயாதீனமான முறை யில் நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவரும்வரை காத்திருக் குமாறு பலர் இக்குழுவிடம் கோரிக்கை விடுத்தபோதிலும் அவசர அவசரமாக இதனை வெளியிட என்ன தேவை உள்ளது? பான் கீ - மூனின் குழுவின ருக்கு சாட்சியங்கள் எங்கேயிருந்து கிடைத்தன? இவர்கள் இலங்கைக்கு வரவில்லை. சனல் - 4 காட்சிகளையும் இலங்கையிலுள்ள ஐ. நாவின் முன்னாள் பேச்சாளரான கோர்டன் வைஸ் தெரி வித்த கருத்துக்களையுமே அவர் கள் சாட்சியங்களாகப் பதிவு செய்துள்ளனர்.

கோர்டன் வைஸ் இலங்கையிலி ருந்தபோது தாம் வடக்குக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை எனக் குறிப் பிட்டுள்ளார். அவ்வாறாயின் அவரின் சாட்சியங்கள் உண்மையென ஏற்றுக் கொள்வது எப்படி? இவ்வாறான அறிக்கை யொன்றை நாடொன்று நிராகரித்ததன் பின்னர் சர்வதேச அமைப்புகள் அதா வது ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை, அல்லது மனித உரிமை பேரவை போன்றன விசாரணைகளில் ஈடுபடாது.

அவ்வாறு ஈடுபடும் சம்பிரதாயமும் கிடையாது. அவ்வாறு அந்த நிறு வனங்கள் கோரும் பட்சத்தில் மாத்தி ரமே பான் கீ - மூனால் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்க முடியும். அவ்வாறு இல்லாவிட்டால் அதனைக் கிடப்பிலே போட்டு முடிக்க வேண்டியதுதான் மிச் சம். அரசு என்ற ரீதியில் இதனை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். எனவே அறிக் கையை குப்பைத் தொட்டிக்கே வீச வேண்டி ஏற்படும். - என்றார். (ஒ-சி)

## 'தருஸ்மான் அறிக்கை'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'திருஸ்மான் அறிக்கை' என்று பல தடவை விளித்துக் கூறப்பட்டது.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையைத் தயாரித்த குழுவின் தலைவர் தருஸ் மான் என்பவர் ஆவார்.

ஐ.நா. அமைப்பினால் வெளியிடப் பட்ட உத்தியோக பூர்வ அறிக்கை என்று அதனைக் கருத்தில் கொள்ளாது தனிப்பட்ட ஒரு குழுவாய் தயாரிக்கப்பட்ட அறிக்கை என்பதை வெளிப்படுத்தும் வகையிலேயே இலங்கை அரசு இவ்வாறு பெயரிட்டு (DARUSMAN REPORT) இருப்பதாக அவதானிகள் தெரிவித்தனர்.

## எமது துயரங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த போதிலும், நிதானமாக சிந்தித்து எம்மை வெற்றி பெறச் செய்தனர். நாங் கள் அரசுடன் பேசி எமது இலட்சியத்தை அடையலாம் என்று அவர்கள் நம் பிக்கை கொண்டுள்ளனர்.

இன்றைக்கு இத்தனை மோசமான சூழ்நிலையிலும் நாங்கள் அரசுடன் பேசு வதற்கு திடசங்கற்பம் கொண்டுள் ளோம். நாங்கள் மன்னிக்கின்ற மனப் பான்மை உடையவர்கள் என்ற பாடத்தை தந்தை செல்வா எங்களுக்குச் சொல்லித் தந்திருக்கிறார்.

தமிழ் மக்கள் தங்கள் விடுதலைக் காகத் தங்களைத் தியாகம் செய்வதற்கு உரித்துடையவர்களாகவும் அந்தத் தியாகம் செய்வதற்கு மனத்திடம் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். இதனைத் தந்தை செல்வா எமக்குக் கற்றுத் தந்திருக்கிறார்.

தந்தை செல்வாவின் வழிகாட்டலின் அடிப்படையில் நாங்கள் எம் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுக் கொடுப் பதற்கு சர்வதேசரீதியாக ஜனநாயக வழி களில், அஹிம்சை வழிகளில் போராடு வதற்குத் தயாராக உள்ளோம். தந்தை செல்வா எப்பொழுதும் எமக்கு வழிகாட் டியாக இருக்கிறார். அவருடைய ஆன்மா, ஆவி அனைத்தும் எமது இலட்சியத்தை அடைவதற்கு உந்து சக்தியாக எம்மு டன் இருக்கும்.

இந்த நாட்டிலே வாழ்கின்ற தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றி ணைந்து தமது இலட்சியத்துக்காகப் போராட முழு உரித்துடையவர்கள் என்று தந்தை செல்வா கூறியுள்ளார்.

இந்த அரசுடன் நாங்கள் பேச்சுகளை நடத்துவதற்கு உளப்பூர்வமாக எம்மை அர்ப்பணித்துள்ள போதிலும் அரசிடம் இருந்து இந்த நாட்டின் இனப் பிரச்சி னைத் தீர்வுக்கு இன்னும் முழுமையான விருப்பம் வெளிப்படவில்லை.

இன்று எமது பிரச்சினை சர்வதேசத் துக்கும் அனுப்பப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கை சர்வதேசத் திடம் இருந்து இலங்கை அரசிடம் விடுக்கப்படும் நிலை உருவாகி இருப் பது எமக்கு ஒரு பலமாக இருக்கிறது.

எமது இனத்தின் அடையாளங்களை அழித்து, எமது நிலங்களை அபகரித்து தமிழ்த் தேசிய இனம் எங்கெல்லாம் பெரும்பான்மையாக வாழ்கின்றார்களோ அவர்களை சிறுபான்மை ஆக்குவது தான் இந்த அரசின் நிகழ்ச்சித் திட்டமாக உள்ளது.

எமது தாயக நிலங்கள் இராணுவ மயமாக்கப்பட்டு வருவதை எமது மக் கள் மிகவும் வேதனையோடு தாங்கி வருகின்றார்கள்.

இந்த அரசு தமிழ் மக்களது அனைத்து தியாகங்களையும் பிரச்சினைகளையும் கவனத்தில் எடுத்து சரியான தீர்வு ஒன்றை பெற்றுத்தர வேண்டிய அவசி யம் உள்ளது.

எனவே, எமது பொறுமைக்கும், அமைதிக்கும் விரைவில் தீர்வு கிட்டும் - என்றார் சேனாதிராஜா. (ஒ-சி)

## ராஜதந்திரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைவிரித்துவிட்டார். எனினும் இலங் கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்று நிச்சயம் வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தலைவர் நவிப் பிள்ளையும் மனித உரிமைகள் கண் காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை போன்றனவும் வலியுறுத்தி வரு கின்றன.

அதிகரித்து வரும் அழுத்தங்களை எதிர்கொண்டு இந்தப் பிரச்சினை ஐ.நா. பாதுகாப்புச் சபை அல்லது மனித உரி மைகள் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையாகச் முன்மொழியப்படா மல் இருப்பதற்கான ராஜதந்திரப் நட வடிக்கைகளை, ஒரு போருக்கு ஒப் பான ஏற்பாடுகளுடன் இலங்கை அரசு மேற் கொள்ள ஆரம்பித்துள்ளது.

இதன் முதல் கட்டமாக இன்று காலை கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதர் களை அழைத்து, அறிக்கை தொடர்பான இலங்கை அரசின் நிலைப்பாட்டை விளக்க உள்ளார் அமைச்சர் ஜி.எல். பீரிஸ்.

நிபுணர் குழுவின் அறிக்கை தொடர் பில் வெளிநாட்டுத் தூதர்களை அமைச் சர் பீரிஸ் சந்தித்து விளக்குவது இது இரண்டாவது தடவை. அறிக்கை ஐ.நா. பொதுச் செயலாளரிடம் கையளிக்கப் பட்டு, அது இலங்கை அரசுடன் பரி மாறிக் கொள்ளப்பட்ட மறுதினமே அமைச்சர் பீரிஸ் வெளிநாட்டுத் தூதர்க ளைச் சந்தித்து நிலைமையை விளக்கி இருந்தார்.

இன்றைய சந்திப்பு, அறிக்கை பகிரங் கப்படுத்தப்பட்ட நிலையில் இடம்பெற உள்ளது. அறிக்கை தொடர்பான அரசின் எதிர்ப்பை அமைச்சர் இந்தச் சந்திப்பில் ஆணித்தரமாகப் பதிவு செய்வார் என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளிநாடுகளில் கடமையாற்றும் இலங்கைத் தூதர்களும் கொழும்புக்கு அழைக்கப்பட்டு, அவரவர் நாடுகளின் அரசுகளை கொழும்புக்குச் சாதகமாகத் திருப்ப வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படியும் ஜனாதிபதி உத்தரவிட் டுள்ளார்.

இதற்கிடையே அறிக்கையால் ஏற் படக்கூடிய விளைவுகளில் இருந்து தப் பப்பதற்கான உதவிகளை வழங்குமாறு இந்தியாவிடமும் பொதுநலவாய நாடு கள் அமைப்பில் அங்கம் வகிக்கும் தனது நட்பு நாடுகளிடமும் அரசு கோரிக் கைகளை முன்வைத்துள்ளது.

அதேவேளை, அறிக்கை தொடர்பலான தனது உத்தியோக பூர்வ மான நிலைப் பாட்டை, பதிலை இலங்கை அரசு ஐ.நா வுக்கு அனுப்பி வைக்கவில்லை. எனி னும் போருக்குப் பின்னரான இலங்கை யின் களச்சூழலில் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக் கம் என்பன தொடர்பில் ஐ.நாவுடன் இணைந்து தொடர்ந்தும் பணியாற்றுவ தற்கு இலங்கை முன்வந்துள்ளது என்று பான் கீ - மூனின் பேச்சாளர் மார்ட்டின் நேஸகி தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களி டம் பேசிய அவர், அங்கு பொதுமக்கள் காட்டிவரும் எதிர்வினைகளை நாம் நன்றாக அவதானித்து வருகிறோம். இது ஓர் ஆரம்பக்கட்ட எதிர்வினை என்று தான் அவற்றைக் கருதுகின்றோம். அதே சமயம் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதையும் காது கொடுத்துக் கேட் கிறோம். அதேவேளை, நிபுணர் குழு வின் அறிக்கையைக் கவனமாகப் படித்து ஆராய்ந்ததன் பின்னர் அது தொடர்பில் தனது பிரதிபலிப்பை வெளியிடுவோம் என்றும் அரசு கூறி உள்ளது. அதற்காகக் காத்திருக்கிறோம் என்றார் நெஸகி. (ஒ

## நிபுணர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதியான பங்களிப்பை வழங்கியுள்ளது. அதன் காரணமாக அதில் பரிந்துரைக் கப்பட்ட விடயங்களை நாங்கள் வரவேற் கின்றோம்.

அதேநேரம் போர்க்குற்றங்களில் தொடர்புடையவர்கள் தப்பிக்கொள்ளாத வகையிலும், நடைபெற்றுள்ள போர்க் குற்றங்கள் வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்படும் வகையிலும் சர்வதேச ரீதி யான விசாரணையொன்றின் அவசியம் குறித்தும் வலியுறுத்துகின்றோம் என்றும் சூஸன் ரைஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

உதயன் தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களி லும் மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளது.

# கட்டாய தலைமைத்துவப் பயிற்சி நெறியிலிருந்து முஸ்லிம் மாணவிகளுக்கு விதிவிலக்கு வழங்கவேண்டும்

**மாற்றுக்கொள்கைக்கான பல்கலைக்கழக மாணவர் சங்கம் கோரிக்கை**

கொழும்பு, ஏப்.28

புதிதாகப் பல்கலைக்கழகங் களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட் டுள்ள முஸ்லிம் மாணவிகளுக்கு உயர்கல்வி அமைச்சு வடிவ மைத்துள்ள கட்டாய தலை மைத்துவப் பயிற்சி நெறியிலி ருந்து விதிவிலக்கு அளிக்கு மாறு மாற்றுக் கொள்கைக்கான பல்கலைக்கழக மாணவர் சங் கம் உயர்கல்வி அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

2010/2011ஆம் ஆண்டுக் குப் புதிதாகப் பல்கலைக்கழ கங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட மாணவர்களுக்கு மூன்று வாரகால கட்டாயத் தலைமைத் துவப் பயிற்சி நெறி ஒன்றை உயர்கல்வி அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் பயிற்சிநெறியை வர வேற்றுள்ள இந்த மாணவ சங் கத்தினர் இதில் முஸ்லிம் மாணவி களும் கலந்துகொள்வதை எதிர்த் துள்ளனர்.

இந்தப் பயிற்சி நெறி இரா ணுவ முகாம்களில் இடம்பெற விருப்பதானது முஸ்லிம் மாண விகள் இதில் கலந்துகொள்ள முடியாத நிலையைத் தோற்று வித்துள்ளது. ஏனெனில், முஸ் லிம் மாணவிகள் இதில் கலந்து கொள்வதில் பல்வேறு கலா சார ரீதியான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். மேலும் இந்தப் பயிற்சி நெறி படைமுகாம் களில் வதிவிடப் பயிற்சி நெறி யாக நடத்துவதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ளதால் முஸ்லிம் மாணவிகளுக்கு இது பொருத்த முடையதாக அமையாது. மேலும் இந்த பயிற்சி நெறியில் உடற்பயிற்சி, அணிநடை, பிற பயிற்சிகள் போன்ற அம்சங் கள் காணப்படுவதால் இவற் றில் முஸ்லிம் மாணவிகள் கலந்து கொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது.

மேலும் இந்தப் பயிற்சி களுக்கேற்ற ஆடை அணிவதி லும் மாணவிகள் பல்வேறு கலாசாரச் சிக்கல்களை எதிர் நோக்குகின்றனர். இதனால் இந்த மாணவிகளின் பெற்றோர் கள் தமது பெண் பிள்ளைகளை பல்கலைக்கழகக் கல்வியை கைவிடுமாறு வற்புறுத்தவும் முற்படுவர். இதன் காரணமாக முஸ்லிம் மாணவிகளின் தமது பல்கலைக்கழகக் கல்வியைக் கைவிடவேண்டிய நிலையே ஏற்படும்.

ஆகவே இத்தலைமைத்துவப் பயிற்சியிலிருந்து முஸ்லிம் மாணவிகளுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமெனவும் மாற் றுக்கொள்கைக்கான பல்கலைக் கழக மாணவர் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## சனியன்று நாட்டுக்கூத்து எழுத்தாக்கப் போட்டிகள்

தென்மராட்சி, ஏப்.28

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டியின் வலய மட்ட நாட்டுக்கூத்து மற்றும் எழுத்தாக்கப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் சாவகச் சேரி மகளிர் கல்லூரியில் இடம் பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (207)

## மாமரச் செய்கை: தொழில்நுட்ப பயிற்சி வகுப்பு

தென்மராட்சி, ஏப்.28

தென்மராட்சிப் பிரதேச மாமர செய்கையாளர்களுக்கான தொழில்நுட்பப் பயிற்சி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மீசாலை வீரசிங் கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

மாமரங்களை கத்தரித்தலும் சிறப்பாக பயிற்றுவித்தலும் தொடர்பான பயிற்சி வகுப்பு கள் நடத்தப்படவுள்ளன.

மாமரங்களின் உற்பத்தித் திறனையும் மாம்பழத்தின் தரத் தையும் அதிகரிப்பதன் மூலம் யாழ்ப்பாணத்து மாம்பழங் களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்தல் என்னும் தொனிப் பொருளுடன் இந்தப் பயிற்சி வகுப்பு நடத்தப்படவுள்ளது.

மாமர செய்கையாளர்கள் விவசாயிகள் பாடசாலைகளின் அதிபர்கள், விவசாய பாட ஆசி ரியர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளு மாறு சாவகச்சேரி விவசாய போதனாசிரியர் அறிவித்துள் ளார். (ஒ)

**எழுதுமட்டுவாழ் ஒட்டுவெளிப் பகுதியில்**

# நெல் வயல்களின் வரம்புகளையும் கூட விட்டு வைக்காத விஷமப் பேர்வழிகள்

தென்மராட்சி, ஏப்.28

எழுதுமட்டுவாழ் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனும திக்கப்படாத பகுதியில் உள்ள நெல் வயல்களின் வரம்புகள் இரவோடு இரவாக மாயமாக மறைந்து வருகின்றன.

எழுதுமட்டுவாழ் ஒட்டுவெளி வயல் பகுதியில் உள்ள வரம்பு களின் மணல் இரவுவேளை யில் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதாக வயல்களின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

ஒட்டுவெளி வயல் பகுதி வெடிபொருள்கள் அகற்றப் பட்டு உரிய சான்றிதழ் வழங் கப்பட்டதால் கடந்த வாரம் பெய்த மழையின் பின்னர் வயல் களை சீர் செய்வதற்காக வயல் களின் உரிமையாளர்கள் அங்கு சென்றனர்.

அப்போதே வயல் வரம்புகள் அனைத்தும் மண் அகழ்ந்தெடுக் கப்பட்டு சம தரையாக இருப்ப தைக் கண்டு அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

வயல் உரிமையாளர்கள் இன்னும் மீளக் குடியமராததால் அண்மையில் ஒட்டுவெளி, கரம் பகம் பகுதிகளில் மீளக் குடிய மர்ந்த சிலரே இந்த அடாவடித் தனத்தில் ஈடுபட்டு வருகின்ற னர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, எழுதுமட்டு வாழ் பிரதேச மக்களால் கைவி டப்பட்டு வந்த கால்நடைகளைப் பிடித்து விற்பனைசெய்து வருகின் றனர் என்றும் அவர்கள் முறைப் பாடு தெரிவித்தனர். (ஒ-207)

## யாழ். பல்கலையில் இருநாள் நாடக விழா

யாழ்.பல்கலைக்கழக வரலாற் றுத்துறையின் இவ்வாண்டுக்கான நாடகவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை, மறுநாள் ஞாயிற் றுக் கிழமை ஆகிய இரு தினங் களிலும் நடைபெறவுள்ளது.

கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ள இந்த நாடக விழாவில் அல்வாய் மனோகரா நாடக சபா, கலாநிதி த.கலாமணி யின் அண்ணாவியத்தில் சத்திய வான் சாவித்திரி என்ற புராண இதிகாச இசை நாடகமும், யாழ்ப் பாணம் நாட்டார் வழக்கியற் கழ கம் வழங்கும் பூதத்தம்பி என்கின்ற வரலாற்று இசை நாடகமும் ஆற் றுகை செய்யப்படவுள்ளன. இந்த இரு தினங்களும் பிற்பகல் 2.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம் பமாகும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. (ஒ-237)

## மிருசுவில் எண்மர் படுகொலை வழக்கு; இன்று சம்பவ இடத்தில் விசாரணை

**மேல் நீதிமன்ற நீதிபதிகளும் நேரில் வருகை**

யாழ்ப்பாணம், ஏப்.28

மிருசுவில் பகுதியில் 2002 ஆம் ஆண்டு எண்மர் படு கொலை செய்யப்பட்டு சடலங் கள் புதைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக நேரில் விசாரணை கள் இன்று காலை 9 மணிக்கு சம்பவ இடத்தில் இடம்பெற வுள்ளன.

இந்த வழக்கை விசாரணை செய்துவரும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகளான திபாலி விஜயசுந்தர, டபிள்யூ.டி.எம். பி.பி.வராவெல, சுனில் ராஜ பக்ஷ ஆகியோர் இன்று காலை பருத்தித்துறை நீதிமன்றத்துக் குச் சமுகமளித்து அங்கிருந்து சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகள் நடத்துவர்.

விசாரணைகளை முடித்துக் கொண்டு அவர்கள் உடன் கொழும்பு திரும்புவர்.

நீதிபதிகளின் பாதுகாப்புக் கருதி சம்பவ இடத்தில் தேவை யான பந்தோபஸ்து ஏற்பாடு களை சாவகச்சேரி நீதிவான் மா.கணேசராஜா நேற்று முன் தினம் நேரில் சென்று கவனித் துள்ளார்.

இந்த வழக்கில் குற்றஞ்சாட் டப்பட்டுள்ள ஐந்து இராணு வத்தினரும் இன்று சம்பவ இடத் துக்கு விசாரணைக்காக அழைத்து வரப்படுவர் என்று தெரிவிக் கப்பட்டது. (ஒ-ஐ)

## மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு சட்ட நடைமுறை தொடர்பான கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.28

குடாக் கடலினுள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவச் சங் கப் பிரதிநிதிகளுக்கு சட்ட மறு சீரமைப்பு மற்றும் ஒழுங்குபடுத் தல் சம்பந்தமான கூட்டமொன்று யாழ்.மாவட்ட நீரியல் வளத் திணைக்களத்தில் இன்று வியா ழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சாவகச் சேரி, நல்லூர், யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச சபை களுக்குட்பட்ட மீனவர் சங்கப் பிரதி நிதிகள் கலந்துகொள்ள வுள்ளன.

குடாக்கடலினுள் சிறகு வலை, இறால்கூடு, இருப்பு வலை உள்ளிட்ட தொழில் களைச் செய்பவர்களுக்கே இந் தக் கூட்டம் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்தை யாழ். மாவட்ட நீரியல் வளத் திணைக் களப் பணிப்பாளர் மற்றும் சமா சத் தலைவர் உள்ளிட்ட பலர் ஏற்பாடு செய்துள்ளனர்.

குடாக் கடலினுள் மீன்பிடி யில் ஈடுபடுபவர்களுக்கு ஏற் கனவே நடைமுறைப்படுத்தப் பட்ட சட்டங்களை மறுசீரமைக் கவும் ஒழுங்குபடுத்தவும் இதன் மூலம் மீனவர்களின் கடற் றொழில் உபகரணங்களைப் பாதுகாக்கவும் முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (த-4)

# நிகழ்வுகள்

### ஆன்மிகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ். சின்மயா மிஷன் நிறுவனத்தின் ஏற்பாட் டில் இடம்பெற்று வரும் ஆன்மிகச் சொற்பொழிவு நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை உரும்பிராய், கொக்குவில், திருநெல்வேலி ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளன.

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் காலை 8 மணிக்கு ''உன்னால் முடியும் நம்பு'' என்னும் தலைப் பிலும், திருநெல்வேலி, பலாலி ஆசிரியர் கலா சாலையில் முற்பகல் 10.30 மணிக்கு 'மனக்கட்டுப் பாடு' என்னும் தலைப்பிலும், கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில் பிற்பகல் 4 மணிக்கு மகளிருக் கான பிரசங்கம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள் ளன.

இந்த நிறுவனத்தைச் சேர்ந்த பிரம்மசாரி ஜாக் கிரத் சைதன்ய சுவாமிகள் சொற்பொழிவுகளை நிகழ்த்தவுள்ளார். (ற-313)

### ஜெயந்தி தின விழா

யாழ்ப்பாணம், ஏப்.28

கடவுள் சுவாமியின் 106 ஆவது ஜெயந்தி தின விழா இன்று வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் விசேட பூசை வழிபாடுகளும், பஜனை, பிரார்த்தனை, ஆத்மிகப் பேருரைகள், மகேஸ்வர பூசை போன்றன இடம்பெறும். (ற)

### ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தென்மராட்சி, ஏப்.28

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 ஆகிய வகுப்புகளில் சைவசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்தி செயலமர்வுகள் நாளை வெள்ளிக்கிழமையும் நாளை மறுதினம் சனிக்கிழமையும் வரணி ஆசிரிய மூலவள மத்திய நிலையத்தில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித் துள்ளார். (ஒ-207)

# ஐ.நா.குழுவின் பரிந்துரைக்கு கனேடிய லிபரல் கட்சி ஆதரவு

ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு ஆதரவளிக்கப்போவதாக கனேடிய லிபரல் கட்சித் தலைவர் மைக்கல் இக்னேட்டிவ் தெரிவித்துள்ளார்.

கனடாவின் வினிபெக் நகரில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த போது இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கை குறித்து கருத்து வெளியிடுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகள் சம்பந்தமாக ஐ.நா நிபுணர்குழுவின் அறிக்கையினை கனடா லிபரல் கட்சி ஏற்றுக் கொண்டுள்ளதோடு அதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு ஆதரவளிக்கவும் முன்வந்துள்ளது.

ஐ.நா. நிபுணர்குழு சுதந்திரமான முறையில் மேற்கொண்ட குற்றச் செயல்கள் சம்பந்தமான விசாரணையின் போது பாரதூரமான தகவல்கள் தெரியவந்துள்ளன.

சுதந்திரமான அக்குழுவின் கண்டுபிடிப்புக்களுக்கும் பரிந்துரைகளுக்கும் கனடா ஆதரவளிக்க வேண்டும். லிபரல் அரசாங்கம் இக்குற்றச் சாட்டுக்களை இலங்கை உட்பட சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளுமாறு ஊக்குவிக்கும்.

ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் சகல நாடுகளும் அப்புகார் அறிக்கையினைப் பெற்று அதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளின் முன்னேற்றத்துக்கு திறந்த மனதுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று லிபரல் கட்சித் தலைவர் மைக்கல் இக்னேட்டிவ் மேலும் தெரிவித்துள்ளார்

(தமிழ்வின்)(த-10)

## இலங்கை விடயத்தில் ஐ.நா சபையின் கடுமையான நடவடிக்கை அவசியம்

இலங்கை தொடர்பான போர்க்குற்ற அறிக்கையின் அடிப்படையில் ஐ.நா கண்டிப்பான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று அனைத்துலக மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அனைத்துலக மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிரிவுக் கானபணிப்பாளர் சாம் சரிபி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை மறுக்க, இலங்கை அரசு வெள்ளையடிக்க மேற்கொள்ளும் முயற்சிகளை ஐ.நாவின் அறிக்கை போர் முடிந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளது.

போரின்போது அரசாங்கத் தரப்பினராலும் விடுதலைப் புலிகளினாலும் நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள் பற்றிய சாட்சியங்களைச் சேகரிக்க விசாரணைக்குழு ஒன்றை அமைப்பதை ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன் உறுதிப்படுத்த வேண்டும் என்று சாம் சரிபி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யுத்த வலயத்தில் இருந்து தப்பிய அவர்களில் பெரும்பாலானவர்கள் இராணுவத் தடுப்பு முகாம்களுக்குள் பரிதாபகரமான நிலைகளில் தடுத்து வைக்கப்பட்டனர். இரண்டு வருடங்கள் கடந்தநிலையிலும் இது வரை பலர் குற்றச்சாட்டுகள் ஏதும் சுமத்தப்படாமல் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான நீதியை நாம் எப்படி மறுக்க முடியும்? என்று அந்த அறிக்கையில் சாம் சரிபி வினவியுள்ளார்.

(தமிழ் சி.என்.என்) (த-10)

# இணையச் செய்திகள்

## போலி மீனவர்கள் கஞ்சாவுடன் கைது

மீனவர்கள் என்ற போர்வையில் இந்தியாவிலிருந்து கஞ்சா கடத்திவந்த குழுவொன்றை இலங்கைக் கடற்படையினர் பேசாலை கடற்பிரதேசத்தில் வைத்து பிடித்துள்ளனர்.

இக்குழுவினர் அப்பகுதியில் மீன்பிடிப்பதற்கு அனுமதி பெற்றுக்கொண்டு கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்ததாக சந்தேகிக்கப்படுகிறது. இக்குழுவினர் 15 கிலோகிராம் கஞ்சாவுடன் கிளிநொச்சி பொலிஸால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# தனித் தமிழீழமே தி.மு.கவின் குறிக்கோள் புதுக்கதை விடுகிறார் முதல்வர் கருணாநிதி

தனித் தமிழீழமே தி.மு.கவின் குறிக்கோள் எனத் தமிழக முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார். சென்னை அண்ணா அறிவாலயம் முரசொலி மாறன் வளாகத்தில் நேற்று காலை இடம்பெற்ற தி.மு.க உயர்நிலை செயல்திட்ட குழுக் கூட்டத்தின் பின்னர் செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றுகையில் கருணாநிதி இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் யுத்தக் குற்றத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் மனித உரிமை மீறலுக்குக் காரணமானோர் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இதனால் இலங்கை அரசை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த இந்திய மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும் தமிழக முதல்வர் மு.கருணாநிதி கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கை யுத்தக் குற்றங்களுக்காக ஐ.நா. அமைப்பு நடத்திய விசாரணையில் இலங்கை கடற்படையினர் ஈழத்தமிழர்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தியது உறுதி செய்யப்பட்டுள்ளது. மனித உரிமை மீறல்கள் நடைபெற்று இருப்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாக ஐ.நா. குழு தெரிவித்துள்ளது.

இறுதி கட்டப்போரில் 40 ஆயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதும் குறிப்பிடப்பட்டுள்ளது போன்ற விடயங்கள் தி.மு.க உயர்நிலை செயல்திட்ட குழுக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளன.

போர் குற்றங்கள் குறித்து ஐ.நா. குழு பரிந்துரைத்தவாறு சர்வதேச விசாரணை ஆணையத்தை அமைத்து விசாரணை நடத்த வேண்டும்.

போர் குற்றங்களுக்கு காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும் என மத்திய அரசை தி.மு.க உயர்நிலை செயல்திட்ட குழு வலியுறுத்துகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தமிழ்வின்) (த-10)

## முதலமைச்சர்கள் மாநாடு இன்று

மாகாண முதலமைச்சர்களின் மாநாடு இன்றும் நாளையும் களுத்துறையில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

28 ஆவது முறையாக இடம் பெறவுள்ள இந்த மாநாட்டில் உள்ளூராட்சி சபைகளில் நிலவும் குறைபாடுகள் குறித்து ஆராயப்படவுள்ளதாக வடமத்திய மாகாண முதலமைச்சர் பேர்ட்டி பிரேமலால் திஸாநாயக குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே 13 ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜேலால் த சில்வா குறிப்பிட்டுள்ளார். (நியூஸ் எல்.கே)

## பொன்சேகாவின் சாட்சியத்துக்காகக் காத்திருக்கிறது அரசு

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கில் சரத் பொன்சேகா எவ்வாறான சாட்சியத்தை அளிக்கப் போகின்றார் என்பதை அறிந்து கொள்ள அரசு தீவிர ஆர்வம் காட்டுகின்றது. வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பான வழக்கு எதிர்வரும் மே மாதம் 04ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அதன் போது ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கைக்குச் சாதகமான வகையிலான கருத்துக்களை சரத் பொன்சேகாவின் சாட்சியத்தினூடாக வெளிப்படுத்தி விடாமல் தடுத்துக் கொள்வதில் அரசு தீவிர முனைப் புக் காட்டுகின்றது.

அது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நேரடியாகக் கவனம் செலுத்தியிருப்பதுடன் புலனாய்வுப் பிரிவினரையும் களத்தில் இறக்கியுள்ளார்.

அதுமட்டுமன்றி சரத் பொன்சேகா மற்றும் அனோமா பொன்சேகா தரப்புக்கு நெருக்கமான எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் வலைக்குள் போட்டுக்கொண்டுள்ள ஜனாதிபதி, வழக்கு விசாரணையின்போது சரத் பொன்சேகா எவ்வகையான கருத்துக்களை வெளியிடவுள்ளார் என்பது குறித்து அறிந்து கொள்வதில் கடும் ஆர்வம் காட்டுகின்றார். (தமிழ்வின்) (த-10)

## சித்திரவதைகளின் பின்னர் பானு கொல்லப்பட்டார்

ஊடகங்களில் நேற்று வெளியான போர்க்குற்ற படங்களில் விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதிகளில் ஒருவரான கேணல் பானு அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு சித்திரவதைப் படுத்தப்பட்ட பின்னர் கொல்லப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஐ.நா.சபை நிபுணர் குழுவின் அறிக்கை வெளியான கையோடு இலங்கை அரசின் போர்க்குற்றங்கள் தொடர்பிலான உண்மைக் காட்சிகள் வெளியிடப்படும் என ஊடகங்கள் தெரிவித்த நிலையில் கேணல் பானுவின் உடலும் புதிதாக வெளியிடப்பட்டுள்ளது. இதனை பல்வேறு இணையத்தளங்களும் வெளியிட்டுள்ளன. (தமிழ்வின்) (த-10)

# அரசின் போர்க் குற்றங்கள் விசாரிக்கப்பட வேண்டும்

### நவநீதம்பிள்ளை கூறுகிறார்

இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதிநாள்களில் இலங்கை அரச படையினரும் விடுதலைப் புலிகளும் போர்க்குற்றங்களிலும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களிலும் ஈடுபட்டார்கள் என நம்பத்தகு ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றிருப்பதாக ஐ.நாவினது வல்லுநர்கள் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் நிலையில், குறிப்பிட்ட இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என ஐ.நாவினது மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை கோரியிருக்கிறார்.

ஐ.நா செயலாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட மூவர் அடங்கிய வல்லுநர்கள் குழுவினது அறிக்கையில் குழப்பம் தருகின்ற புதிய தகவல்கள் உள்ளடங்கியிருக்கின்றது என்றும் இந்தத் தகவல்கள் அனைத்துலக சமூகத்தின் மனச்சாட்சியை உலுக்குவதோடு தொடர் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு வழிசெய்யும் என்றும் ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை கூறுகிறார்.

வல்லுநர்கள் குழுவின் அறிக்கையேகூறுவதைப்போல, அனைத்துலக மனிதாபிமான மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டு வதை விசாரிப்பது ஒரு தெரிவோ அன்றி ஒரு கொள்கையோ அல்ல, மாறாக உள் நாட்டு மற்றும் அனைத்துலக சட்டங்களின் அடிப்படையில் இது வொரு கடமை'' என நவநீதம்பிள்ளை கூறுகிறார்.

(தமிழ் சி.என்.என்) (த-10)

## கணினி மோசடிகள் குறித்து எச்சரிக்கை

பிரபல நிறுவனங்களின் முகவர்கள் பிரதிநிதிகள் எனக்கூறிக்கொண்டு கணினி மோசடிகளில் ஈடுபடும் குழுக்கள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு இணையப் பாதுகாப்புக்கான தேசிய நிலையத்தின் அவசரகாலப் பதிலளிப்புக் குழு பொதுமக்களை எச்சரித்துள்ளது.

குழுவின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் ரோஹன பள்ளியகுரு இது தொடர்பாக தெரிவித்கையில், பாவனையாளர்களிடம் மேற்படி மோசடியாளர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, பிரபல வர்த்தகக் குறியீட்டு நாமங்களைக் கொண்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் என தம்மை அறிமுகப்படுத்தி விட்டு, அவர்களின் கணினிகளில் பாதிப்பு ஏற்படும் அச்சுறுதல் இருப்பதாக நம்ப வைக்கின்றனர் எனத் தெரிவித்தார். அதன் பின் அக்குழுவினர் பாவனையாளர்களை குறித்த இணையத் தளமொன்றுக்கு செல்ல வைக்கின்றனர். அதன் மூலம் பாவனையாளர்களின் கணினிக்குள் ஊடுருவ மேற்படி குழுவினருக்கு வசதியேற்படும். அதன்பின் கணினிகளை திருத்துவதற்காகப் பெருந்தொகையான பணத்தை அக்குழுவினர் அறவிடுவதாக ரோஹன பள்ளியகுரு தெரிவித்தார். பொது மக்கள் விழிப்பாக இருந்து இவ்வாறான மோசடிகள் குறித்து அறிந்தால் குழுவுக்கு தகவல்கள் தருமாறும் அவர் கூறினார்.

(தமிழ்மிரர்) (த-10)

# "ரைம்ஸ்" பட்டியலில் மஹிந்தவின் பெயர் அம்பலத்துக்கு வந்தது தில்லுமுல்லு !

உலகின் செல்வாக்குமிக்க 100 பேரை தெரிவு செய்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் ரைம்ஸ் பத்திரிகை இணையத்தள வாக்கெடுப்பு நடத்துவது குறிப்பிடத்தக்கது.

மேன் ஆஃப் தி இயர் ஆக தெரிவு செய்யப்படுபவர்களின் படங்கள் ரைம்ஸ் பத்திரிகையின் அட்டையில் பிரசுரிக்கப்படும்.

அமெரிக்காவில் இருந்து வெளிவரும் இந்த முன்னணிப் பத்திரிகையில் தமது படம் வெளியாவதை புகழாக நினைப்பர். ரைம்ஸ் சஞ்சிகை நடத்திய இணைய வாக்கெடுப்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இடம்பெற்றுள்ளதாகவும், 2 இலட்சத்து 3 ஆயிரத்து 117 வாக்குகளைப் பெற்று 4ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் ஆர்ப்பாட்டமாக செய்திகளை வெளியிட்டன.

ஆனால் ஏப்ரல் 21 ஆம் திகதி இணையத்தள வாக்கெடுப்பு முடிவுற்றுள்ளதாகவும் அறிவித்து, அதற்கு அடுத்தநாள் செல்வாக்குமிக்க 100 பேர் பட்டியலில் இருந்து மகிந்த ராஜபக்ஸ நீக்கப்பட்டுள்ளதாகவும் ரைம்ஸ் சஞ்சிகை உத்தியோகபூர்வமாக அறிவித்தது. எனினும் இதற்கான காரணத்தை ரைம்ஸ் சஞ்சிகை அறிவிக்கவில்லை.

செல்வாக்குமிக்க நபர்களின் பட்டியலில் போர்க்குற்றவாளியான மகிந்த ராஜபக்ஷவின் பெயர் இடம்பெற்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ரைம்ஸ் பத்திரிகைக்கு பல்வேறு கண்டனங்கள் குவிந்தன.

இணையத்தள வாக்கெடுப்பில் மகிந்த ராஜபக்ஷ எவ்வாறு முன்னேறினார் என்பதில் பலரும் சந்தேகம் வெளியிட்டனர். இதனால் ரைம்ஸ் ஆசிரியர் குழுவில் உள்ளவர்கள் தமது தொழில்நுட்பக் குழுவிடம் இவ்விடயம் குறித்து ஆராயும்படி பணிப்புரை விடுத்தது.

அந்தக் குழு மேற்கொண்ட ஆய்வில் தான், இலங்கை இராணுவத்தின் தொழில்நுட்பப் பிரிவைக் கையில் வைத்துக் கொண்டு ராஜபக்ஷ நடத்திய தில்லுமுல்லு அம்பலமாகி வெளிச்சமாகியது.

ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அவருக்கு ஆதரவாகக் கள்ள வாக்குப் போட்டுள்ளனர்.

இலங்கையில் இராணுவத்தின் தொழில்நுட்பத் துறையும், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களும் இந்தப் பின்னணியில் இருந்து செயற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. ராஜபக்ஷவுக்கு ஆதரவாக விழுந்த வாக்குகள் அவ்வளவும் கொத்துக் கொத்தாக விழுந்து இருப்பதைக் கண்டுபிடித்த ரைம்ஸ் தொழில்நுட்பக் குழு இது திட்டமிட்ட சதி என்று ஆதாரபூர்வமாக தேர்வுக் குழுவிடம் தெரிவித்தது. இதனைத் தொடர்ந்தே ராஜபக்ஷவின் பெயர் நீக்கப்பட்டுள்ளது.



நிபுணர் குழுவின் அறிக்கை குறித்த அரசின் நிலைப்பாடு தொடர்பில் அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதில் அமைச்சர்களான சரத் அமுனுகம, நிமல் சிறிபால டி சில்வா, டலஸ் அலகப்பெரும மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் கலந்துகொண்டிருப்பதை படங்களில் காணலாம்

# நிபுணர் குழு விடயத்தில் மட்டும் அல்ல சீருடை விடயத்திலும் கவனம் செலுத்துக

## ஐ.தே.கட்சி எம்.பி. கோருகிறார்

கொழும்பு, ஏப்.28

ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ-மூனின் நிபுணர் குழுவின் அறிக்கையில் கவனம் செலுத்துவதை விட அரசு பாடசாலைப் பிள்ளைகளின் சீருடை விடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண நேற்றுத் தெரிவித்தார்.

பாடசாலை சீருடை தரக்குறைவு தொடர்பாக நாடாளுமன்றில் நேற்று ஜே.வி.பியின் எம்.பி. அஜித் குமார கொண்டு வந்த ஒத்திவைப்பு பிரேரணை வேளையை வழிமொழிந்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தரக்குறைவான பாடசாலைச் சீருடை ஒன்றை சபைக்குள் நான் ஒரு வேட்டியாகக் கட்டிக்கொண்டு உள்ளே வந்தேன். அதன் பின்னர் சபையில் எடுத்துக் காட்டிவிட்டுத் திரும்பியபோது பொலிஸார் என்னிடம் எப்படி இந்தச் சீருடையை உள்ளே கொண்டு சென்றீர்கள் என வினவினர். தரம் குறைந்த பாடசாலை சீருடையை சபைக்குள் கொண்டு வந்ததை விசாரிக்க கவனம் செலுத்தும் அரசு, ஏன் தரம் குறைந்த சீருடை தொடர்பாகக் கவனம் செலுத்துவதில்லை?

இம்முறை பிக்குமார்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் அரைக் காற்சட்டைக்கான அளவான துணியே வழங்கப்பட்டுள்ளது. இவற்றுக்குப் பொறுப்பானவர்கள் யார்?

பான் கீ- மூனின் நிபுணர் குழுவின் அறிக்கையைப் போலவே இந்த சீருடைப் பிரச்சினையும் பாரியளவிலான பிரச்சினையாகும். எனவே, பான் கீ -மூனின் நிபுணர் குழுவின் அறிக்கையில் கவனம் செலுத்துவதை விடவும் பாடசாலை சீருடைப் பிரச்சினை தொடர்பாகவும் அரசு கவனம் செலுத்தவேண்டும்.

ஒருவேளை இந்தச் சீருடைப் பிரச்சினையை வெளிநாட்டு சதி என்றும் கூறுவதற்கு அரசு எத்தனிக்கலாம். இருளுக்கு சாபமளிக்காது, விளக்கேற்றுவதற்கு அரசு முனையவேண்டும் - என்றார்.

# நிபுணர் குழு அறிக்கை குறித்து இந்தியா இலங்கையுடன் பேசும்

## மிகக் கவனமாகக் கையாள வேண்டிய விடயம் என்கிறது

புதுடில்லி, ஏப்.28

யுத்தக் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் இலங்கையில் இடம்பெற்றன எனத் தெரிவிக்கும் ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை குறித்தும் அதிலுள்ள விடயங்கள் குறித்தும் இலங்கையுடன் பேச உள்ளதாக இந்திய வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியா இந்த விடயத்தை மிகக் கவனமாகக் கையாள வேண்டியுள்ளது. இடம்பெயர்ந்த தமிழர்களின் மீள்குடியமர்த்தல், புனர்வாழ்வு நடவடிக்கைகள் பூர்த்தியாகாமை, இலங்கைக்கு சீனா வழங்கிவரும் உறுதியான ஆதரவு ஆகியவற்றின் பின்னணியில் இந்தியா இந்தப் பிரச்சினையை கவனமாகக் கையாள வேண்டியுள்ளது.

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையில், இலங்கையில் இறுதிக்கட்ட யுத்தத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டமை யுத்தக் குற்றம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து விசாரணை செய்ய சர்வதேச விசாரணைக் குழு அமைக்கப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையில் உலக நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காக இலங்கை ராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இலங்கை இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ரஷ்யா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் உதவியை நாடலாம்.

எனவே, இது குறித்து கவனமாக செயற்பட வேண்டி உள்ளதாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ-சி)

**விற்பனையாகின்றது**

வட மாகாண பட்டதாரி
உத்தியோகத்தர் தெரிவுப் பரீட்சை.
**பொது அறிவு**
✱ மிக அண்மைய இலங்கை சர்வதேச நடைமுறை விடயங்கள்
✱ எதிர்பார்க்கை வினா-விடை
By-வே. தபேந்திரன் M.A
விலை: ரூபா 60 மட்டும்
சொற்ப பிரதிகளே கையிருப்பில்
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ். பஸ்நிலையம்.

**தவறிவிட்டது**

அராலியிலிருந்து திருநெல்வேலி வரும் வழியில் Apple I Phone-4 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0779239334 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**முகவர் தேவை**

Elephant House ஐஸ்கிறீம் நடமாடும் சேவையை நடத்துகின்ற முகவர் ஒருவர் அதனை புதிய முகவர் ஒருவருக்கு விற்பனை செய்ய விரும்புகின்றார்.
★ முகவராக விரும்புவோர் தொடர்புகொள்ளவும்- 0773502276

**ஆர்க் என்ரப்பிறைசஸ்**

1வருட உத்தரவாதத்துடன்
சகல விதமான நீர் இறைக்கும்
இயந்திரங்கள்,
மோட்டார்கள்
நம்ப முடியாத விலையில்.
150, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.




## கண்ணீர் அஞ்சலி

### அமரர் குமாரசுவாமி சாந்தலிங்கம்

(தலைவர் நயினாதீவு ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் கோயில்)

நயினாதீவு ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அறங்காவலர் சபைத் தலைவர் குமாரசுவாமி சாந்தலிங்கம் 27.04.2011 நேற்று புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைகின்றோம். அன்னாரது மறைவு நயினாதீவு ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் ஆலய எதிர்கால.வளர்ச்சிக்கும், சைவப் பாரம்பரியத்துக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும். அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்பாளின் பாதாரவிந்தங்களில் நிலைத்து சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

"அறங்காவலர் சபை"
ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் கோயில், நயினாதீவு.

## மரண அறிவித்தல்

### பொன்னையா புட்பவனநாதர்

(பிரபல சிற்ப சோதிடர் புஸ்பர்மாமா)



நாயன்மார்கட்டை சேர்ந்த பொ.புட்பவனநாதர் நேற்று (27.04.2011) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மகேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவர் ஆவார். அன்னாரின் சமாதி நிகழ்வுகள் இன்று (28.04.2011) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ. கணேஷநாதன், காந்திமதி(U.K),
ஸ்ரீகாந்தன்(யா.மா.ச),
ஜெனனி(U.K), ஞானவழகன்.

கனகரத்தினம் வீதி,
நாயன்மார்கட்டு சந்தி.

(3582)

*வெளிவந்துவிட்டது*

**"பழமொழிப் பொக்கிஷம்"**

மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் 1000 பழ மொழிகளும் அதற்கான விளக்கங்களும் உள்ளடங்கியது. தரம் 04 முதல் 11 வரையான மாணவர்களுக்கு ஏற்றது.
வெளியீடு- அன்னை புத்தகசாலை
ஆக்கம்- எஸ்.எம்.ஜீவா St.Thomas School, Colombo -03
அநேக ஆசிரியர்களினதும், மாணவர்களினதும், பெற்றோர்களினதும் வேண்டுகோளுக்கு இணங்க இந்த நூல் அன்னை புத்தகசாலையின் முதலாவது வெளியீடாக வெளிவந்துள்ளது.
அன்னை புத்தகசாலை, யாழ்ப்பாணம். 0212229881

**தமிழைப்போல ஆங்கிலம் பேச விரும்புகிறீர்களா?**

ஆசிரியர்கள், அலுவலர்கள், வங்கியாளர், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கான
MyWay இன் சனி, ஞாயிறு
3 மாத ஆங்கில பயிற்சிநெறி
தமிழைப்போன்று சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கான டிப்ளோமா பாடநெறி
புதிய பிரிவு ஆரம்பம் : 30.04.2011 சனிக்கிழமை
பயிற்சிக்கான மொத்த சலுகைக்கட்டணம் : 3000/-
பிரிவுகள் : காலை 8-9, 9-10, 10-11, 11-12 மாலை 2-3, 3-4, 4-5, 5-6
ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்
MyWay 182, Stanley Road, Jaffna
Opposite to Ceylinco Insurance
077 33 63 456, 021 2229505

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.